பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்

New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-111

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)

| மலர் : 16<br>Vol : 16 | இதழ் : 05<br>Issue : 05 | www.ncbhpublisher.in | ஆகஸ்ட் 2024<br>August 2024 | விலை<br>Price ₹ 45/- | ஆண்டு சந்தா<br>Annual Subscription ₹ 540/- |
|---|---|---|---|---|---|

## ஈரோடு புத்தகத் திருவிழா 2024

## என்னைப் பேச்சாளராக்கியது ஈரோடு புத்தகத் திருவிழாதான்

சிவகுமார்

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் வெளியீடாக ஜெயசீல ஸ்டீபன் நூல்கள்




₹ 320/-




₹ 190/-




₹ 270/-




₹ 270/-




₹ 125/-




₹ 150/-

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in

### கிளைகள்

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 -234990.

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2055*

*மலர் - 16 இதழ் - 05 - ஆகஸ்ட் 2024*



ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.கு.ராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

---

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


**1** சமஸ்கிருதப் புலமைக்கு முதலிடமா?
ஆசிரியர் குழு........04

**2** என்னைப் பேச்சாளராக்கியது ஈரோடு புத்தகத் திருவிழாதான்
சிவகுமார்........06

**3** அறிவியலை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் என்ன?
டாக்டர் சு.நரேந்திரன்........14

**4** மொழிபெயர்ப்புவழி பண்பாட்டுப் பெயர்ப்பு
நா. சந்திரசேகரன்........19

**5** வாசிப்புப் புரட்சி
வெ.இறையன்பு ஐ.ஏ.எஸ்.,........26

**6** ஓர் இதழியலாளரின் சமூகச் செயல்பாடு
வீ. அரசு........30

**7** பொதுவெளிக்கு நகரும் பெண்வெளி
து.கலைச்செல்வன்........35

**8** காலனியத்தின் துவக்கம் திருநெல்வேலி படையெடுப்பு, வருவாய் வசூலிப்பு மற்றும் நிதி முறைகேடுகள், 1755
கி. மகாராஜ பாரதி........39

**9** இது போன்ற பதிப்புகள் தொடர்ந்து வெளிவர வேண்டும்
அ.கா.ஈஸ்வரன்........47

**10** கவி கா.மு. ஷெரீபின் இறையருள் வேட்டல்
முனைவர் உ. அலிபாவா & ப. முத்துபாண்டியன்........53

**11** தனுஷ்கோடி ராமசாமி சிறுகதைகளில் பெண்களின் நிலை
கா.சத்தியா & முனைவர் சு.சந்திரா........57

**12** சூழலியலில் மாற்றங்களைக் கொண்டுவரும் நூல்
முனைவர் ஜ. பபிதா........63

**13** தனித்தன்மை வாய்ந்த அழகர் கோயில்
சி.ஆர்.ரவீந்திரன்........65

**14** "Co- existence with Cyborgs in Tobias S Buckell's "Scar Tissue"
Ms. Jestila Mathew & Dr. S. J. Kala........69

# சமஸ்கிருதப் புலமைக்கு முதலிடமா...?

தமிழ்நாடு அரசுப்பணி தேர்வாணையம் 26-7-2024 அன்று ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத்தேர்வு அல்லாத பணிகள்) என்று ஒரு அறிவிக்கை (9-24) அனுப்பியுள்ளது. இதில் உதவி காப்பாட்சியர் (தொல்லியல்) எனும் பதவிக்கு கோரப்பட்டுள்ள தகுதிகள் என இவ்வாறு வரையறை செய்யப்பட்டுள்ளது.

1. சமஸ்கிருத பட்டப்படிப்புடன் திராவிட மொழிகள் மற்றும் பண்டைய இந்திய வரலாறு பற்றிய அறிவு கட்டாயம் பெற்றிருக்கவேண்டும். (அல்லது) தொல்லியலில் பட்டப்படிப்பு (சமஸ்கிருத பணி அறிவுடன் சமஸ்கிருதத்தில் உயர் தகுதி) மற்றும் திராவிட மொழிகள் மற்றும் எழுத்துக்கள் மற்றும் பண்டைய இந்திய வரலாறு ஆகியவற்றில் அறிவு.
2. மேற்படி கல்வித்தகுதியுடன் கூடிய தேர்வர்கள் இல்லாதபட்சத்தில் வரலாறு பட்டத்துடன் சமஸ்கிருத பணி அறிவு பெற்ற தேர்வர்கள் கருதப்படுவர்.
3. சமஸ்கிருதத்தில் உயர் தகுதி பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

இன்றைய நிலையில் சமஸ்கிருதம் படித்தவர்களுக்கு முன்னுரிமை அளித்து தமிழக அரசுப்பணிக்கு ஆட்களைத் தேர்வு செய்ய அறிவிப்பு வெளியிட்டிருப்பது தமிழறிஞர்களுக்கும் தமிழார்வலர்களுக்கும் அதிர்ச்சி அளிப்பதாய் இருக்கிறது.

தொல்லியல் துறை சார்பில் நிகழ்த்தப்படும் கல்வெட்டு ஆய்வுகளில் பெரும்பகுதி கிரந்த எழுத்துகள்தான் பயன்பாட்டில் உள்ளன. தொல்லியல் அறிவும், ஆழ்ந்த தமிழ்மொழிப்புலமையும் உள்ளவர்கள் கிரந்த எழுத்துகளை எளிதாகப் புரிந்துகொள்ளமுடியும் என்பதே உண்மை நிலைமை. ஏற்கெனவே தொல்லியல் துறையில் உயர்பதவிகளில் இருப்பவர்கள் பலரும் சமஸ்கிருதம் படித்து பணியில் சேர்ந்ததாகக் கூறுவதற்கு இடமில்லை என்பதையும் இவ்விடம் இணைத்துப் பார்க்கவேண்டும்.

பல்லவர், இடைக்காலச் சோழர்கள், விஜயநகரப் பேரரசுக் காலத்தியக் கல்வெட்டுகளில் சமஸ்கிருத வரிவடிவத்திலும் தமிழ்க்கிரந்த எழுத்துருக்களும் கொண்ட கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. நமது நோக்கம் வரலாற்று வரைவுக்குப் பெரிதும் துணை நிற்கும் கல்வெட்டுகளை நூல் வடிவமாக்குவது தான். இவ்வகையில் தமிழ்க் கல்வெட்டு ஆய்வாளர்கள் அனைவருக்கும் சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

கடந்த நூற்றாண்டில் சமஸ்கிருதம் படித்தவர்களுக்கு எத்துணை முக்கியத்துவம் அளிக்கப்பட்டது என்பதையும் தமிழ் படித்த பண்டிதர்கள் எவ்விதம் நடத்தப்பட்டார்கள் என்பதையும் இன்றைக்கு நினைத்துப் பார்க்கவேண்டியுள்ளது. அப்போது சமஸ்கிருத ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட சம்பளம் தமிழ்ப் பண்டிதர்களுக்கு வழங்கப்படவில்லை. அந்தப் பாகுபாடுகள் மீண்டும் தழைக்கவேண்டுமா? இது ஏற்புடையதா?

1835ஆம் ஆண்டு மதராஸ் மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்ட காலத்திலிருந்து 1920ஆம் ஆண்டு வரை சமஸ்கிருதம் படித்தவர்கள் மட்டுமே மருத்துவக் கல்வி பயிலமுடியும் என்ற கட்டாய விதி நடைமுறையிலிருந்தது.. பல்வேறு பெரும் போராட்டங்களுக்குப் பிறகு 1921ஆம் ஆண்டு நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்த பின்னரே சமஸ்கிருதம் கட்டாயம் என்பது நீக்கப்பட்டு சாமானியத் தமிழர்களும் மருத்துவம் படிக்க வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. இவையெல்லாம் இன்று நினைவுக்கு வருகின்றன.

ஏறத்தாழ நூறாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சமஸ்கிருதம் படித்தவர்கள் மட்டுமே குறிப்பிட்ட தமிழக அரசுப்பணிக்கு விண்ணப்பிக்க முடியும் என்ற அறிவிக்கை என்பது ஒருவகையில் சமஸ்கிருதத் திணிப்பு மட்டுமல்லாது தமிழ்ப்பட்டப் படிப்பு படித்தவர்களுக்கு பின்னடைவு என்பதையும் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டியுள்ளது.

**ஆசிரியர் குழு**

# என்னைப் பேச்சாளராக்கியது ஈரோடு புத்தகத் திருவிழாதான்

## - சிவகுமார்

நேர்காணல்: ஜி.சரவணன்

ஈரோடு புத்தகத் திருவிழா இருபதாம் ஆண்டாக இப்போது தொடங்க உள்ள நிலையில் இம்மாத 'உங்கள் நூலகம்' இதழ் ஈரோடு புத்தகத் திருவிழா சிறப்பிதழாக வெளிவருகிறது. இதனையொட்டி ஈரோடு புத்தகத் திருவிழாவின் சிந்தனை அரங்க நிகழ்வில் அதிகபட்சமாக ஏழுமுறை கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய உரையாளர் நடிகர் சிவகுமார் அவர்களைச் சந்தித்தோம். இனி அவருடனான விரிவான நேர்காணல்.

**சுமார் நாற்பதாண்டுகளுக்கும் மேலாக ஓவியம், சினிமா, சின்னத்திரை எனப் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ள நீங்கள் ஆற்றொழுக்கான மேடைப்பேச்சாளராக உருவெடுத்த பின்னணியைக் கூறுங்களேன்...**

ஓவிய மேதை கோபுலு அவர்கள் 90 வயதுக்கு மேல் வாழ்ந்தார். அவர் ஒரு வெற்றிகரமான முன்னோடி. அவர் சொன்னார். 'சிவகுமார், பத்து வருசத்துக்கு ஒருமுறை வாழ்க்கை முறையை மாத்திக்கணும். இல்லன்னா போரடிச்சிடும்' என்றார். அதுமாதிரி அறிந்தோ அறியாமலோ என்னுடைய வாழ்க்கை மூன்று நான்கு வடிவங்கள் எடுத்துவிட்டன.

பதினாறு வயது வரைக்கும் பள்ளிக்கூடம், கரண்டே இல்லாத கிராமத்தில் இருந்தேன். அந்த வாழ்க்கை ஒரு வித்தியாசமான வாழ்க்கை.

அதற்குப் பிறகு சம்பந்தமில்லாமல் ஓவியக்கலைக்குப் போனேன். மற்ற ஓவியர்கள் மாதிரி இல்லாமல் இந்தியா முழுவதும் சுற்றி 'ஸ்பாட் பெயிண்டிங்' ஓவியங்கள் வரைந்தேன். அப்புறம் பிரமாதமான ஓவியர்ன்னு முடிவெடுக்கிற காலத்துல 'பதினாலாம் நூற்றாண்டு பதினஞ்சாம் நூற்றாண்டு மறுமலர்ச்சிக்கால ஓவியர் நீங்க. ஒரு ஐந்து, ஆறு நூற்றாண்டு லேட்டா பொறந்துட்டீங்க. இது மாடர்ன் ஆர்ட் யுகம். உங்களுக்கு எதிர்காலம் இல்ல'ன்னுட்டாங்க.

அப்போது வேறு வழியில்லாமல் புதிதாக நடிப்புத்துறைக்குப் போய் ஒரு நாற்பது வருசங்கள் 192 படங்களில் நடித்தேன். 172 படங்கள்ல ஹீரோவா நடித்தேன். அதுவும் ஒரு கட்டத்தில் போரடிக்க ஆரம்பித்தது. 2005ல இனிமே நாம மேக்கப் போடக்கூடாது என்று முடிவு செய்துவிட்டேன்.

இந்த நேரத்தில்தான் விதிவசமாவோ அதிர்ஷ்டவசமாவோ 2005-ல் ஈரோட்டில் புத்தகத் திருவிழா துவங்கப்பட்டது. அப்ப என்னைப் பேச்சாளரா கூப்புட்டாங்க. நான் அட்ரஸ் மாறி வந்திருக்கீங்கன்னு சொன்னேன்.

அதெல்லாம் இல்லை, உங்களுக்குள்ள ஒரு பேச்சாளர் இருக்காருன்னு சொல்லி ஈரோடு புத்தகத் திருவிழாவில் 2006-ல் முதன்முதலா எனக்கு பேச்சாளராக ஒரு வாய்ப்பு கொடுத்தாங்க.

அப்ப எந்த தயாரிப்பும் கிடையாது. சங்க இலக்கியத்துல அஞ்சாறு பாட்டு, கம்பராமாயணத்துல ஒரு நாலு பாட்டு, பாரதியார் பாட்டு நாலு வச்சிட்டு ஒரு மணி முப்பது நிமிசம் பேசினேன். ஈரோடு புத்தகத் திருவிழாவுல ஐயாயிரம் ஆறாயிரம் பேரும் இடையில எழுந்து போகாம உட்கார்ந்திருந்ததப் பாத்திட்டு மிரண்டு போயிட்டேன். அதுக்கப்பறந்தான் நமக்குள்ள ஒரு பேச்சாளன் இருக்கிறான்னு நம்பினேன். என்னைப் பேச்சாளராக்கியது ஈரோடு புத்தகத் திருவிழாதான்.

சொன்னா நம்பமாட்டீங்க. சற்றேறக்குறைய இந்த இருபது வருடங்களில் நான் மேடையில் பேசியதே இருபது, இருபத்தைந்து நிகழ்ச்சிகள்தான் இருக்கும். மற்றவர்களைப் போல தினமும் அல்லது மாதத்திற்கு நான்கு நிகழ்ச்சிகளுக்குப் போற ஆள் இல்லை நான். இந்த நிகழ்ச்சிகள்ல நான் பேசின மகாபாரதமோ, கம்பராமாயணமோ, திருக்குறளோ நினைத்துப் பார்க்கமுடியாத அளவுக்கு வடிவம் பெற்றது. இதை காலம் எனக்குக் கொடுத்த கொடையாகத்தான் நான் பார்க்கிறேன்.

**இந்த ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழா இருபதாம் ஆண்டாகத் தொடங்குகிறது. அந்த வளர்ச்சிப்படி நிலை எவ்வாறானதாக இருக்கிறது?**

ஈரோடு புத்தகத் திருவிழாவை நடத்தும் மக்கள் சிந்தனைப் பேரவையின் வளர்ச்சி அபரிமிதமான வளர்ச்சி. ஸ்டாலின் குணசேகரன் என்கிற ஒரு தனிநபருடைய முயற்சியாகத்தான் நான் இதனைப் பார்க்கிறேன். அவர் நினைத்திருந்தால் ஈரோட்டில் எத்தனையோ தொழிலதிபர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் நிகழ்ச்சிக்கு மொத்தமாக எவ்வளவோ பணம் வாங்கிக் கொள்ளலாம். அப்படியில்லாமல் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கு மட்டும் ஸ்பான்ஸர் வாங்கிட்டு சுயமாகவே இந்த நிகழ்ச்சியை நடத்துகிறார். நுழைவுக் கட்டணமாக ஒரு ரூபாய் வசூலித்தால்கூட நிறைய பணம் கிடைக்கும்.

பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு புத்தகம் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டவேண்டும் என்பதற்காக நடத்துகிறோம். நட்டமடைந்தாலும் பரவாயில்லை. நுழைவுக் கட்டணம் போடவேமாட்டேன் என்று சொல்லி புத்தகத் திருவிழாவை நடத்திக்கொண்டிருக்கிறார்.

எல்லாவற்றையும்விட முக்கியமான விஷயம், தமிழ்நாட்டில் இருக்கும் மிகச்சிறந்த பேச்சாளர்களை ஒரு பட்டியலெடுத்து ஒவ்வொரு நாள் மாலையிலும் சிந்தனை அரங்கத்தில் மேடைப்பேச்சு இருக்கும். இரண்டு மணி நேரத்திற்குக் கேட்கலாம் என்பது மாதிரி ஒரு கலாச்சாரத்தை உருவாக்கியிருக்கிறார். எனக்குத் தெரிந்து சமீபத்தில் தமிழ்நாட்டில் பல ஊர்களில் புத்தகக் கண்காட்சிகள் நடக்கின்றன. ஆனால் இந்த அளவுக்கு ஆர்கனைசுடா மிகச் சிறந்த பேச்சாளர்களை அழைத்துப் பேசவைத்து மக்கள் ரசிக்கிறமாதிரியான மிகப்பெரிய ரசனையை உருவாக்கியவர் இவர்தான்.

ஈரோடு மக்கள் மாதிரி ரசனையான மக்கள் தமிழ்நாட்டில் வேறு எந்த ஊரிலும் இருப்பதற்கான வாய்ப்பு இல்லை. அந்த மாதிரி செய்திருக்கிறார். பங்க்சுவாலிட்டின்னு ஒரு விஷயம் வைத்திருக்கிறார். ஆறுமணி என்றால் மிகச் சரியாக ஆறுமணிக்கு நிகழ்ச்சி தொடங்கும் என்று போட்டு 5.55க்கெல்லாம் மேடையில் ஆட்களை அமர வைத்துவிடுகிறார். பத்துபேர் பார்வையாளர்கள் இருந்தாலும் நிகழ்ச்சி சரியாகத் தொடங்கிவிடும்.

எந்தக் காரணத்தைக் கொண்டும் மேடையில் அரசியல், மதம் சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பேசக்கூடாது என்று ஒரு கட்டுப்பாடு வைத்திருக்கிறார். இதுவெல்லாம் பாராட்டக்கூடிய விஷயங்கள்தான்.

**இந்தப் பத்தொன்பது ஆண்டுகளில் அதிகபட்சமாக நீங்கள் ஏழுமுறை ஈரோடு புத்தகத் திருவிழாவில் கலந்துகொண்டு பேசியுள்ளீர்கள். அந்த அனுபவங்கள் எப்படி?**

இத்தனை முறை நான் பேசினேன் என்றால் ஒருமுறை பேசியதை நான் திரும்ப மறுமுறை பேசமாட்டேன். ஒன்றரை வருடம் ஆய்வு செய்து கம்பராமாயணம் பேசினேன். அது ஈரோடு புத்தகத் திருவிழாவில் பேசவில்லை. ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரியில் பேசினேன். ஒருமுறை பேசிவிட்டதை கோடி ரூபாய் கொடுத்தாலும் திரும்ப நான் பேசமாட்டேன்.

அதுபோல நான்கரை வருடம் ஆராய்ச்சி செய்து மகாபாரதம் பேசினேன். அதுவும் வேளாளர் மகளிர் கல்லூரியில்தான் பேசினேன். கொரோனா காலத்தில் 2021இல் திறந்தவெளி அரங்கம்தான் பாதுகாப்பு என்பதால் என்னுடைய 81ஆம் வயதில் திருக்குறளை நான்குமணி நேரம் ஈரோடு புத்தகத்திருவிழாவில் பேசினேன்.

**புத்தகத் திருவிழாவை நடத்தும் 'மக்கள் சிந்தனைப் பேரவையின் 25 ஆண்டுகால செயல்பாடுகள் பற்றி உங்களின் மதிப்பீடு...**

மக்கள் சிந்தனைப் பேரவை வியாபார நோக்கத்துடன் துவக்கப்பட்டதில்லை. அதேபோல ஈரோடு புத்தகத் திருவிழாவும் காசு சம்பாதிக்கும் நோக்கத்தில் துவக்கப்பட்டதில்லை. அபூர்வமான ஒரு மனிதருடைய வாழ்நாள் லட்சியம் அது. ஸ்டாலின் குணசேகரன் வெற்றிகரமான ஒரு வழக்கறிஞராக இருந்தார். அவர் நினைத்திருந்தால் பெரிய பங்களாவெல்லாம் வாங்கி சில ஜூனியர்களை வைத்துக்கொண்டு தொழிலை நடத்தியிருக்கலாம். ஆனால் அவர் இந்த நாட்டுக்கு சேவை செய்யவேண்டும், மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும், சமுதாயத்திற்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற நோக்கத்திற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிற மனிதர்.

அவரது லட்சியப் பிடிப்பும் நேர்மையும் தொடர்ச்சியான கடின உழைப்பும் தான் உருவாக்கிய மக்கள் சிந்தனைப் பேரவையை ஒரு நிரந்தர சமூக நல அமைப்பாக உருவாக்கிடவேண்டும் என்ற முனைப்பும் நல்ல பலனைக் கொடுத்துள்ளது.

பல நல்ல உள்ளங்கள் இவரின் முயற்சிகளுக்கு மனப்பூர்வமான ஒத்துழைப்பைக் கொடுக்கிறார்கள்.

மக்கள் சிந்தனைப் பேரவை வலிமையான ஒரு அமைப்பாக உருவாகி வருகிறது. அதில் ஆயிரக்கணக்கானோர் இணைந்துள்ளனர். அவர்களுள் சிலர் இவரோடு குழுவாக செயல்பட்டு வருகிறார்கள்.

ஒரு தனிமனிதனின் முயற்சியாக இருந்தாலும் இதுவொரு கட்டொழுங்கு மிக்க அமைப்பாக உருவாகி வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

சமீபத்தில் ஈரோட்டில் நடந்த மக்கள் சிந்தனைப் பேரவையின் வெள்ளிவிழாவுக்கு நேரில் சென்றிருந்தபோது இதனை என்னால் உணரமுடிந்தது.

தன் வாழ்க்கை மொத்தத்தையும் நாட்டுக்காக அர்ப்பணித்த மனிதர். அந்த ஒரு மனிதருடைய செயல்பாடுதான் காரணம். இந்த இடத்தில் என்ன செய்யமுடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஒரு சல்யூட் வைக்கிறேன் ஸ்டாலின் குணசேகரனுக்கு.

**கம்பராமாயணத்தின் முழுக்கதையையும் 'கம்பன் என் காதலன்' எனும் தலைப்பில் ஆற்றிய உணர்ச்சிகரமான உரையின் தயாரிப்புப் பின்புலத்தை அறிந்துகொள்ளலாமா?**

நான் முன்பே சொல்லியிருக்கிறேன். நான் பெரிய படிப்பாளி கிடையாது. பேச்சாளன் கிடையாது. காலமும் விதியும்தான் என்னை பேச்சாளனாக மாற்றிவிட்டது என்று நினைக்கிறேன். 'இப்படிக்கு சூர்யா' என்று கல்கியில் சூர்யா வாழ்க்கை பற்றி ஒரு தொடர் வந்தது. அது புத்தக வடிவில் வந்தபோது சென்னை புத்தகக் கண்காட்சியில் அதனை வெளியிடலாமென்று பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களை நாங்கள் அழைத்திருந்தோம்.

அவர் வந்து புத்தகத்தை வெளியிட்டு பெருமையாக சொல்லிவிட்டுச் சென்றார். ஊருக்குப் போன மனிதர் சும்மா இல்லாமல் மதுரையில் கம்பன் கழகம் நடத்தும் விழாவில் கம்பராமாயணம் பற்றி நீங்கள் பேசவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். என்னைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? கம்பராமாயணம் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது.என்னைப் போய் பேசச்சொல்கிறீர்களே என்று கேட்டேன். தன்னடக்கத்தோடு சொல்கிறீர்கள். உங்களால் பேசமுடியும் என்று சொன்னார்.

உங்க பையன் நிகழ்ச்சிக்கு நான் வந்தேன். எங்க நிகழ்ச்சிக்கு நீங்க வரணும்ன்னு சொல்லிவிட்டார். பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம் இன்னும் சில பேராசிரியர்கள் சேர்ந்து உருவாக்கிய கம்பராமாயணம் ஒன்பது தொகுப்பு புத்தகங்கள் வாங்கிக் கொடுத்துவிட்டார். ஒவ்வொன்றும் 1500, 2000 பக்கத்துக்கு மேல் இருக்கும்.

அதை ஒவ்வொன்றையும் படித்துப் பார்த்து தலை சுற்றியது. அதையெல்லாம் விபரமாக எழுதமுடியாது.

"வெய்யோன் ஒளி தன் மேனியின்
விரி சோதியின் மறைய,
பொய்யோ எனும் இடையாளொடும்,
இளையானொடும் போனான் -
'மையோ, மரகதமோ, மறி
கடலோ, மழை முகிலோ,
ஐயோ, இவன் வடிவு!'
என்பது ஓர்அழியா அழகு உடையான்".

இது எதாவது புரியுதா? இதைப் படித்தால் பைத்தியம் பிடித்துவிடுவது போலாகிவிடும்.

"பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி;
முப் புரங்கள் செற்ற
சேவலோன் துணைவன் ஆன
செங்கையோன் தங்கை;
திக்கின் மாஎலாம் தொலைத்து, வெள்ளி மலை
எடுத்து, உலகம் மூன்றும்
காவலோன் பின்னை; காம
வல்லியாம் கன்னி "

என்றாள்.

இப்படி பாடல்கள் எல்லாம் ஒன்றுமே புரியவில்லை என்று சொன்னபோது இன்னும் இரண்டு மாதங்கள் இருக்கின்றன. நிதானமாக படியுங்கள் என்று சொல்லிவிட்டார்.

அப்போது அரையும் குறையுமாக சினிமா பாட்டுக்கும் இதுக்கும் கம்பேர் பண்ணி சினிமாவுல ஒரு பாட்டு, கம்பராமாயணத்துல ஒரு பாட்டுன்னு ஒரு முப்பது நிமிடம் பேசினேன்.

அப்ப சொ.சொ.மீ.சுந்தரம்ன்னு ஒரு பேராசிரியர் இருக்கிறார். அவர் வாழ்நாள் முழுவதும் கம்பராமாயணத்தைப் படித்தவர். அவர் என்னை ‘எப்பப் படிச்சீங்க’ என்று கேட்டார்.

‘ஒன்றரை மாதம் ஆகிறது’ என்று சொன்னேன்.

‘ஒன்றரை மாதத்தில் படித்து சொல்லமுடியாது கம்பராமாயணம். அவ்வளவு சுலபமா அது?’ என்று கோபமாகக் கேட்டார்.

அப்போது சாலமன் பாப்பையாவிடம் ‘நீங்கதானே புத்தகம் வாங்கிக் கொடுத்தீங்க, கொஞ்சம் சொல்லுங்கள்’ என்று சொன்னேன்.

அவர் ‘ஆமாம் போன மாதம்தான் புத்தகம் வாங்கிக் கொடுத்தேன்’ என்று சொன்னார்.

அப்ப இது என்னமோ வில்லங்கமா இருக்கேன்னு கம்பராமாயணத்துல ஒரு ஐம்பது பாட்டு படித்தேன். ஐம்பது பாட்டு படித்துவிட்டு பப்ளிக் ரிலேஷன்ஸ் கவுன்சில் ஆப் இண்டியான்னு ஒரு அமைப்பு இருக்கிறது. பத்திரிகையாளர் சுதாங்கன் நடத்திட்டுருந்தார். அந்த நிகழ்ச்சிக்குப் போனேன். பத்து இருபது பேர்தான் இருந்தார்கள். இந்த ஐம்பது பாட்டையும் சடசடன்னு சொன்னவுடனே ஒரு எண்பது வயது பெரியவர், இப்பதான் தண்டகாரண்யத்திலிருந்து நான் வர்றேன், பாதுகையை தலைமேல வச்சிட்டு பரதன் உடம்பெல்லாம் புழுதியோட போயிட்டுருக்கான்னு எமோசனோட அழ ஆரம்பிச்சிட்டாரு.

என்னடா இது, பாட்டுக்கெல்லாம் இப்படி ரீயாக்ட் பண்ணுவாங்களான்னு அதிர்ச்சியாயிட்டேன்.

மறுநாள் சாப்பாட்டு நேரத்துல நண்பர் ஒருத்தர் ஃபோனக் கொடுத்தாரு. அந்த ஃபோனக் காதுல வச்சா ஒரு பாட்டு போயிட்டுருக்கு.

"புலியின் அதள் உடையானும், பொன்னாடை
புனைந்தானும், பூவினானும்
நலியும் வலத்தார் அல்லர்; தேவரின் இங்கு
யாவர், இனி நாட்ட வல்லார்?
மெலியும் இடை, துடிக்கும் முலை, வேய் இளந்
தோள், சேயரிககண், வென்றி மாதர்
வலிய நெடும் புலவியினும் வணங்காத
மகுட நிரை வயங்க மன்னோ".

இந்தப் பாட்ட எங்கயோ கேட்டிருக்கிறோமே என்று பார்க்கிறபோது அது என் குரலாக இருந்தது. ‘வட அமெரிக்காவுக்கு மேலிருக்கும் வான் கூவர் நகரிலிருந்து வருகிறது’ என்றார். வியப்புடன் ‘எப்படி’ என்று கேட்டபோது ‘நேற்று நீங்கள் பேசியதை ஒலிப்பதிவு செய்து வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்திருக்கிறார்கள். அந்த சாப்ட்வேர் கம்பெனியில் பகல் உணவு இடைவெளியில் இதை ஒலிக்கச் செய்திருக்கிறார்கள்’ என்றார்.

அப்போதுதான் கம்பன் இவ்வளவு பெரிய ஆளா என்று வியந்து பார்த்தேன்.

அப்ப 98 பாட்டை மனப்பாடம் பண்ணி சிங்கப்பூரில் பேசினேன். 2009 ஆம் வருசம் ஈரோடு வேளாளர் மகளிர் கல்லூரியில் 100 பாடல்களை மனப்பாடம் செய்து அரங்கேற்றம் செய்தேன். இப்போதெல்லாம் நினைத்தே பார்க்கமுடியாது. 10520 பாடல்கள் உள்ள கம்பராமாயணத்தில் 1000 பாடல்களைத் தேர்ந்தெடுத்து அதை 100 பாடல்களாகச் சுருக்கி மனப்பாடம் செய்து பேசினேன். உளறக்கூடாது, பேப்பர் வைத்திருக்கக் கூடாது, தண்ணீர் குடிக்கக்கூடாது. ஐயாயிரம் ஆறாயிரம் பேர் கூட்டம்.

என் வாழ்க்கையில் பேச்சாளன் என்று சாதனையாக நினைத்தால் முதலில் ராமாயணம், இரண்டாவது மகாபாரதம், மூன்றாவதாக திருக்குறள். இந்த மூன்றும்தான் சிவகுமாரின் பேச்சின் அடையாளம் என்று நினைக்கிறேன்.

**எண்பது வயதைத் தாண்டிய நீங்கள் ஈரோட்டில் திருக்குறளைப் பற்றி இடைவெளியில்லாமல் தொடர்ந்து நான்குமணி நேரம் பேசி அசத்திய சாதனை உரை அனுபவம் எப்படியிருந்தது?**

என்னுடைய அடையாளமாக நான் பார்ப்பது ஓவியம். என்னோட பசங்க ரெண்டு பேருமே நடிப்பில் என்னைத் தாண்டிவிட்டார்கள். பிரமாதமாக நடிக்கிறார்கள். ஆனால் நான் வரைந்த ஓவியங்களை அவர்களால் வரையமுடியாது. அவங்கன்னு இல்ல, 24 வயதுக்குள் அந்த தரத்தில் நான் வரைஞ்ச

ஓவியங்கள வரைஞ்சவங்க உலக அளவில் இருபது பேர்கூட இருக்கமாட்டாங்க. ஆக ஓவியம் என்பது என்னுடைய அடையாளம். நடிப்பு என்பது எனக்கு வாழ்க்கை கொடுத்த கலை. அதற்கு நான் மரியாதை கொடுக்கிறேன்.

நான் இன்னார்ன்னு முத்திரை குத்தணும்ன்னு நினைக்கிறபோது எனக்குக் கிடைச்ச ஒரே களம் பேச்சுதான். ஆனா எனக்கே தெரியாது நான் பேச்சாளராக வருவேன் என்று. கம்பராமாயணம், மகாபாரதம் பேசியதைப் பார்த்து பெரியவர்கள் எல்லாம் அசாத்தியமான ஒரு வேலையை செய்கிறீர்கள். யாருமே செய்யமுடியாது என்று சொன்னார்கள்.

அப்போதுதான் வாழ்க்கையின் பெரும்பகுதியை வீணாக்கிவிட்டோமே என்று கடைசிக் காலத்தில் எதாவது செய்யலாமே என்று நாலு மணி நேரம் 'நான் ஸ்டாப்பா' திருக்குறளை பேசினேன். ஈரோடு மக்களையும் ஸ்டாலின் குணசேகரனையும் இப்ப கையெடுத்துக் கும்பிடுறேன். அது நான் பேசினத விட அந்த மக்கள் உட்கார்ந்திருந்து என்கரேஜ் செய்தார்கள் அல்லவா, கைதட்டி ஆரவாரமாக ரசித்தார்கள் இல்லையா அதுதான் முக்கியம்.

உலகத்தில் எங்காவது வந்து உட்கார்ந் திருப்பார்களா? இது இளையராஜா கச்சேரியில்ல, ஒருத்தன் வெறுமனே பேசிகிட்டே இருக்கான். யாருமே பாதியில எழுந்து போகாம இருந்தாங்களே. நான் தயார் பண்ண விதம் ஒண்ணு. அந்த மக்கள் என் மேல் வைத்திருந்த மரியாதை ஒண்ணு. இதுவெல்லாம் சேர்ந்ததுதானே தவிர இந்தப் பெருமையெல்லாம் எனக்கே சேர்ந்தது என்று நான் சொல்லிக்கொள்ளமுடியாது.

**தங்களின் வாழ்வனுபவங்களை மட்டுமின்றி வெவ்வேறு தளங்களில் தொடர்ந்து பல்வேறு நூல்களும் எழுதியுள்ளீர்கள். அவற்றிற்கான அடிவேர் எங்கிருந்து தொடங்கியது?**

பொதுவாக எனக்கு நினைவாற்றல் அதிகம் என்று சொல்கிறார்கள். அதை நான் எப்படிப் பார்க்கிறேன் என்றால் அறிந்தோ அறியாமலேயோ 1961லிருந்து இதுவரைக்கும் கிட்டத்தட்ட 63 வருடம் டைரி எழுதிட்டு வர்றேன். தமிழ்நாட்டில் சுமார் எட்டு கோடி பேர் இருக்கிறார்கள். அதில் டைரி எழுதுபவர்கள் 100 பேர் இருப்பார்களா என்பது கேள்விக்குறிதான். சரியோ தப்போ ஒருநாள் நடக்கிற விஷயங்களைக் குறித்து வைப்பது சாதாரண விஷயமல்ல. தினமும் சாயங்காலம் என்று சொல்லமுடியாது. இரண்டுநாள் கழித்துக்கூட எழுதுவேன். நேற்று காலையில் என்ன சாப்பிட்டீர்கள் என்று கேட்டால் உங்களுக்கு ஞாபகம் வராது. யார் யாரைச் சந்தித்தீர்கள் என்று கேட்டால் நினைவு வராது. டைரி எழுதும்போது முதலில் நடந்து முடிந்ததை யோசிக்கிறோம். மற்றவர்களைக் கேட்டு சரிசெய்துகொண்டு உறுதிப்படுத்திக்கொண்டு குறித்து வைக்கிறோம். கடந்தகாலத்தை நினைத்துப் பார்ப்பதால் நமக்கு நினைவாற்றல் கூடுகிறது. அதை டைரியில் பதிவு செய்கிறபோது இன்னும் ஆழமாகப் பதிகிறது.

அந்தமாதிரி 63 வருசமா டைரி எழுதிட்டு வருகிறேனில்லையா? இந்த டைரி எழுதும் பழக்கம்தான் எனக்கு 'கொங்கு தேன்' என்ற பெயரில் நான் 16வயது வரைக்கும் வாழ்ந்த கிராமப்புறத்து வாழ்க்கையை நூலாகப் பதிவு செய்வதற்குக் காரணமாயிருந்தது.

அதேபோல 'சித்திரச்சோலை'ன்னு அதே இந்து தமிழ் திசை இன்னொரு புத்தகம் வெளியிட்டிருக்கிறது. அதில் காஞ்சிபுரத்துக்கு எந்தத் தேதி எத்தனை மணிக்குப் போனேன் என்று இருக்கும். யாரை சந்தித்தேன் என்ற குறிப்பும் இருக்கும். எப்போது மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் பத்து மணி நேரம் ஓவியம் வரைந்தேன் என்ற குறிப்பும் இருக்கும்.

எனவே நினைவாற்றலை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஆழப்படுத்திக் கொள்வதற்கு டைரி மிகப்பெரும் உதவியாக இருந்தது. டைரி வழியாகத்தான் நான் நிறைய சம்பவங்களை குறித்திருக்கிறேன். அது மனத்திரையில் ஆழமாகப் பதிவாகிவிடுகிறது. நாற்பது ஆண்டுகளாக வாழ்ந்த திரையுலகம் பற்றி டைரி எழுதியதால் 'அக்னிசாட்சி' படம் என்றால் எந்தத் தேதியில் சூட்டிங் நடந்தது? சிந்து பைரவி என்றால் விசாகப்பட்டினத்தில் எந்தத் தேதியில் பாடல் எடுத்தோம்? என்பதெல்லாம் டைரியில் இருக்கின்றன.

இந்தப் பதிவுகள்தான் 'கொங்கு தேன்' எழுதுவதற்கும் 'சித்திரச்சோலை', 'திரைப்படச்சோலை' போன்ற புத்தகங்கள் எழுதுவதற்கும் உதவியாக இருந்தது. அடிப்படையில் டைரி குறிப்புகள்தான் காரணமாகத் தோன்றுகிறது. அதுதான் நினைவாற்றலைக் கூட்டுவதற்கும் மேடையில் பேசுவதற்கும் உதவுகிறது என்று நினைக்கிறேன்.

**தங்களின் ஞானத்தந்தை 'கரிசல்' எழுத்தாளர் கி.ரா அவர்களுக்கும் உங்களுக்குமான உறவின் தனித்துவமும் மகத்துவமும் பற்றி தெரிந்துகொள்ளலாமா?**

ஜூனியர் விகடன் தொடங்கிய காலகட்டத்தில் 'இது ராஜபாட்டை அல்ல' என்று ஒரு தொடர் 40, 45 வாரம் நான் எழுதினேன். நான் பேச்சாளன் என்பது போய் எழுத்தாளன் என்று பார்ப்பதற்குக் காரணம் ஜூனியர் விகடனில் நான் எழுதிய கட்டுரைதான். ஜூனியர் விகடனில் என்னுடைய தொடர் முடிந்தவுடன் உடனடியாக 'கரிசல் காட்டுக் கடுதாசி' எனும் கி.ரா. அவர்களின் தொடர் வெளிவந்தது. அந்தத் தொடரை எடுத்துப் படித்துப் பார்க்கும்போது






அவர் கரிசல் மண்ணைச் சார்ந்த கிராம வாழ்க்கையைச் சொல்லியிருக்கார். நான் வாழ்ந்தது செம்மண் பூமி. அவர் எழுதியதைப் படித்துப் பார்த்து அவருக்கு ‘நானும் கிராமப்புறத்தைச் சேர்ந்தவன்தான். உங்கள் கடிதங்களைப் படிக்கும்போது ஏன் கிராமத்தை விட்டு வந்தோம் என்று ஏக்கமாக இருக்கிறது’ என்று கடிதம் எழுதிப் போட்டேன்.

அப்போது இருவருக்கும் பழக்கமானது. அப்புறம் நெருக்கமாகி எனது மகன், மகள் திருமணத்திற்கு வந்து ஆசிர்வாதம் செய்தார். அவர் 98 வயதுவரைக்கும் வாழ்ந்தார். நான் பத்து மாதத்தில் தகப்பனை இழந்தவன். ஒரு தகப்பனுடைய அன்பை அவர்கிட்டயும் கணவதி அம்மாவிடம் தாயினுடைய பாசத்தையும் நான் பெற்றேன். அதனால் அவர் இறந்துபோவதற்கு முன்பே கி.ரா விருது என்பதைத் தொடங்கி கொங்கு மண்ணுக்கு மரியாதை செய்யவேண்டும் என்பதற்காக விஜயா பதிப்பகம் வேலாயுதம் அதனை வழிநடத்துகிறார். ஈரோடு சக்தி மசாலா கி.ரா. விருது வழங்கும் புண்ணியத்தை கட்டிக்கொள்கிறது.

சாகித்ய அகாடெமி அமைப்பு விருது ஒரு லட்சம்தான் பரிசுத்தொகை வழங்குகிறது. நாங்கள்தான் முதலில் ஐந்து லட்சம் விருதுத்தொகை என்று தொடங்கினோம். சக்தி மசாலா துரைசாமியையும் சாந்தியையும் கையெடுத்துக் கும்பிடவேண்டும். வருடாவருடம் ஐந்து லட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். இந்த ஆண்டு கோயம்புத்தூர் போய் விருது கொடுக்கப் போகிறோம். ஆக கி.ரா என்பவர் என் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒரு பெரிய எழுத்தாளர்.

**பொதுவாகத் தங்களின் இலக்கிய வாசிப்புப் பரப்பு மற்றும் வாசிப்பு முறைமை குறித்துக் கூறுங்களேன்?**

இலக்கியம், வாசிப்பு அப்படியெல்லாம் பெரிய வார்த்தையெல்லாம் போட்டு கேட்கவேண்டாம். நான் ஈரோடு புத்தகத் திருவிழாவில் மேடையில் பேசினேனே தவிர பேய்த்தனமான வாசகனெல்லாம் கிடையாது. நமக்கு வாழ்க்கையில் மிகவும் பிடித்தது ஓவியம். கல்லூரியில் படித்து அறிவை விரிவு செய்யும் காலகட்டத்தில் நான் ஓவியம் பக்கம் போய்விட்டேன். அப்போது இலக்கியம் படிப்பதற்கு வாய்ப்பு கிடையாது. அதுக்கப்புறம் இருபத்தைந்து வருடம் நடிப்பதற்கு வந்துவிட்டேன். அப்ப சிவாஜி, எம்ஜிஆர் உச்சத்தில் இருந்தாங்க. அவங்களுக்கு போட்டி போட்டு நடிப்பதற்கே நமக்கு நேரம் சரியாகப் போய்விட்டது.

நடிப்பை மேம்படுத்துவதற்கு இந்தியா முழுவதும் பத்து வருடங்கள் ஆயிரம் நாடகங்கள் போட்டோம். அதில் மிச்ச காலங்கள் போய்விட்டது. பிறகு ஹீரோவானதும் தொழில் செய்வதற்கே நேரம் போயிற்று.

சொன்னால் நம்பமாட்டீர்கள், அறுபது வயதுக்குப் பிறகுதான் புத்தகங்களையே படிக்கத் தொடங்கினேன். அறுபது வயதுக்குப் பிறகு என்ன பெரிசா இலக்கியத்தைப் படித்துவிடமுடியும்? நிறைய படித்ததாகவெல்லாம் பொய் சொல்லமாட்டேன். எனக்கு பெரிய வாசிப்பெல்லாம் கிடையாது. எல்லா இலக்கியத்தையும் படித்தவன் இல்லை. ஸ்டாலின் குணசேகரன் மாதிரி தமிழருவி மணியன் மாதிரியோ வாழ்நாள் பூரா புத்தகம் படிப்பதே வேலை என்று இருந்தவனில்லை. நான் அப்படி கிடையாது.

நான் படித்த விஷயங்களை ஆழ்ந்து படித்து மூன்று உரைகள் பவர்ஃபுல்லா பண்ணியிருக்கேன். கம்பராமாயணத்தை ஒன்றரை ஆண்டுகள் ஆழ்ந்து படித்தேன். பி.ஆர்.சோப்ராவின் மகாபாரத்தை எழுபது மணி நேரம் குறிப்பெடுத்தேன். இளம்பிறை மணிமாறன் 20 மணி நேர மகாபாரத உரையைக் கேட்டுக் குறிப்பெடுத்தேன். சோவின் 1400 பக்க மகாபாரதத்தைப் படித்துக் குறிப்பெடுத்தேன்.

இவற்றையெல்லாம் 4500 பக்கம் பேனாவில் நானே எழுதினேன். அதை 3000, 2000, 1000, 500 என சுருக்கி கடைசியில் 350 பக்கமாகச் சுருக்கியெழுதி அதைத்தான் பேசினேன்.

திருக்குறளை மூன்று வருடம் ஆராய்ச்சி செய்தேன். 2000 வருடங்களுக்கு முன்னால் திருக்குறள் எழுதப்பட்டிருந்தாலும் எத்தனை பேருக்கு தெரியும்? 1812க்கு முன்பு பரிமேழலகர், மணக்குடவர் உரை எழுதியதெல்லாம் யாருக்குத் தெரியும்? குடத்திலிட்ட விளக்குபோல்தான் இருந்தது. 1812இல் எல்லீஸ் என்ற வெள்ளைக்கார துரை மூலமாகத்தான் திருக்குறள் வெளியே தெரிந்தது. மு.வரதராசனார் உரை எழுதிய திருக்குறள் ஆறு லட்சம் பிரதிகள் விற்றதாம். ஆனால் வாங்கியவர்கள் எவருமே பிரித்துப் பார்க்கவும் இல்லை. படிக்கவுமில்லை.

அதற்குப் பின் திருக்குறளுக்கு கலைஞர், சாலமன் பாப்பையா போன்றோர் உரை எழுதியுள்ளார்கள். நூறு பேருக்கு மேல் எழுதியுள்ளார்கள். என்றாலும் திருக்குறள் முழுமையாக மக்களிடம் போய்ச் சேரவில்லை.

மகாத்மா காந்தி வாழ்க்கையில், காமராஜர் வாழ்க்கையில், என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில், சினிமாத்துறை சம்பந்தப்பட்டவர்களுடைய வாழ்க்கையில், ஒவ்வொரு தனிப்பட்ட வாழ்க்கையில் உருக்கமான சம்பவங்களை மூன்றரை ஆண்டுகள் தேடி எடுத்தேன். தம்பி சங்கர சரவணனை உட்கார வைத்து இந்தக் கதைக்கு பாடலைச் சொல்லச் சொல்லி எளிமையான திருக்குறளைத் தேர்ந்தெடுத்தேன். அவர்கள் பாடலை எடுத்துக்கொடுக்க நான் கதைகளைச் சேர்த்தேன். அதில் கதைதான் என்னுடையதே தவிர திருக்குறள்கள் எல்லாம் அவர் எடுத்துக் கொடுத்ததுதான். நான் பெரிய இலக்கியப் படிப்பாளி என்றெல்லாம் சொல்லாதீர்கள். எல்லா இலக்கியத்தையும் நான் படித்தவன் என்று தவறாக நினைத்துக்கொள்ளாதீர்கள்.

**புதிதாக மேடைப் பேச்சாளராக விரும்புபவர்களுக்கு ஏதேனும் பயிற்சிகளும் வழிமுறைகளும் சொல்லமுடியுமா?**

புதிதாக மேடையில் பேசப்போகிறவர்களுக்கு அறிவுரை சொல்வதற்கு நானொன்றும் அந்த அளவுக்கு அனுபவசாலி கிடையாது. நானொரு சாதாரண ஆள். நான் என்ன செய்கிறேனென்றால் எதைப் பற்றிப் பேசப்போகிறோம் என்று முதலில் முடிவு செய்கிறேன். கம்பராமாயணத்தைப் பேசவேண்டுமென்றால் அதைப் பற்றி யார் யார் எழுதியிருக்கிறார்கள் என்று தரவாகப் பார்க்கிறேன். அதைப் பற்றி யார் யார் பேசியிருக்கிறார்கள் என்ற உரைகளைக் கேட்கிறேன். தூத்துக்குடி பேராசிரியர் அ.கு.ஆதித்தன் அவர்கள் கம்பன் 1000 என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கார்.

பத்தாயிரத்து சொச்சம் பாடல்களை ஆயிரமாகச் சுருக்கி ஒரு பக்கம் பாடல், ஒருபக்கம் உரை என்று இருக்கும். கம்பராமாயணத்தின் முழு சாரமும் அந்த ஆயிரம் பாடல்களில் வந்துவிடுகிறது. இதனை இன்னும் சுருக்கி கம்பன் 100 என்று செய்தாலென்ன என்று நினைத்து செய்தேன். முதல் பாட்டுக்கும் நூறாவது பாட்டுக்கும் இடையிலுள்ள 98 பாடல்களின் சாரத்தையும் சேர்த்து சொல்லிவிடவேண்டும். அப்படிச் செய்தால்தான் கம்பன் 100 முடியும்போது கம்பராமாயணத்தின் முழுக்கதையையும் சொல்லமுடியும்.

நான் இதை எழுதுவேன். எழுதி எழுதி மனப்பாடம் செய்வேன். எல்லாவற்றையும் நான் எழுதித்தான் மனப்பாடம் செய்வேனே தவிர வாயால் மனப்பாடம் செய்தது கிடையாது. பத்துமுறை வாயால் படிப்பதைவிட மூன்றுமுறை எழுதினால்

மனப்பாடம் ஆகிவிடும். எழுதி மனப்பாடம் செய்வது சாகும்வரை மறந்துபோவதற்கு வாய்ப்பில்லை.

**இன்றைய நிலையில் எழுத்து, பேச்சு இதில் உங்கள் முதன்மைத் தேர்வும் விருப்பமும் எது? ஏன்?**

எழுத்து, பேச்சு இரண்டில் எழுத்தைத்தான் சொல்லவேண்டும். ஏனென்றால் ஓவியம் வரைகிற காலத்திலிருந்தே நான் டைரி எழுதத் தொடங்கிவிட்டேன். மனதில் எதையாவது ஒன்றை நாம் உருவகப்படுத்தினால் அதனை என்னமாதிரி எழுதுவோம் என்ற சிந்தனை எனக்கு 65களிலேயே வந்துவிட்டது. 20 வயதிலிருந்தே இன்றைக்கு காலையிலிருந்து சாயங்காலம் வரை நடந்த சம்பவங்களை எழுதுவதற்கு ஒரு வடிவம் வேண்டுமில்லையா? அதை வார்த்தைகளைப் போட்டு எழுத்து வடிவத்தில் எழுதுவது இருபது வயதிலேயே நமக்கு வந்துவிட்டது.

எழுத்து வடிவம்தான் நம்முடைய கருத்துகளை சொல்வதற்கு முன்னோடி என்று சொல்லவேண்டும், பேச்சு என்பது ராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகளை மனதுக்குள் உள்வாங்கி அதை எழுத்து வடிவில் கொடுத்து அதை மனப்பாடம் செய்துதான் பேசுவேன். ஆக எழுத்துதான் முதலில். அதையொட்டிதான் பேச்சு. என்னுடைய பேச்சு சிறப்பாக இருக்கிறதென்றால் அதற்கு முன்பாக எழுத்தில் எழுதி அதைப் பேசவதுதான் காரணம்.

**நிறைவாக ஒரு கேள்வி. முதியவர், பெண்டிர், இளைஞர் மட்டுமல்லாது திரையில் நடிகராக உங்களைக் கண்டிராத இன்றைய இளந்தலைமுறையினரும் உங்களின் உரைக்குப் பெரும் ரசிகர்களாக இருப்பதை எப்படி உணர்கிறீர்கள்?**

எல்லாத் தரப்பு மக்களையும் ஈர்ப்பதுபோல் என்னுடைய உரை இருக்கிறதென்றால் முடிந்தவரைக்கும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமல் இருப்பதுதான். 2008ஆம் ஆண்டு விஜய் டிவியில் ‘பெண்’ உரை முதன்முதலில் ஒளிபரப்பானது.

எந்தப் பெரிய மனிதராக இருந்தாலும் தன்னைப் பற்றிய நெகடிவ் விஷயங்களை சொல்லமாட்டார்கள். அறியாத வயதில் மனைவியை எப்படி டார்ச்சர் செய்தேன், அம்மாவை எப்படிக் கொடுமை செய்தேன் போன்ற எல்லா விஷயத்தையும் திறந்தமனதோடு சொல்லியிருப்பேன். அதை யாரும் அப்படி சொல்லமாட்டார்கள். அதற்கு ஒரு பேராண்மை வேண்டும் என்று புவியரசு அவர்கள் சொல்வார். அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

தூக்குதண்டனைக் கைதி அவனை தூக்கில் போடுவதற்கு முன்பு தான் செய்த பாவங்களையெல்லாம் சொல்லி விமோசனம் தேடிக்கணும்னா அவன் எதையும் மறைக்கமாட்டான். அதுமாதிரி நான் செய்த தப்பை நான் வெளியில் சொன்னா பாரம் குறைந்து எவ்வளவு நிறைவாக இருக்கும்.

ஆக உண்மையைப் பேசுவது என்பதுதான் அது.

வாழ்நாள் பூரா படிச்சாலும் முழு மகாபாரதம் படிக்கமுடியாதுன்னு சொல்லுவாங்க. கம்பராமாயணம் பத்தாயிரத்து சொச்சம் பாட்டு. யார் படிப்பாங்க. திருக்குறள் அந்நியப்பட்டு போன மாதிரி ராமாயணம் மகாபாரதம் எல்லாம் வயசானவங்க மட்டும் படிக்கிறதா ஆகிப் போச்சு.

அதனாலதான் அவ்வளவு பாட்டையும் நூறாச் சுருக்கி பாமரர்களுக்கும் புரியும் மொழியில் பேசுகிறேன். ஏற்கனவே பாட்டே கடுமையாக இருக்கிறது.

**ஓசை பெற்று உயர் பாற்கடல் உற்று. ஒரு**
**பூசை முற்றவும் நக்கு புக்கென.**
**ஆசை பற்றி அறையலுற்றேன் – மற்றுஇக்**
**காசு இல் கொற்றத்து இராமன் கதைஅரோ**

என்றால் யாருக்குப் புரியும்?

பாற்கடலுக்கு முன்பாக ஒரு பூனைக்குட்டி போய் உட்கார்ந்து இந்தக்கடலில் எவ்வளவு பால் இருக்கிறது? நாமே மொத்தையும் நக்கிக் குடிக்கலாம் என்று நினைப்பது எவ்வளவு அறியாமையோ பேதைமையோ அதைப்போல ராமனின் கதையை கம்பன் எழுதிப் பார்க்க ஆசைப்படுகிறான் என்று எழுதியிருக்கிறான்.

எல்லாரும், பாடலை முதலில் சொல்லிவிட்டு பிறகு அர்த்தத்தைச் சொல்வார்கள். அந்தப் பாட்டு மண்டையில் ஏறாது.

நான் முதலில் அர்த்தத்தைச் சொல்லிவிட்டு பிறகு பாடலைச் சொல்லும்போது பாதிப் பாடல் புரியும்.

நான் அறிவாளி, மேதை என்று காட்டிக்கொள்வதைவிட அந்தப் பாடலும் உங்களுக்குப் புரியவேண்டும், கதையும் தெரியவேண்டும் என்பதற்காக நான் பேசினேன். அதனால் இது இளைய தலைமுறைக்குப் போய்ச் சேர்ந்தது ஒரு பெரிய விஷயம்.

ராமாயணத்தைவிட நான்கு மடங்கு பெரியது மகாபாரதம். நான்கு ஆண்டுகள் அதை ஆய்வுபடுத்தி பாமரர்களுக்கும் புரியும்படி உரையைத் தயார் செய்தேன். வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைப்போல உரையைத் தயாரிக்கும் யுத்தியைக் கையாண்டு பேசினேன். அதனால்தான் எல்லா தலைமுறையினருக்கும் அது போய்ச் சேர்ந்ததற்கான காரணம் என்று நான் நினைக்கிறேன். ●

கட்டுரை



# அறிவியலை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் என்ன?

டாக்டர் சு.நரேந்திரன்

ஒரு சமுதாயம் இன்றைய பணிகளை இன்றைய கருவி கொண்டு செய்ய வேண்டும். இன்றைய பணியை, நேற்றைய கருவி கொண்டு செய்யும் இனத்தின் நாளைய வாழ்வு நலியும். எனவே, நாம் பயன்படுத்தும் கருவிகளை, உலகில் எங்கேனும் நிகழ்ந்துள்ள புதிய வளர்ச்சியை உள்ளடக்கியதாக புதுப்பித்துக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது.

மேலும் அறிவியல் வளர்ச்சியால் பெற்ற கருவிகளைப் பயன்படுத்துவதும், இயற்கை வளங்களை, நுகர்வதும், உலகின் சூழலுக்கும் மனிதகுல வாழ்விற்கும் தீங்கு ஏற்படாமல் வளர்ச்சிக்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறதா? எனக் கண்காணிப்பதற்கான விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தவும் அறிவியலைப் பரப்ப வேண்டிய தேவையுள்ளது.

இருபத்தோராம் நூற்றாண்டின் மனிதகுல முன்னேற்றங்கள், குறிப்பாக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இருந்ததைப் போல் அல்லாமல் தகவல் பரிமாற்றத்தை உடனுக்குடன் செய்துவிடுகின்றன. வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றுடன் இணையம், கைபேசி போன்றவைகள் இதுநாள்வரை தகவல் பரிமாற்றங்களைச் செய்து கொண்டிருந்த இதழ்கள் பணியைக்கூட வழக்கற்றுப் போகச் செய்து கொண்டிருக்கின்றன.

இத்தேவையை கல்விநிறுவனங்களும் அரசு தன்னார்வல நிறுவனங்களும் இயக்கங்களும் செய்து கொண்டிருக்கின்றன.

மக்களிடையே அறிவியலைப் பற்றிய விழிப்புணர்வைக் கற்பித்தல், பரப்புதல் அறிமுக அறிவியல் என்பது சமூகத்தின் முக்கிய அம்சமாகும். இது புதுமை கண்டுபிடிப்பு மற்றும் மக்கள் முன்னேற்றத்தை உந்துகிறது. இது தவிர அறிந்த தகவலை முடிவெடுப்பதை உறுதி செய்வதற்கும், விமர்சன சிந்தனை கலாச்சாரத்தை வளர்ப்பதற்கும், மக்களிடையே அறிவியலைப் பற்றிய விழிப்புணர்வைக் கற்பிப்பதற்கும், பரப்புவதற்கும், குறிப்பிடத்தக்க தேவை உள்ளது. அறிவியல் கல்வியை ஊக்குவிப்பதன் மூலம் தங்களைச் சுற்றியுள்ள உலகத்தை நன்கு புரிந்து கொள்ளவும் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தீவிரமாகப் பங்கேற்கவும் தனி நபர்களுக்கு நாம் அதிகாரம் அளிக்க முடியும்.

அறிவியல் கல்வியின் முக்கியத்துவம் தனி நபர்களின் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களில் தகவலறிந்த முடிவுகளை எடுப்பதற்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களைக் கொண்டிருப்பதில் அறிவியல் கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. விமர்சன சிந்தனை மற்றும் சிக்கலைத் தீர்ப்பதை ஊக்குவிக்கிறது. மருத்துவக் கல்வி அறிவை ஊக்குவிக்கிறது.

வேகமாக வளரும், முன்னேறி வரும் உலக முன்னேற்றங்கள், நம் வாழ்வில் ஒவ்வொரு அம்சத்தையும் பாதிக்கும் இடத்தில் அறிவியல் கல்வி முன்பை விட முக்கியமானது.

இந்நோக்கங்கள் நிறைவேற மக்களிடம் அறிவியலை எடுத்துச் செல்வது எப்படி?

20 ஆம் நூற்றாண்டு ஆரம்ப கட்டம் குடும்பக் கட்டுப்பாடு, எய்ட்ஸ், காலரா போன்றவற்றிற்கான பயன்பாட்டை பார்த்துள்ளோம். அவை,

**1) கலைநிகழ்ச்சிகள்**

மக்கள் மனதில் ஆழம்பதிந்து மக்களைத் திரட்டுவது, தேசிய விடுதலை இயக்கம், திராவிட இயக்கம், (1950-60) முதலியவை தங்கள் கொள்கைகளை நாடகம், தெருக்கூத்துகளின் மூலம் பொதுமக்களிடம் எடுத்துச் சென்றார்கள். இது போல அறிவியலையும் பரப்பலாம். எ.கா. ஜாதகத்திற்குப் பதில் இரத்த சோதனை Rh+Rh(-) ஆகியவைகளைத் திருமணப் பொருத்தம் பார்க்குமுன் சோதனை செய்து பிறகு திருமணம் செய்தால் குழந்தைக்கு வரும் கேடுகள் தடுக்கப்படும்.

**2) கலைப்பயணங்கள்**

பிற அறிவியல் இயக்கங்களுடன் இணைந்து எடுத்து செல்வது. இதைக் கோள சாஸ்திரீய சாகித்ய பரிஷத் போன்ற அறிவியல் இயக்கங்கள் தங்கள் கருத்துகளை வீதி நாடகங்களாக சாலை கூடுமிடங்களில் ஆடிப் பாடி கருத்துக்களைச் சொல்கின்றனர்.

போபால் விஷவாயு நாடகம் நடிக்கப்பட்ட காலத்தில் இதனால் கேரளாவில் சில கிராமங்களில் எவரெஸ்ட் பாட்டரிகள் விற்கவில்லை.இது போன்ற கருத்துக்களை தக்க அறிஞர்களோடு வடிவமைக்க வேண்டும். இதுபோல் சுற்றுச்சூழல், உயிரினங்களை நேசித்தல், பெண் சமத்துவம், உரிமை பெற்ற சமூகம், அனைவருக்கும் கல்வி ஆகியவைகளைப் பாடல், நாடகங்கள் மூலம் உருவாக்க வேண்டும்.

**3) மந்திரமில்லை மாயமில்லை மாஜிக் ஷோ**

மக்களை தவறான நம்பிக்கையிலிருந்து மீட்பது. சாதாரண மக்களும் அற்புதங்களைச் செய்ய இயலும் என்ற தன்மையை ஏற்படுத்துவது. இதனை ஆயிரக்கணக்கானோர் கண்டு களித்து உண்மையை அறியமுடியும்.

அறிவியல் பயிற்சி முகாம்கள் - உணர்வுப்பூர்வமான செயல்பாடுகள். உறைவிட முகாம்களில் தவறான நம்பிக்கை, உடல்நலம் ஆகியவைகளை அறிஞர் பெருமக்கள் உரைபட விளக்கங்களுடன் விளக்கலாம்.

அறிவியல் விளையாட்டுப் பகுதி - இதில் பரிசோதனை விளையாட்டுகளைக் குறைந்த செலவில் நடத்தி அறிவியலை எளிதாக எடுத்துச் செல்லமுடியும்.

கற்பனையும் கைத்திறனும் பகுதி - கழிவுப் பொருளை அலங்காரப் பொருளாக்குவது 2)கவிதை உருவாக்கம் முதலியவைகள் மூலம் படைப்பாக்கம் செய்யமுடியும் என்ற நம்பிக்கையை உருவாக்குவது.

கணிதமும் வடிவியலும் - கணிதம் இனிக்கும் என்ற வகையில் கணிதத்தை விளையாட்டாக கற்பிப்பது.

தேசிய, மாநில விஞ்ஞான மாநாடு, விழாக்களை நடத்துவது - இதில் பல அறிவியல் தலைவர்களை பேச வைப்பது - நாடகம், பாட்டு ஆகியவைகளையும் இடம்பெறச் செய்யலாம்.

இது தவிர வில்லுப்பாட்டு, பாவைக்கூத்து, நாட்டுப்புறக்கலை இவைகள் எல்லாம் ஒரு நேரத்தில் குடும்பக் கட்டுப்பாட்டிற்காக நடத்தப்பட்டது என்பது பலருக்கு நினைவிருக்கலாம்.

கருத்துப்படம் (Cartoon) சுவரொட்டி - இவைகளின் மூலம் சுற்றுப்புறச்சூழல், அசுத்த நீரின் விளைவுகள், புகை உனக்குப் பகை போன்ற கருத்துப் படங்களை வெளியிட்டு விளக்கலாம்.

இதழ்கள் -அறிவியலை பரவலாக்க எளிய முறையில் விஞ்ஞான உண்மைகளை, கருதுத்துக்களைப் பரப்ப பல்வேறு இதழ்கள் வேண்டும். அவை வரலாற்றிலிருந்து உடல் நலம் வரை பல தலைப்புகளில் தொடர்ச்சியாக வெளிவரவேண்டும். எதிர்பாராதவிதமாக தமிழ்நாட்டில் கொரனா தொற்றிற்குப் பிறகு பொது அறிவியல், மருத்துவ

இதழ்கள் தங்கள் வெளியீடுகளை நிறுத்திவிட்டது. இவை மீண்டும் வெளிவர ஆவன செய்ய வேண்டும்.

**நூல்கள்**

சிறுவயதிலேயே ஆர்வத்தை ஏற்படுத்த அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும் பல புதிய முறையில் நூல்கள் வெளிவருகின்றன. அத்தகைய நூல்களை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பாரதி புத்தகாலயம் போன்ற இடதுசாரி பதிப்பகங்கள் ஆண்டுதோறும் வெளியிடுகின்றன. இவைளைப் போல விலையில்லா வேட்டி சட்டைகளை வழங்குதலை ஒத்து விலையில்லா நூல்களை அரசு வழங்கலாம்.

சோவியத் யூனியன் தகர்வுக்கு முன்புவரை நல்ல காகிதத்தில் குறைந்த விலையில் அறிவியல் நூல் வீதிகளில் கூட விற்கப்பட்டது. அதுபோல அறிவியல் நூல்கள் வரிசையில் தென்னிந்திய புக் டிரஸ்ட் துணையோடு ஒரு ரூபாய் விலையில் வெளிவந்து விற்கப்பட்டன. இது தவிர மனதில் விஞ்ஞான ஆர்வத்தைத் தூண்ட, அறிவியல் புனைக்கதைகள் எழுதப்படவேண்டும். (எ.கா.) டைம் மிஷின். இதுபோன்ற புதுமைக் கருத்துக்கள் வடிவில் தமிழில் வெளிவருவது மிகவும் குறைவாக உள்ளது வருத்தமளிக்கின்றது. அறிவியல் எழுத்தாளர்கள் இதை மனதில் கொள்ள வேண்டும்.

நூல்களை குழந்தை, விடலை, முதியோர்களுக்கு என பிரித்துக் கொள்ளலாம். இவை ஓரளவு படித்தவர்கள் கூட புரிந்து கொள்ளும் வகையில் கருத்துகள், கலைச்சொற்கள் மிகக் குறைவாக, கரடுமுரடான சொற்கள் இன்றி இருக்கவேண்டும். தெளிவு, எளிமை, நேர்நடையுடன் செய்திகளை பார்த்தவுடன் புரிந்து கொள்ளத் தக்கதாக இருக்க வேண்டும். இது வரலாற்றிலிருந்து உடல் கூறுவரை இருக்கலாம். சில பதிப்பகங்கள் மூலம் உடல்நலம் குறித்த சிறுநூல்கள் - இரைப்பை நோய், வயிற்றுப் போக்கு, பிராஸ்டேட் போன்றவைகள் வெளிவருகின்றன. இதுபோல் நூல்கள் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மூலம் தொழிற்சாலைகளால் ஏற்படும் நோய், வைட்டமின், தண்ணீரினால் பரவும் நோய்கள் என்று கோடைக்கால பட்டறைகளை நிகழ்த்தி, அவைகள் டாக்டர் அ.கதிரேசன் வழி நடத்தல் மூலம் வெளிவந்து பெரும் பாராட்டைப் பெற்றது. நீ எப்படி தோன்றினாய்? கணினி அறிமுகம், கலிலியோ போன்ற நூல்களும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மூலம் வெளிவந்து நல்ல பாராட்டைப் பெற்றது.

உழவர்களுக்கும் நல்ல மகசூல் தரும் சிறு நூற்கள் வெளிவரவேண்டும். அண்மைக் காலங்களில் வந்த பெரும் தொற்று, மலேரியா, டெங்கு, டைபாய்டு, ரேபிஸ், எபோலா வைரஸ் தொற்று, எலிக் காய்ச்சல் போன்றவற்றிற்கான நூல்கள் எளிய முறையில் வந்து கொண்டிருக்கின்றன.

அறிவியல் கண்டுபிடிப்பில் நோபல் பரிசு பெற்ற அறிஞர் சர் சி வி ராமன், டாக்டர் சந்திரசேகர் போன்ற விஞ்ஞானிகள் வரலாற்றையும் கண்டுபிடிப்புகளையும் மாணவர்களிடம் எடுத்துச் செல்லலாம்.

**மக்கள் தொடர்புச் சாதனங்கள்**

20ஆம் நூற்றாண்டு ஆரம்பகால தொடர்பு சாதனங்கள்

வானொலி-வேளாண்துறையில் புதிய யுத்தியாக ஒரு நாளுக்கு ஒரு செய்தி என்ற விதத்தில் தென்கச்சி சாமிநாதன் உரையைப் போல வானொலியில் பல உரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அறிவியல் அலைகள், வினாடி வினாக்கள், இது தவிர நல்ல தமிழ் வார்த்தையை அறிய வினாடி வினா, அறிஞர் நேர்காணல், பேட்டி போன்றவைகள் 3-30 நிமிடங்கள் நடைபெறுகின்றன. இதையே இன்னும் நேரத்தைக் கூட்டி பள்ளி, கல்லூரிகளிலும் கண்டிப்பாக கண்டுகளிக்குமாறு செய்யவேண்டும்.

திருச்சி வானொலி போன்றவை வேளாண்துறை, நலவாழ்வியல் முதலியவைகளில் சாதனை படைத்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை துகிலி சுப்பிரமணியம் என்பவர் மாலையில் வானொலியில் பேசுவார். “நேத்து என்ன பண்ணிங்க? இன்று நிலக்கடலைக்கு உரம் போட்டீங்களா?” என்று சொல்லிவிட்டு, இன்றைய காலத்தை ஒட்டி வேளாண் தொழில்நுட்பத்தை கூறுவார். இது போல் நாமும் முனையலாம். நாமே வானொலியை அமைக்க முடியும். இதன் மூலம் வேளாண்மையைப் போல மற்ற விஞ்ஞானங்களையும் எடுத்துச் செல்ல முடியும். இதை சில பல்கலைக் கழகங்கள் மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

**தொலைக்காட்சி தொல்லைக்காட்சியாகக் கூடாது**

வானொலி, தொலைக்காட்சி வழியாகத் தடுப்பு முறை வழியாக காலரா, போலியோ, பெரியம்மை, ஒழிக்கப்பட்டது என்பது நினைவில் கொள்ள வேண்டும். இதே போல முதலில் இருவர் பிறகு ஒருவர் என்று கூறி குடும்பக் கட்டுப்பாடு பெரிய வெற்றியடைந்தது. அதே போல கக்குவான், தொண்டை அடைப்பான், டெட்டனல், போலியோ ஆகியவை இல்லை என்ற நிலைக்கு வந்துவிட்டோம். தொழுநோய் போன்ற நோய்களுக்குத் தடுப்பு முறையைக் கூறும்போது இது கர்மவினை, செய்த தவறுக்கு தண்டனை என்று எதிர்மறைக் கருத்துக்களைக் கூறக்கூடாது. அம்மைக்கு தடுப்பு மருந்து வந்துவிட்டது. அம்மைக்கு காரணம் வைரஸ் என்று கூறி கடவுள் குற்றம் இல்லை என்பதைத் தெளிவுபடுத்தலாம்.

**திரைப்படம்**

ஒரு படத்தில் அறிவியல் குறித்து என்.எஸ்.கே “விஞ்ஞானத்தை வளர்க்க போறாண்டி வெளிநாட்டானை விருந்துக்கு அழைத்துக் காட்டப் போறேண்டி” எனப் பாடுவர். அதுபோல் சின்னக்

கலைவாணர் விவேக் பல படங்களில் தனது பகுத்தறிவு கலந்த நகைச்சுவையைக் கூறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இத்தகவல் அணுகுமுறை ஒரு பணியாக இராது, சமுதாயத்தை அறிவார்ந்த பயணத்திற்கு வழிநடத்துவதாக இருக்கவேண்டும். குடும்ப நலத்திட்டம் வெற்றிகரமாக அமைந்தது ஒரு சமூகநல பரிமாற்றம் (Social marketing) என்று கூறலாம். இதுபோல வயிற்றுப் போக்குக்கு எப்படி ஓ.ஆர். எஸ்.சை தயார் செய்வது என்பதைக் குறித்துச் சொல்லிக் கொடுக்கலாம்.

**இருபதாம் நூற்றாண்டு ஆரம்ப காலத்திற்குப் பின் அண்மைக்காலத் தொடர்பு சாதனங்கள்**

புலனம், வலைஒளி (u-tube), இன்ஸ்டாகிராம், முகநூல் (facebook) ஆகிய செயலிகள் மூலம் 100க்கும் மேற்பட்ட பங்காளர்களுக்கு ஒரே நேரத்தில் செய்திகளை அனுப்பமுடியும். இது குறுங் காணொலியாக இருக்கலாம். இதன்மூலம் நலவாழ்வு, வேளாண்மை, அறிவுரை, வேதியியல் ஆய்வு, விழிப்புணர்வு அறிவியல் உரையாடல், பேட்டி போன்றவைகளை எடுத்துச் செல்லலாம்.

**அறிவியல் திரைப்படம்**

டிஸ்கவரி சானல், நேஷனல் ஜியோகிராபி, ஹிஸ்டரி போன்ற திரைப்பட அலைவரிசையைப் போல "நம்மை ஊரைப் போலாகுமா" என்று நம்ப ஊர் கனிவளம், புகழ்பெற்ற சுற்றுலாத்தளங்கள், சங்க காலம் முதல் இன்று வரையிலான தமிழர் வரலாறு ஆகியவைகளுடன் அறிவியல் புனைகதை நூல்களைப் போல் புனைகதையுடனான திரைப்படங்களும் அறிவியலைப் பரப்ப உதவும்.

இணைய மின் இதழ்கள் மூலம் உலகத் தமிழனை ஒன்றாக்கலாம், இதில் எத்தனை பக்கம் வேண்டுமானாலும் எழுதலாம், புலம் பெயர்ந்த தமிழனையும் இணைக்க இவ்விதழ்கள் பெரிதும் உதவும். இவ்விதழ்கள் மூலம் வரலாறு, விஞ்ஞானம் ஆகியவை பன்னாட்டளவில் எடுத்துச் செல்லலாம். ஏற்கனவே பல மின் இதழ் பல நாடுகளிலிருந்து வெளிவந்து வெற்றிகரமாக உலா வருவது கண்கூடு.

மருத்துவரின் பங்கு - "மருத்துவ அறிவியல் ஒளித்து வைக்க வேண்டிய தனிப்பட்டோரின் குத்தகை இல்லை" என்றவாறு டேவிட் வார்னர் 'டாக்டரில்லா ஊரில்' எனும் நூல் பல மொழிகளில் உலகம் முழுவதும் வெளிவந்துள்ளன. இதுபோல சித்த மருத்துவம் சாமானியரிடம் சென்றடையவில்லை என்ற நிலையில் பாட்டி வைத்தியத்தையாவது நாம் எல்லோரிடமும் அதில் சிறந்தவைகளை எடுத்துச் செல்லவேண்டும். இதனால் குறைந்த செலவில் மருத்துவம் பெறமுடியும்.

நடமாடும் நூல் விற்பனை - நியூ செஞ்சுரி புத்தக நிலையம், தனது பேருந்தில் நூல்களை எடுத்துச் சென்று ஒவ்வொரு ஊராக நூல்களைச் சந்தைப் படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. பாரதி புத்தகாலயமும் - பின்னால் புத்தகாலயமும் இணைந்து புத்தகத் திருவிழாவை ஆண்டுதோறும் திருப்பூரில் நடத்துகிறது.

**தேசிய மாணவர் படை**

தேசிய மாணவர் படை (NCC) போல தேசிய விஞ்ஞான மாணவர் படையை அமைத்து ஒவ்வொரு கல்லூரியிலும் விஞ்ஞானத்தை எடுத்துச் செல்ல வேண்டும். அம்மாணவர் படை. பொதுமக்களுக்கான அறிவியல் நிகழ்ச்சிகள், விளக்க உரைகள், விவாத மேடைகள், போட்டிகள் மற்றும் கண்காட்சிகளை நடத்தலாம்.

விமர்சன சிந்தனை மற்றும் சிக்கலைத் தீர்ப்பதற்கும் ஊக்குவிக்கும். மேலும் புதுமை, கண்டுபிடிப்பு மற்றும் முன்னேற்றத்தையும் உந்திவிக்கும். தங்களைச் சுற்றியுள்ள உலகத்தை நன்கு புரிந்துகொள்ளவும் எதிர் காலத்தை வடிவமைப்பதில் தீவிரமாக பங்கேற்கவும், இயற்கை உலகின் அடிப்படைக் கொள்கைகளைப் புரிந்து கொள்ளவும் உதவும்.

**நிறைவாக**

இவைகளின் மூலம் சாதாரண மனிதனுக்கும் தன் வாழ்நிலையை மாற்ற முடியும் என்று நம்பிக்கையூட்ட முடியும் சாதாரண மனிதனும் தன் அறிவை விரிவாக்கி எழுச்சியுறுவர். வறுமையில் வாடும் தமிழர்களுக்கு பொருளாதாரக் கருவிக்கான கருவியாக அறிவியல் பயன்படும். உணர்வுகளைப் புண்படுத்தாது தவறான பழக்க வழக்கங்களையும் மூடநம்பிக்கைகளையும் சுட்டிக் காட்டுவதால் கைவிடுவர். போருக்கும் அழிவிற்கும் எதிராக அறிவியல் வளர்ச்சிக்கு அரசுக்கு நெருக்கடி கொடுப்பர். நலவாழ்வுத் திட்டங்களில் பங்கேற்று விரிவுப்படுத்துவர். மரபுவழி கைவினைக் கலைஞர்கள் தங்கள் தரத்தை மேம்படுத்துவர். மரபுவழிப் பெருமைகளை வரலாற்றை அறிந்து, சீரிய எதிர்காலத்தை, உருவாக்குவார்கள். மத, இன, மொழி வெறிக்கு எதிராக ஒற்றுமையாக இருப்பார்கள். அப்போது மறைந்துள்ள திறமைகள் வெளிவரும். இதனால் தமிழர்கள் தமிழ்நாட்டில் மிகச் சிறந்த சாதனையாளராக பகுத்தறிவாளர்களாக மாறுவார்கள்.

**(ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவை வெள்ளி விழா உரையின் சுருக்கம்.)**

●

கட்டுரையாளர், எழுத்தாளர், சென்னை டாக்டர்
எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக
சிறப்புநிலைப் பேராசிரியர்.

# 2024 ஆம் ஆண்டு

## ஈரோடு புத்தகத் திருவிழாவில்

## மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில்

## சிறந்த இளம் அறிவியலாளர் ஒருவருக்கு

# ஜி.டி.நாயுடு விருது

## ரூபாய் ஒரு லட்சம் பரிசுத்தொகை

- விருதாளர் 40 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கான ஆய்வு முயற்சிகளில் வெற்றிபெற்றிருக்க வேண்டும். இது மாநிலந்தழுவிய விருது என்பதால் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் ஆய்வுக் குறிப்புகளை அனுப்பி வைக்கலாம். இந்தியாவின் வேறு மாநிலங்களில் ஆய்வை மேற்கொள்பவராகவோ, பணிசெய்பவராகவோ உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவியலாளர்களும் விண்ணப்பிக்கலாம்

- அறிவியல் துறையில் ஆழத்தடம் பதித்த வல்லுனர்களாக விளங்கும் ஐந்து தகுதி மிக்க அறிவியல் அறிஞர்களின் தலைமையில் ஒரு தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினரால் தேர்வு செய்யப்படும் ஒருவருக்கே இவ்விருது வழங்கப்படவுள்ளது

- **இவ்விருது பாராட்டுக் கேடயத்துடன் ரூபாய் ஒரு லட்சம் பரிசுத் தொகையையும் உள்ளடக்கியதாகும். விருதுத் தொகையை எம்.ஏ.முகமது முஸ்தபா அவர்களை நிறுவனராகக் கொண்ட ' சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளை ' ஒவ்வொரு ஆண்டும் வழங்கி வருகிறது**

- பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளிலுள்ள ஆய்வுக்கூடங்களிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வேறு ஆய்வுக்கூடங்களிலோ ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். பெயர்பெற்ற சர்வதேச அறிவியல் இதழ்களில் வெளியான தனது 10 கட்டுரைகளின் தலைப்புகளையும் வெளியான இதழ்கள் மற்றும் தேதிகள் குறித்த விவரங்களையும் அனுப்பி வைக்க வேண்டும்

- எந்தக் கண்டுபிடிப்புக்கு ஆய்வாளர் விருதுக்குரியவராக விளங்குகிறார் என்பதைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் தெரிவிக்க வேண்டும்

- ஆய்வுக்குறிப்புகளையும் ஆய்வு தொடர்புள்ள அனைத்து ஆவணங்களையும் எதிர்வரும் **30.07.2024** ஆம் தேதிக்குள் **info@makkalsinthanaiperavai.org** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்

**இவ்விருது, ஆகஸ்ட் 2 முதல் 13 வரை நடைபெறவுள்ள ஈரோடு புத்தகத் திருவிழாவின் சிந்தனை அரங்க நிகழ்வில் வழங்கப்படவுள்ளது**

## மக்கள் சிந்தனைப் பேரவை

தமிழ்நாடு மாநிலக் குழு

A-47, சம்பத் நகர், ஈரோடு - 638 011.

www.makkalsinthanaiperavai.org | தொலைபேசி எண் : 0424 2269186

கட்டுரை

# மொழிபெயர்ப்புவழி பண்பாட்டுப் பெயர்ப்பு

**நா. சந்திரசேகரன்**

ஒரு சொல் அல்லது தொடர் அல்லது வாக்கியம் அல்லது பிரதி ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழியில் ஆக்கப்பெறுதல் அல்லது அதற்கான செயல்பாடு நடைபெறுதல் மொழிபெயர்ப்பு என்பதாக அனைத்து அகராதிகளும் பொருளுரைக்கின்றன. மொழிபெயர்ப்பு பற்றிய கோட்பாடுகளை ஜே.சி.காட்ஃபோர்டு, யூஜின் நைடா, தியோடர் சவேரி போன்ற மேலைநாட்டு அறிஞர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள். தமிழில் மொழிபெயர்ப்பு குறித்துக் கருத்துரைத்தவர்கள் பெரும்பாலானோரைப் பற்றியும் சமகாலத்தில் சண்முகவேலாயுதம் தனது ‘மொழிபெயர்ப்பியல்’ பாடநூல் வழி ஓரளவிற்கு நல்ல அறிமுகத்தைச் செய்துள்ளார்.

‘மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்’ என்று தமிழில் முதலில் கிடைத்துள்ளதாகக் கூறப்படும் தொல்காப்பியம் முதலே நமக்கு மொழிபெயர்ப்புச் செயல்பாடுகள் என்பன மனித (தமிழின) நாகரிக வளர்ச்சியுடன் இயைபுடையதாகக் கருதச் செய்கின்றன; ஆக ஒருவகையில் மனிதகுலத்திடம் மொழிகள் வழக்கிலாகும் காலம் முதலே பெயர்ப்புச் செயல்பாடுகளும் நடைபெற்று வருகின்றன

என்பதை உணர்த்துகின்றது.'அதர்ப்படுதல்' என்பதற்கு 'நெறிப்படுதல்' என்று அகராதி பொருள் தருகிறது. இங்குச் சுட்டப்பட்ட 'அதர்ப்பட யாத்தல்' என்பதற்கு 'மூலமொழிக்கு ஏற்றார்ப் போல் தருமொழியிலும் அமைய வேண்டும்' என்ற கருத்துப்பட,

அஃதாவது நெறிப்பட யாத்தல். வழியின்வகை நான்கனுள் ஒன்று 'மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்'. மொழி பெயர்த்தலாவது பிற பாடையாற் செய்யப்பட்ட பொரு ளினைத் தமிழ்நூலாகச் செய்தல். மொழிபெயர்த்துச் செய்யுமிடத்து அது கிடந்தபடியே செய்யப்பட வேண்டுமன்றித் தொகுத்தும் விரித்தும் தொகைவிரியாகவும் செய்தல் ஆகாது.அவ்வாறு செய்யின் அஃது இருமொழியார்க்கும் பயன்படாது. *(தொ. பொ. 652 பேரா.)*

எஃப் எக்ஸ் சி நடராசா என்பாரும் தன்னுடைய 'மொழிபெயர்ப்பு மரபு*(1954)* நூலில் பின்வருமாறு கருத்துரைக்கிறார். "அந்தக் காலத்தில் சங்கத மொழியினின்றும் பல நூல்கள் தமிழ் மொழியினதர்ப்பட மொழி பெயர்க்கப்பட்டுண்டு. இந்தக் காலத்தில் ஆங்கிலத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டு, தமிழ் நூல்கள் ஆக்கப்பட்டு வருதல் கண்கூடு. ஆனால் அதர்ப்பட யாத்தல் நடைபெறுவது குறைவு. தற்காலத்தில் மொழிபெயர்க்கின்ற ஆசிரியர்கள் வார்த்தைக்கு வார்த்தை வைத்து மொழிபெயர்க்கிறார்களேயன்றி நெறிப்பட யாத்துத் தமிழ்மரபு வழுவாது வேற்றுமொழி கோரிய பொருளைப் போற்று தமிழில், சீரிய வார்த்தைகளிற் பொதிந்து தருகின்றார்களில்லை. மொழி பெயர்ப்புக் கலைக்கு எடுத்துக் கொண்ட இருமொழி மரபினையும் அறிதல் வேண்டற்பாற்று(ப.4)". ஆனால் தொடர்ந்து நடராசா முன்வைக்கும் எழுத்து-சொல்-தொடர்-வாக்கியச் சான்றுகள் பல தனித்தமிழ் நடையை ஆதரிக்கும் பாங்கும் தமிழ்ப்பண்பாட்டிற்கு இயைய அமையக்கோரலுமாய் உள்ளன. அந்தவகையில் அவை 'அதர்ப்பட யாத்தல்' தன்மையிலிருந்து விலகிச் செல்கின்றன.

'தருமொழிக்கு ஏற்றார்ப் போல் மூலமொழிக்குரியதைத் தருவிக்க வேண்டும்' என்பாரும் இருந்துள்ளனர். கம்பராமாயணம், மனோன்மணியம் இரண்டும் மொழிபெயர்ப்பினோடு தொடர்புடைய முறையே ஆரிய, ஐரோப்பியப் பண்பாட்டுப் பிரதிகளின் தமிழ்ப்பண்பாட்டுத் தழுவல் ஆக்கங்களே.இவ்விரு தழுவல் பிரதிகளும் மூலப்பிரதி சார்ந்திருக்கும் பண்பாட்டை முழுமையாகத் தருமொழி வாசகர்கள் அறியமுடியாத வகையிலானவை.சேக்ஸ்பியரின் நாடகங்களைத் தழுவி தமிழில் எழுதி நிகழ்த்தப்பெற்ற பம்மல் சம்பந்தமுதலியாரின் ஆக்கங்களும் இவ்வாறானவையே. இத்தகைய மரபை நாம் பாரதியாரின் பாடல்களிலும், புதுமைப்பித்தன் கதைகள் வழியும் வாசிக்க முடியும்.

இக்கட்டுரை, மொழிபெயர்ப்பின் வழி மூலமொழிப் பிரதி வெளிப்படுத்தும் பண்பாட்டோடு கூடிய உள்ளடக்கத்தைத் தருமொழிப் பிரதியின் வாசகர்களும் அறிந்து கொள்ளல் நியாயப்பாடுடையது என்ற தொனியில் அமைகிறது. சமகாலத்தில் மொழிபெயர்ப்பில் ஈடுபட்டுள்ள சிலர் தமது மொழிபெயர்ப்பு அனுபவங்களின் போது அடையும் பண்பாட்டுப்பெயர்ப்பு தொடர்பான சிக்கல்களை அடையாளம் காட்டுகின்றனர். அவை தமிழ்ச் செவ்வியல் படைப்புக்களை ஆங்கிலம் போன்ற மொழிகளுக்குப் பெயர்ப்பதாகவோ, சீனச் செவ்வியல் பிரதிகளைத் தமிழுக்குப் பெயர்ப்பதாகவோ கூட அமையலாம். 'ஒரு கவிதையை உருவாக்குவதைப் போன்றே கவிதையின் மொழியாக்கமும் மிகவும் அவசியமானது, கவிதை சிறப்பு உணர்வுகளைத் தொடர்புகொள்வதற்காகப் படிமங்களை வழங்குகிறது, மேலும் மொழி எவ்வளவு உறுதியானதாக இருந்தாலும், ஒவ்வொரு படிமும் வேறு எதையாவது குறிக்கிறது. இந்தப் படிமங்கள் உலகளாவிய தன்மையில் மட்டுமின்றிபண்பாட்டு அடிப்படையிலும் தனிப்பட்ட ஆதாரங்களைக் கொண்டிருப்பதால், கவிதையின் மொழிபெயர்ப்பாளர் தனது வாசிப்புப் பார்வையாளர்களுக்கு அயல் பண்பாட்டை தன்னுடைய பண்பாட்டிற்குச் சமமானதாக மாற்றுவது போன்ற எந்த சலுகையையும் அளிக்க முடியாது. எனவே ஒரு கவிதையின் வெளிப்பாடு அல்லது அழகியல் செயல்பாடு மிக முக்கியமானதா என்பதைத் தீர்மானிக்கும் இக்கட்டான நிலைக்கு அவர் தள்ளப்படுகிறார். படைப்பாளர்-மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் சமகால மொழிபெயர்ப்புக் கோட்பாட்டாளர்கள் இருவரும் முன்வைத்த கோட்பாடுகள் கவிதையின் மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மாற்றப்படுவதல்ல மாறாகக் கவிதையிலிருந்து கவிதைக்கு மாற்றப்படும் என்ற உண்மையை எடுத்துக்காட்டுகிறது'. *(ஜெயந்தி பாலகிருஷ்ணன், Academia.edu)*. இது தொடக்கத்தில் ஐரோப்பியர்கள் சிலர் மற்றும் ஏ.கே. ராமானுஜன் போன்றோர் சங்கக் கவிதைகளுக்கான அடிநிகரன்களில் ஆங்கிலேய நிகரன்களைக் கொடுத்து தமிழ்ப் பண்பாட்டுணர்வை ஆங்கிலமொழியில் கடத்தமுற்படாத போக்கை உணர்ந்து, தற்காலத்தில் முன்னெடுக்கப்படும் முயற்சியை ஆதரிக்கிறது.

‘சீன மொழிக்கும் தமிழுக்கும் இடையேயான மொழிபெயர்ப்பு பல சிக்கல்களை உள்ளடக்கியது’ என்றிடும் பயணிதரன் ‘என்னைப் போன்ற ஒரு நபர், மொழியியல் திறன் குறைவாக, மொழிபெயர்ப்பு துறையில் செயல்படுவது, சூழ்நிலையின் தீவிரத்தை காட்டுகிறது. நிலைமையை விரைவில் மாற்ற வேண்டும் என்ற எனது விருப்பத்திலிருந்து எனது முயற்சிகள் உருவாகின்றன.மொழிபெயர்ப்புப் பணியின் உள்ளார்ந்த சிக்கல்களை ஒருவர் போதுமான அளவில் விரிவாகக் கூற முடியாது. அடிப்படையில், மொழிகளின் தோற்றம் பற்றிய புரிதலை மொழிபெயர்ப்பு கோருகிறது. மொழி பெயர்ப்பு என்பது ஒரு மொழியின் ஒரு சொல்லை மற்றொரு மொழியில் மற்றொரு சொல்லுடன் மாற்றுவது அல்ல. மொழிபெயர்ப்பது என்பது ஒரு வாக்கியத்தில் பொதிந்துள்ள சமூகக் கூறுகளை மற்றொரு வாக்கியத்தைப் பயன்படுத்தி மற்றொரு சமூகத்திற்கு மாற்றுவதாகும். இந்த பணி சாத்தியமற்றது மற்றும் அவசியமானது. எனவே மொழிபெயர்ப்புகள் மிகுந்த ஆசை மற்றும் ஆழ்ந்த அவநம்பிக்கையுடன் உருவாக்கப்படுகின்றன; சோர்வு மற்றும் காட்டு ஆர்வத்துடன்.ஒரு சீன இலக்கியம் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்படும் போது, அது மொழி அமைப்பு, உச்சரிப்பு, வரலாறு மற்றும் புனைவுகள் கர்ப்பமாக இருக்கும் வார்த்தைகள் போன்ற சவால்களை வீசுகிறது. நான் மொழிபெயர்ப்பதற்குத் தேர்ந்தெடுத்த புத்தகங்கள் அவற்றின் அழகு, இலக்கியத் தரம், வரலாற்று முக்கியத்துவம், பகிரப்பட்ட கலாச்சார அனுபவங்களின் சாத்தியக்கூறுகள் ஆகியவற்றால் என்னைக் கவர்ந்தன. சிறந்த மொழித் திறனும் இலக்கிய உணர்வும் கொண்ட ஒருவர் இந்தப் படைப்புகளைப் பிற்காலத்தில் மொழிபெயர்ப்பார் என்ற ஒரே நம்பிக்கையுடன் இந்தத் திட்டங்களில் பணியாற்றினேன். இந்த இன்றியமையாத இலக்கியப் பரிணாமத்தில் நான் குரங்காக இருக்க முன்வந்தேன்’. பயணிதரன் இப்பதிவு வழி ஒரு பண்பாட்டுக்கான பிரதி மற்றொரு மொழி சார்ந்து மீண்டும் மீண்டும் பெயர்த்துச் செம்மையாக்கத்திற்கான இசைவை மொழிபெயர்ப்பாளர் கொண்டிருக்க வேண்டும் என்ற புரிதலை வெளிப்படுத்துகிறார். பயணிதரன்,SPARROW Literary Award 2016 citation - முகநூல் பதிவு.

“பொதுவான புரிதலின் அடிப்படையில், வார்த்தைகளை வாக்கியமும், வாக்கியங்களைப் பத்தியும், பத்திகளை இயலும், இயல்களைப் புத்தகமும், புத்தகம் சமூகத்தையும் சார்ந்திருக்கின்றன என்பதாக வைத்துக்கொள்வோம் என்றால், நாம் மொழியாக்கத்தில் பின்நோக்கிய பயணத்தை எப்படியாக வடிவமைத்துக்கொள்கிறோம்? ஏனெனில், நாம் வார்த்தைகளைக் கொண்டுதான் நம்முடைய மொழியாக்கத்தை உருவாக்க வேண்டியுள்ளது.ஒரு மொழியில் உள்ள வார்த்தைகளுக்கும் மற்றொரு மொழியில் உள்ள வார்த்தைகளுக்கும் இடையேயான உறவு என்ன? ஒரு மொழியிலேயே ஒரு வார்த்தை பல வார்த்தைகளாக ‘மொழியாக்கம்’ காணும்போது, இந்த வார்த்தையை நாம் வேறொரு மொழியில் உள்ள ஒரு வார்த்தையோடு மட்டும் எப்படி இணைத்துப்பார்க்க முடியும்? இந்தக் கேள்விகளுக்கு விடைகாண நான் சம்ஸ்கிருத இலக்கணவியலாளரான பர்த்ருஹரியையும் *(Bhartrhari)*, குமரில பத்தா *(Kumarila Bhatta)*, பிரபாகரா *(Prabhakara)* போன்ற மீமாம்சவாதிகளையும் எடுத்துக்கொள்கிறேன். இவர்களின் நிலைப்பாடு குறித்து பிமல் கிருஷ்ண மதிலால், ஏ.கே.சென், சுந்தர் சருக்கை போன்ற தத்துவவியலாளர்கள் முன்வைக்கும் வாசிப்பின் அடிப்படையில்” கருத்துரைக்கும் மொழிபெயர்ப்பாளர் சீனிவாச ராமானுஜன் தனது ‘மொழியியல் தத்துவத்தின் அடிப்படையில் மொழியாக்கம்’ என்ற ‘அருஞ்சொல்’ இணைய இதழுக்கான கட்டுரையில், “மூல மொழியில் ஒரு கருத்தாக்கச் சொல் கொண்டிருக்கும் அர்த்தத்தோடு நாம் மொழியாக்கத்தின் ஊடாக எதையோ சேர்க்கிறோம் அல்லது கழிக்கிறோம் என்றாகிறது. மூல மொழியில் உள்ள ஒரு வார்த்தை கொண்டிருக்கும் அர்த்தத்தை நாம் அப்படியே மொழியாக்கம் செய்து வேறொரு மொழிக்குள் கொண்டுவர முடியாது என்கிறார் சருக்கை. ஏனெனில், ஒரு பண்பாட்டில் கருத்துகளும் கோட்பாடுகளும் வேறு விதமான மீபௌதிக முற்கோள்களாலும் நம்பிக்கை சார்ந்த கட்டமைப்புகளாலும் ஆனது என்கிறார் சருக்கை. மேலும், சருக்கை முன்வைப்பதுபோல் ஒரு கருத்தாக்கச் சொல்லை மொழியாக்கம் செய்வது என்பது அந்தச் சொல் எப்படியான அர்த்தங்களை அதற்குள்ளாக அடக்க இடம் கொடுக்கிறது என்பதைக் கண்டெடுக்கும் செயலாகவே இருக்கிறது. எடுத்துக்காட்டாக நாம் செக்குலரிஸம் என்ற சொல்லைச் சொல்ல முடியும்.மேற்கத்திய சமூகத்தில் இந்தச் சொல் குறிப்பிட்ட அர்த்தத்தைக் கொண்டிருக்கிறது. இந்திய அனுபவம் இந்த வார்த்தைக்குள் கூடுதலான அர்த்தத்தைச் சேர்க்கிறது. தொகுத்துச் சொல்வதென்றால், மொழியாக்கம் என்பது, ஒரு வார்த்தை எப்படியான அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும் என்று துருவியகழும் செயலாகவே இருக்கிறது”(அருஞ்சொல்_ சமஸ், இணைய இதழ் 1).

மொழி என்பது பண்பாட்டை வெளிக்கிளர்த்தும் ஊடகம் ஆகும்; மொழியைக் கையாளுபவர்கள் ஒவ்வொருவரின் தனித்தன்மையை அவர்கள் உற்று

நோக்கும் சமூக நடப்புகள் வழி அவர்களுக்கு உணர்த்தும்; மொழியும் பண்பாடும் இரண்டறக்கலந்தவை; இயக்கப்பண்புடையவை; இயக்கத்தன்மை காரணமாக அவை காலந்தோறும் மாறும் பண்புடையன. அவ்வக்காலத்தில் எழுதப்பெறும் பிரதிகள் சமகாலப் பண்பாட்டை வெளிப்படுத்தக் கூடியதான ஒன்றாகும் போது பெயர்ப்பில் ஈடுபடுவோர் அவ்வக்காலப் பண்பாடு பற்றி அறிந்திருக்க வேண்டியவராகிறார். அவர் பெயர்க்கும் பிரதி சூழலியல் (தாவரங்கள், விலங்கினங்கள், காற்று, மலைகள்), பொருள்சார் பண்பாடு(உணவு, உடைகள், வீடுகள், நகரம், போக்குவரத்து, வேலை மற்றும் ஓய்வு நேரப் பொழுதுபோக்கு) நிறுவனங்கள்(அரசியல்/நிர்வாகம், மதம், கலை), பழக்கவழக்கங்கள், நடைமுறைச் செயல்பாடுகள், கருத்து வெளிப்பாடுகள், சைகைகள் முதலியவற்றின் அடிப்படையில் தனித்துவமானதொரு பண்பாட்டைக் கொண்டிருக்கும். தேர்ந்த ஒரு மொழிபெயர்ப்பு என்பது அது எந்த அளவிற்கு உள்வாங்கியிருக்கும் மூலமொழியின் அயல் பண்பாட்டைத் தருமொழியில் தருவிக்கிறது என்பதைப் பொறுத்தே அமையும். அதாவது அயன்மையாக்கம் (Forignisation) அடிப்படையில் ஒரு மொழிபெயர்ப்பு மதிப்பிடப்படுகிறது.

தருமொழிப் பிரதியின் சமூகத்திற்கேற்ப ஆக்கம் செய்தலைத் தற்சமூகமாக்கம் (Domestication) எனலாம். அதாவது மொழிபெயர்க்கும் ஆளுமையின் சமூகம் சார்ந்த பெயர்ப்பு என்றிடலாம். இதில் பெயர்ப்புமொழிக்குரிய சமூகத்திற்கு அறிமுகம் ஆகாத பண்பாட்டு வெளிப்பாடுகள் உள்ளூர்ப் பண்பாடு அல்லது பெயர்ப்புமொழி சார் பண்பாட்டுக்கு ஏற்ப மாறுதல்கள் செய்யப்பட்டுத் தருவிக்கப்படும். அத்தகைய மாறுதல்களில் பெயர்ப்புமொழி வாசகர்களின் எளிமையான புரிதல் நோக்கில் வாசிப்பு ஆர்வம் குன்றாதிருத்தல் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கும். காட்டாக, வடமொழி மரபில் வரும் யமா தமிழில் இயமன் அல்லது எமன் என்று தற்சமப்படுத்திக் கூறுதல் உண்டு. அதுவே ‘கூற்றுவன்’ என்று தமிழ்ப்படுத்துகையில் அது முற்றிலும் தமிழ்ப்பண்பாட்டு மயமாக்கப்படுகிறது.

அயன்மையாக்கத்தில் மூலமொழிப் பிரதி வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகளைக் கவனத்துடன் கொஞ்சமும் குறைவின்றித் தருமொழிப் பிரதி வாசகச் சமூகத்திற்கு வழங்குதல் தீவிரமாயிருக்கும். அப்போது பெயர்ப்பாளர்க்கு நேரிடும் சிக்கலைச் சுட்ட, பண்பாட்டுப் பெயர்ப்பியலாமை (Cultural Untranslatabity) என்பதாக ஒரு சொல்லாடல் உள்ளது. இது பெரும்பாலும் மொழிவழக்காறுகள் சார்ந்தவை; அதாவது ஒவ்வொரு மொழியும் தன் பயிற்சியாளர்களால் தொடர்ந்து வாயாடும்வழி குறிப்பிட்ட சொற்கள் இணைந்து ‘தொடர்’களை இயல்பாக அடைகாத்துக் கொள்கின்றன. ‘உயிர் தவச்சிறிது’, ‘உணவெனப்படுவது நிலத்தொடு நீரே’, நீரின்றி அமையாது உலகு’, ‘கற்க கசடற’ என்பதில் தொடங்கி ‘இருட்டுக்கட அல்வா’ எனப் பிரிக்க முடியாத தொடர்கள் ஒரு புறம் மொழியில் சேர்ந்து கொண்டே இருக்கின்றன. அவையும் காலப்போக்கில் அம்மொழிசார் பண்பாட்டுத் தரவாகின்றது.ஒரு கட்டத்திற்கு அவற்றின் தொடர் வழக்காற்றுப் பயிற்சி காரணமாய் ஒருவகை ‘அடைவு’ பெற்றுவிடுகின்றன. இதை ஒரு மொழியின் ‘தொடர் அடைவு’ என்று சொல்லலாம். இலக்கணிகள் தொகைமொழி என்கின்றனர் (பேரா.மாதையன் உரையின் போது கேட்டது).

பின்வரும் சில காட்டுகள் பண்பாட்டுப் பெயர்ப்பியலாமைக்கானவையாகும். பேச்சுவழக்குகள் பிரதிகளில் இடம்பெறுதல் இயல்பான ஒன்று. அவை, பல நேரங்களில் நீண்ட கலைச்சொல்லாக்கங்கள் அல்லது World Health Organization என்பது கீபிளி என்று சுருங்கியதாய் (Acronym) விளிக்கப்படுதல் போல, இயல்பான மொழிஒட்டநடை கொண்டிருக்கும். ‘அத எட்டு வா’ என்பது தென் தமிழகத்தில் இயல்பான வழக்காறு. சென்னை வட்டார வழக்கில் இதையே ‘அத்த இட்டா’ என்பார்கள். இவற்றைத் தருமொழிப் பெயர்ப்பாளர் ‘அதை இங்கே எடுத்துக்கொண்டு வா’ என்று புரிந்துகொள்ளாமல் பெயர்த்தார் என்றால் தவறாகிவிடும். இப்போதைக்கு கூகுள், அது எந்திரம் என்பதால்(மனிதச் சிந்தனைப்படி பணியாற்றும் வரையில்) மேற்படியில் உள்ள ‘எட்டு’ என்பதை 8 என்றும், ‘அத்த’ என்பதை ‘அத்தை’ என்றும்தான் பெயர்க்கிறது.

*‘order’* என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ‘ஒழுங்கு, உத்தரவு’ என்ற நீதிமன்றம் சார்ந்த பொருண்மைச் சொற்களைத் தமிழில் பயன்படுத்துகிறோம். அதுவே நீதிமன்றத்தில் *‘order order’* என்று அடுக்குத்தொடராய் நீதிபதியால் (சில நேரங்களில் டவாலியால்?) முழங்கப்பட்டால் ‘அமைதி அமைதி’ என்றோ அல்லது ‘ஒழுக்கமாய் இருங்கள்’ என்றோ பொருண்மைப் பயிற்சியில் உள்ளது. *‘in order’* என்பது தமிழில் ‘ஆணைப்படி, ஒழுங்கில்’ என்பதாகத் தரப்படுகின்றன; *‘order to’* என்பதற்கு ‘வரிசை முறை/ ஒழுங்கு’ என்று பயிற்சியில் உள்ளன. இவையே, *‘in order to’* என்று வரும்போது தமிழில் ‘ஆக’ என்பதாகச் சுருங்கிவிடுகிறது. *[He confronted his supervisor in order to show his strength.*[அவர் தனது பலத்தை காட்டுவதற்காக தனது மேற்பார்வையாளரை எதிர்கொண்டார்-கூகுள்]. (அவர் தனது பலத்தை(க்) காட்டுவதற்காக(த்) தனது

மேற்பார்வையாளரை(த்) திரும்பப் பெற்றார்). அதாவது வெறும் 'ஆக' என்ற சொல்லையே பெறுகிறோம்].*She has not longer hair* என்பது அவள் நீளமான கூந்தல் கொண்டிருக்கவில்லை என்று பொருள். *She is no longer student* என்று வருகையில் 'அவள் இனி மாணவியில்லை' என்றாகிறது. இது போன்ற தொடர்ந்த பயிற்சியில் இருக்கும் தொடர் அடைவுகள் பெயர்ப்பில் சரியாக வருகின்றன. ஆனால் பின்வரும் சில தொடர்அடைவுகள் அவை சார்ந்த பிரதியின் பண்பாட்டில் ஆழ்ந்த பயிற்சியைக் கோருகின்றன.

*Bussy(cat) in the Boots* - இது ஐரோப்பிய மரபுத் தொடர்

*Naked Truth* - இது ஓர் ஆப்பிரிக்க நாட்டார் வழக்காற்றுக் கதை

*Middle Passage* - இது கரீபியன் தீவுகளுக்குக் கொண்டுசெல்லப்பட்ட கறுப்பின அடிமைகளின் அவலச்சாவுகளைப் பற்றியது.

இதேபோல் தமிழிலும் 'உணவெனப்படுவது நிலத்தொடு நீரே' போன்று ஏராளமான பண்பாட்டுத் தொடர்கள் மற்றும் துன்பக்கேணி, அக்னி குஞ்சு போன்ற பருண்மையான பொருண்மையைப்பொதிந்து கொண்டுள்ள எளிய தொடர்களும் உண்டு. மொழி பெயர்க்கும் போது பலரையும் பண்பாட்டுப் பெயர்ப்பியலாமைக்குள்ளாக்குவன.ஆய்வுகள் மேற்கொண்டு அல்புனைவாக வெளிக்கொணர்கையில் கூட அந்தந்த ஆய்வாளர்களின் ஏற்றல்-தவிர்த்தல்களால் இந்த இயலாமை வெளிப்பட்டுள்ளன.மானுடவியல் ஆய்வாளர்கள் பலர் தமிழ்ச் சமூகம்பற்றி மேற்கொண்ட ஆய்வுகள் சுட்டற்குரியன. ஆங்கில மொழியில் எழுதப்பெற்ற எட்கர் தர்ஸ்டன் தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் ஆய்வுத் தொகுப்பு காலனியாதிக்கவாதிகளுக்கான தமிழ்ப்பண்பாட்டுப் பெயர்ப்பாகும். தஞ்சை வட்டார வேளாண் சமூகம் பற்றிய சூஸன் வாட்லி-யின் ஆய்வு, கொங்கு வேளாளச் சமூகம் பற்றிய பிரெண்டா பெக்-இன் ஆய்வு முதலியன இத்தகைய வகைமையிலான தமிழ்ப் பண்பாட்டுப் பெயர்ப்புகள் ஆகும்.

●

கட்டுரையாளர், ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக பேராசிரியர், புதுடில்லி.

தமிழ்நாடு அரசு
மக்கள் சிந்தனைப் பேரவை
இணைந்து நடத்தும்
ஈரோடு புத்தகத் திருவிழா - 2024
அனுமதி இலவசம்
நாள் : ஆகஸ்ட் 02 முதல் 13 வரை
நேரம்: காலை 11.00 மணிமுதல் இரவு 9.30 மணிவரை
இடம் : சிக்கய்ய நாயக்கர் கல்லூரி மைதானம், ஈரோடு
10% தள்ளுபடி
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
அரங்கு எண்கள்
7,8,9
166, 167
189

அறிவுச் செல்வத்தை அள்ளிச் செல்ல வாரீர் !

தமிழ்நாடு அரசு
மக்கள் சிந்தனைப் பேரவை
இணைந்து நடத்தும்

# ஈரோடு புத்தகத் திருவிழா – 2024

ஆகஸ்ட் 02 முதல் 13 வரை – சிக்கய்ய நாயக்கர் கல்லூரி மைதானம், ஈரோடு

தமிழின்முதல் கலைக் களஞ்சியத்தைப் படைத்த

## இலங்கைத் தமிழறிஞர்

## ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை நினைவு

# உலகத்தமிழர் படைப்பரங்கம்

**நூல்களைத் திரட்ட உதவிடுவீர்!**

அன்புடையீர்,

வணக்கம்.

இந்தியா நீங்கலாக உலகெங்குமுள்ள தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளைத் தாய்த்தமிழகத்தில் உள்ளோருக்கு அறிமுகம் செய்யும் நோக்கிலும், அயலகத் தமிழர்களின் படைப்பாற்றல் மற்றும் பண்பாட்டு – கலாச்சார உணர்வுகளை இங்குள்ளோரும் புரிந்து அவர்களை நேசிக்கச் செய்யும் அடிப்படையிலும், தமிழ்கூறும் நல்லுலகில் உள்ள அனைத்துத் தமிழர்களுக்குமான ஓர் உறவுப்பாலமாக – மக்கள் சிந்தனைப் பேரவை தொடர்ந்து ஒவ்வோராண்டும் ஈரோடு புத்தகத் திருவிழாவில் ' உலகத் தமிழர் படைப்பரங்கம் ' என்ற பெயரில் ஒரு சிறப்பு அரங்கத்தை சிரத்தையெடுத்து அமைத்து வருகிறது

ஆயிரக்கணக்கான தலைப்புகளில், பல்லாயிரக்கணக்கான அயலகத் தமிழ்நூல்கள் இந்தச் சிறப்பு அரங்கத்தில் ஆண்டுதோறும் இடம்பெறுகின்றன. வேறுபல நாடுகளில் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகவும், தமிழர்களின் மேன்மைக்காகவும் உழைத்த பெருமக்களின் திருவுருவப்படங்கள் அவர்களைப் பற்றியான குறிப்புகளுடன் இவ்வரங்கத்தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்படுகின்றன. வெளிநாட்டுத் தமிழ் ஆளுமைகளை வரவழைத்து அவர்கள் இங்கு உரை நிகழ்த்த ஏற்பாடு செய்யப்படுகிறது. புத்தகத் திருவிழாவில் பொதுமக்களால் மிகவும் கவனத்திற்குரிய அரங்காக ஒவ்வோராண்டும் இது திகழ்ந்து வருகிறது

இந்த ஆண்டு ' தமிழின்முதல் கலைக் களஞ்சியத்தைப் படைத்த இலங்கைத் தமிழறிஞர் ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை நினைவு – உலகத்தமிழர் படைப்பரங்கம் ' என்ற பெயரில் இச்சிறப்பரங்கம் அமைக்கப்படவுள்ளது

மாநிலந்தழுவிய அளவில் தேசியத்தரத்துடன் நடைபெறும் ஈரோடு புத்தகத் திருவிழாவில் இடம்பெறும் இந்தச் சிறப்பு அரங்கிற்கு நூல்களைத் திரட்டும் முயற்சியில் புத்தகப் பதிப்பாளர்கள், தமிழ் அமைப்புகள், புத்தக ஆர்வலர்கள் என அனைவரும் மனமுவந்து பங்கேற்று உதவுமாறு மக்கள் சிந்தனைப் பேரவை ஓர் அன்பான வேண்டுகோளை முன் வைக்கிறது

வெளிநாட்டில் வாழ்கிற தமிழர்களின் படைப்புகளை இவ்வரங்கத்தில் விற்பனைக்காக வைக்க அந்தந்த நாட்டிலுள்ள படைப்பாளிகள், செயல்பட்டு வருகிற தமிழ் அமைப்புகள் உதவிடலாம்

காலமாகிவிட்ட படைப்பாளிகளாக இருப்பினும் அவர்களது படைப்புகள் சிறந்தவையாக இருக்குமெனில் அவர்களது குடும்பத்தினரோ, தமிழ் அமைப்புகளோ, அவர்களது நண்பர்களோ அப்படைப்புகளைப் பேரவையிடம் சேர்க்கலாம்

வெளிநாட்டில் செயல்பட்டு வரும் பதிப்பகங்களும் இவ்வாறு தாங்கள் பதிப்பித்த வெளிநாடு வாழ் தமிழர்களின் சிறந்த படைப்புகளை அனுப்பலாம்

வெளிநாட்டில் வாழ்கிற தமிழர்களின் படைப்புகள் தாய்மண்ணில் உள்ள அவர்களது இல்லங்களிலோ அல்லது உறவினர்களிடமோ இருக்குமெனில் அவர்களிடம் இவ்விபரம் தெரிவித்து பேரவையைத் தொடர்பு கொள்ள வைக்கலாம்

வாழும் நாடு குறித்த விபரங்களடங்கிய ஆய்வு நூல்கள், அந்தந்த நாடுகளில் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தமிழர்களின் உயர்வுக்காகவும் தொண்டாற்றியவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், அந்தந்த நாட்டின் இயல்பிற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப உருவான படைப்புகளான கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகியவற்றின் தொகுப்புகள், நாவல்கள், காப்பியங்கள், இலக்கிய ஆய்வு நூல்கள், பயண அனுபவங்கள், அறிவியல் நூல்கள், திறனாய்வு நூல்கள், சிறப்பு மலர்கள், அங்கு செயல்பட்டு வருகிற தமிழ் அமைப்புகளின் வெளியீடுகள் போன்ற நூல்கள் வரவேற்கப்படுகின்றன

வெளிநாட்டில் வாழ்கிற தமிழர்களின் படைப்புகளை தமிழகத்திலுள்ள பதிப்பகங்கள் வெளியிட்டிருப்பின் அவை பற்றிய விபரங்களைப் பேரவைக்கு உடனடியாகத் தெரிவித்தால் அப்பதிப்பகங்களைப் பேரவையே அணுகி புத்தகங்களைப் பெறலாம். அல்லவெனில் அப்பதிப்பகத்தார் மூலமாகப் பேரவையின் தலைமையை படைப்பாளிகளே அணுகலாம்

ஒவ்வொரு படைப்பிலும் குறைந்தபட்சம் 10 பிரதிகள் அனுப்பினால் திருவிழா முடிந்தபிறகு விற்பனைத் தொகையில் கழிவுபோக மீதமுள்ள தொகையும், விற்பனையாகாத நூல் பிரதிகளும் உடனடியாகத் திருப்பிக் கொடுக்கப்படும்

தொலைபேசியில் – மின்னஞ்சலில் இவ்விபரங்களை உடனடியாகத் தெரிவிக்கலாம்

**காலம் மிகக் குறைவாக இருப்பதால் உடனடியாகக் களமிறங்கி உதவி செய்வதன் மூலம் இத்திட்டத்தை மிகச் சிறப்பாக நிறைவேற்றிட உரியவர்கள் அனைவரும் மனமுவந்து ஒத்துழைப்பு நல்கிட பேரவையின் சார்பில் அன்புடன் வேண்டுகிறோம்**


தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

**T. STALIN GUNASEKARAN**

President, Makkal Sinthanai Peravai

A-47, Sampath Nagar, Erode - 638 011. | Landline : 0424 2269186

Websites
www.makkalsinthanaiperavai.org
www.erodebookfestival.org
www.tstalingunasekaran.com

Gmail
info@makkalsinthanaiperavai.org
stalingunasekaran.t@gmail.com

Find us on facebook makkalsinthanaiperavaierode
erodebookfestival
YouTube @makkalsinthanaiperavai

கட்டுரை

# வாசிப்புப் புரட்சி

வெ.இறையன்பு ஐ.ஏ.எஸ்.,

உயர்ந்த மலைப்பகுதியில் அதிகாலைப் பொழுதில் பனிமூட்டத்திற்கிடையில் அரைகுறையாக வருகிற சூரிய வெளிச்சத்தில் நடைபயிலும்போது ஏற்படுகிற இதமான அனுபவத்தைப் போன்றது எனக்கு எந்தப் புத்தகத் திருவிழாவிற்குள் நுழையும்போதும் ஏற்படுகின்ற பரவசம். ஓடிக்கொண்டிருக்கின்ற ஓடையில் கால் நுனியை மட்டும் நனைத்து அதன் குளிர்ச்சியை உணர்வதுபோல ஏற்படுகிற கிளர்ச்சியை எப்போதும் ஏற்படுத்துவது அத்திருவிழாவின் நிகழ்ச்சிகள்.

எந்த இயக்கமும் ஏற்படுத்துகிற தாக்கம் நெடுநாட்களுக்கு மனத்தில் தங்கி இருக்கும். அது படிகிற ஒற்றடை அல்ல, கூரையின் மேலே பதிக்கின்ற ஓடு. அறியாமையால் தண்ணீர் உள்ளே ஒழுகாமல் இருக்க நம்மை அறிவைக்கொண்டு பாதுகாக்கும் அமைப்பே தொடர்ந்து மக்களிடம் பேராதரவு பெற்று ஆலமரம்போல கிளைகளை விட்டு பரவி அனைவரையும் அரவணைத்துக் கொள்ளும். அப்படிப்பட்ட இயக்கமாக இருப்பதே மக்கள் சிந்தனைப் பேரவை.

தமிழ்நாட்டின் பேச்சாளர்களை அல்ல - தலைசிறந்த சிந்தனையாளர்களை - ஒருங்கிணைத்து நடத்துகின்ற இயக்கம் அது. வாசிப்பை அங்குலம் அங்குலமாக அடர்த்தியாக்கும் முயற்சியே அங்கு அரங்கேறுகிறது.

ஈரோடு புத்தகக் கண்காட்சியில் உரையாற்றுவது என்பது பேரனுபவம். எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட வாசகர்கள் அமர்ந்திருக்க மொத்த அரங்கமும் ஊசி விழுந்தாலும் ஓசை கேட்கும் அளவிற்குப் பேச்சை அவதானிக்கும் நுட்பம் வேறெங்கும் இல்லாத விசித்திரம். நாற்காலிகள் நிரம்பி வழிய ஓரங்களில் நின்று ஒவ்வொரு சொல்லையும் அவர்கள் உள்வாங்கும் விதம் அத்தனை அழகு. வீணான இரைச்சலோ, நடுவில் எழுந்து போகும் நாகரிகமற்ற தன்மையோ, கைப்பேசியைப் பார்த்துக்கொண்டிருக்கும் கவனக்குறைவோ இல்லாத ராணுவக் கட்டுப்பாட்டைப் போன்ற தன்னிச்சையான எழுச்சி அது.

பார்வையாளர்களை அப்படிச் சுவையான சொற்பொழிவுகளுக்குப் பழக்கி வைத்திருக்கின்ற பெரும் பயிற்சியை நிகழ்த்தியிருப்பவர் தோழர் ஸ்டாலின் குணசேகரன். பார்த்துப் பார்த்து தலைப்புகள் தந்து வந்திருக்கும் அனைவருக்கும் இன்னும் வாசிக்க வேண்டும் என்கின்ற எண்ணம் ஏற்படும் வகையில் தரம் மிகுந்த படிப்பாளிகளை வரவழைத்து நடத்தும் புத்தக விழாவைத் தவமாக மாற்றும் கர்ம யோகி அவர். ஈரோடு புத்தக விழாவை அத்தனை பதிப்பாளர்களும் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். அப்போதுதான் நிறைய நூல்களை வெளியிடுவார்கள். நூற்றுக் கணக்கான நூல்கள் அங்கே தவழ ஆரம்பிக்கும்.

பதிப்பாளர்களே முன்னின்று நடத்தும் சென்னைப் புத்தகத் திருவிழாவிற்குப் பிறகு தனி மனிதர் ஒருவரால் நடத்தப்படுகிற புத்தகத் திருவிழா ஈரோட்டில்தான் என்பது அனைவரையும் சிந்திக்க வைக்கிறது. இன்று மாவட்டங்கள்தோறும் புத்தகத் திருவிழாக்கள் நடப்பதையும், அனைவரும் புத்தகங்களை வாங்கிப் பயனடைய வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருப்பதையும் காணும்போது மகிழ்ச்சி ஏற்படுகிறது. தோழர் ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் நல்ல படிப்பாளி. அவர் எந்தச் செயலைச் செய்தாலும் விரிவும் ஆழமும் தேடி கடுமையாக உழைப்பவர் என்பதற்கு அவர் கொண்டு வந்த ‘விடுதலை வேள்வியில் தமிழகம்’ என்கின்ற நூலே சாட்சி. அந்த நூலை உருவாக்க அவர் மேற்கொண்ட முயற்சிகளும் பயணங்களும் அபரிமிதமானவை.

விடுதலைப் போரில் ஈடுபட்டவர்களையும், அவர்களோடு தொடர்புடையவர்களையும் சந்திக்க நெடும் பயணங்கள் மேற்கொண்டு சிறிதும் அயர்ச்சியடையாமல் தகவல்களைத் திரட்டி மிகப் பெரிய பெட்டகமாக இரண்டு தொகுப்புகளை அவர் கொண்டு வந்தார். தன்னை முற்றிலுமாக அர்ப்பணித்து இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட மாமனிதர்களைப் பற்றி அவர் சொற்பொழிவாற்றினால் நம் விழிகளிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும்.

தோழர் ஸ்டாலின் குணசேகரன் நல்ல சொற்பொழிவாளர். உரத்த குரலில் ஏற்ற இறக்கங்களுடன் பல மணி நேரம் பேசுகின்ற வல்லமை கொண்டவர். வலது காலைச் சற்று சொடக்கிக்கொண்டு எடுத்த தலைப்பில் அனைத்து ஆதாரங்களையும் முன்வைத்துப் பேசுபவர். அவருடைய உரையில் பாரதியும் ஜீவாவும் தவறாமல் இடம்பெற்றிருப்பார்கள். தனிப்பட்ட முறையில் புத்தகத் திருவிழாக்களைத் தாண்டி அவரோடு உரையாடுகிற பல சந்திப்புகள் எனக்கு ஏற்பட்டிருக்கின்றன. அப்போதெல்லாம் வாசிப்பு குறித்தும், அதற்காக அவர் எடுக்கும் முயற்சிகள்

குறித்தும் அவர் விவரிக்கும்போது அவரையும் அறியாமல் அவருடைய கருவிழிகள் விரிவதை நான் பார்த்திருக்கிறேன். ஒரு சின்னக் குழந்தை பட்டாம்பூச்சியைப் பார்த்ததும் பரவசப்படுவதைப்போல இன்னமும் அந்த ஆர்வம் சிறிதும் குன்றாமல் அவர் அடைகாத்து வருகிறார்.

சமூக அக்கறை நிரம்பிய மனிதர் அவர். நாட்டு நலன்களைப் பற்றியும், தமிழின் முக்கியத்துவம் பற்றியும் சிந்தித்துச் செயலாற்றுபவர். அவர் பேசும்போது ஒரு சொல்கூட தனிப்பட்ட உரையாடல்களிலும் தக்கையாக வந்து விழுந்ததில்லை. எப்போதுமே கொள்கை, கோட்பாடு, எதிர்காலத் திட்டம் என்று மட்டுமே அவர் யோசிப்பார். எப்படியாவது ஈரோடு மாவட்டம் முழுவதும் இருக்கின்ற அத்தனை இல்லங்களிலும் ஒரு நூலகத்தை ஏற்படுத்திவிட முடியாதா என்ற ஏக்கம் அவர் கண்களில் உண்டு. வெற்றிடத்திலிருந்து ஒன்றை உருவாக்குவது மிகவும் கடினம். தனி மனிதராக அவர் நிகழ்த்தி வரும் சாதனைதான் புத்தகத் திருவிழாவும், வாசிப்பை ஊக்குவிக்க அவர் எடுக்கும் இமாலய முயற்சிகளும். வெறுமனே புத்தகக் கண்காட்சியை நடத்தி அவர் ஓய்ந்து விடுவதில்லை. மாணவர்களுக்கு உண்டியல் அளிப்பது, அவர்கள் நூல்கள் வாங்க ஒருங்கிணைப்பது, ஈரோடு மாநகரின் தொண்டுள்ளம் படைத்தவர்களின் மூலம் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவது என்று எந்த இடத்திலும் பிசகில்லாமல் அவர் செய்கின்ற அரும்பணி மகத்தானது. அவ்வாறு அவர் சிறப்பாகச் செயல்படுவதற்கு முதுகெலும்பாய் இருப்பது அவர் கட்டமைத்த இளைஞர்களையும் மாணவர்களையும் கொண்ட மக்கள் சிந்தனைப் பேரவை என்கின்ற துடிப்பான அமைப்பு. அதிலிருப்பவர்கள் அத்தனை பணிகளையும் புன்முறுவலோடு செய்வதைப் பார்க்கிறபோது நமக்கு இளைஞர் சமுதாயத்தின் மீது மதிப்பும் நம்பிக்கையும் ஏற்படுகிறது. ஈரோடு புத்தகத் திருவிழாவில் நான் பலமுறை கலந்துகொண்டிருக்கிறேன். முதன்முதலில் ‘ரௌத்திரம் பழகு’ என்கிற தலைப்பைத் தந்து பேசச் சொன்னார். அப்போதுதான் அங்கே அரங்கம் நிறைந்த சுவைஞர்களையும், அவர்கள் மிகவும் நேர்த்தியாக உரையைக் கவனிப்பதையும் கண்டேன். நல்ல கருத்துகளைக் கூறும்போது அவர்கள் கைதட்டி மகிழ்வதையும், புருவங்களை உயர்த்துவதையும், முகபாவனைகளால் அங்கீகரிப்பதையும் கண்டு மகிழ்ந்தேன்.

ஈரோடு புத்தகத் திருவிழாவில் பேசுவதைப் பெரும் பேறாக எண்ணுகிற பலர் உண்டு. வராமலிருப்பதற்கு எக்காரணமிருந்தாலும் அதை ஒருக்களித்து வைத்துவிட்டு அவர்கள் உரை நிகழ்த்துவார்கள். வணிக முறையில் பேசுகிறவர்களையும், துணுக்குத் தோரணங்களைக் கட்டித் தொங்க விடுகிறவர்களையும் தோழர் ஒருபோதும் அங்கீகரித்ததில்லை. மக்களின் மனாதிபதியாக இருந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் உரையாற்றிய பிரம்மாண்டமான நிகழ்வை ஏற்பாடு செய்தவர் அவர். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் அரசியலற்ற ஒரு நிகழ்வுக்குக் கூடுவார்கள் என்பதை நிரூபித்த சரித்திரச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சி அது. அதை ஏற்பாடு செய்வதற்குத் தலையாய தலைமைப் பண்புகளும் பேராற்றலும் தேவைப்படுகின்றன.

தேர்ந்தெடுத்த தலைப்புகளைத் தந்து பேச்சாளர்களுக்கே தெரியாமல் அவர்களிடம் மறைந்திருக்கும் ஆற்றலை வெளிப்படுத்தும் திறன் அவருக்கு உண்டு. ஒவ்வொரு முறையும் வித்தியாசமான தலைப்புகளில் நான் அங்கு பேசியிருக்கிறேன். செயற்கை நுண்ணறிவைப் பற்றிப் பேசினால்கூட கேட்பதற்கு ஆயத்தமாக இருக்கிற மக்கள் வெள்ளம் அது. கும்பல் அல்ல, குறிக்கோளோடு கூடுகிற கூட்டம் அது. ஈரோடு புத்தகத் திருவிழாவில் ஆற்றப்பட்ட பல உரைகள் நூல்களாக வெளிவந்திருக்கின்றன. பெரியவர் திரு தா. பாண்டியன் இந்தியச் சிற்பக் கலையைப் பற்றி ஆற்றிய உரை 'கல்லும் கதை சொல்லும்' என்ற நூலாக வெளிவந்துள்ளது. மிகச் சிறந்த உரை அது. அதைப்போலவே நான் ஆற்றிய ஐந்து உரைகளும் தொகுக்கப்பட்டு 'நாம் ஏன் அடிமையானோம்' என்கிற தலைப்பில் வெளிவந்துள்ளது. உரைகளைப் பதிவு செய்வதும், அவை காற்றோடு பேரோசையாகக் கலந்து விடாமல் மக்களின் மனத்தில் பசை தடவிய மாதிரி பதிய வைப்பதும் பேரவையின் திருவிழாவிற்குப் பின்னான பணிகள். அனைவருக்கும் கலந்து கொண்டதற்கு நன்றியையும், ஒலிப்பேழைகளையும் அனுப்பி பண்பாடோடு நடந்துகொள்ளும் பக்குவம் நிறைந்தவர் அவர்.

மக்கள் சிந்தனைப் பேரவை பார்வையாளர்களைப் பழக்கி வைத்திருப்பதற்கு ஓர் உதாரணம்தான் அவர்கள் அமைதியாக நான் ஆற்றிய 'வன நாயகம்' என்கின்ற உரை. நிறைய அறிவியல் சார்ந்த செய்திகளையும் உள்வாங்கி ஏற்றுக்கொள்கின்ற அறிவுக் கடலாய் அவர்கள் ஆகிப்போயிருப்பதை நான் உணர முடிந்தது.

இந்தப் புத்தகத் திருவிழா ஈரோடிலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் பரவலான வாசிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. கல்வி நிறுவனங்களை ஒருங்கிணைத்து அவர்களிடம் தலைமைப் பண்புகள், வாசிப்பின் முக்கியத்துவம் போன்ற எண்ணற்ற நடவடிக்கைகளை அது எடுத்து வருகிறது. பேரவையிலிருக்கிற அனைவரும் சீருடையோடு களத்தில் ஆற்றுகிற பணிகள் அர்ப்பணிப்பின் அடையாளங்கள். இந்த வாசிப்பு சிறிது சிறிதாகக் கசிந்து மனநிலையிலும், அறிவு நிலையிலும் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை நம்மால் உணர முடிகிறது. ஏற்கெனவே பண்பும் பரிவும் நிறைந்த மாவட்டம் ஈரோடு. அங்கிருப்பவர்கள் மரியாதையுடன் சிறுவர்களையும் அணுகும் பக்குவம் உள்ளவர்கள். அவர்களை உலகம் குறித்த பார்வைக்கு அழைத்துச் செல்லும் பெருமுயற்சியே இந்த நடவடிக்கைகள் அனைத்தும்.

பாரதியின் மீது அசாத்திய மரியாதையும் அன்பும் கொண்ட காரணத்தால் 25 ஆண்டுகளாக பெருந்தொற்றுக் காலத்தில்கூட தொய்வு ஏற்படாமல் பாரதி விழாவை பேரவை நடத்தியிருக்கிறது. மாணவர்கள் தேர்வில் பெறுகிற வெற்றியையும் பரிசீலித்துக் கொண்டாடி மகிழ்ந்திருக்கிறது. உடல்நலம் சற்றுக் குன்றியிருந்தபோதும் அதைப் பற்றி பொருட்படுத்தாமல் 2023-ஆம் ஆண்டில் திருவிழா சிறப்பாக நடக்க வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தார் திரு குணசேகரன். அதற்காகப் பல முறை தொலைபேசியிலே தொடர்புகொண்டு பேசினார். புத்தகத் திருவிழா சிறப்பான வரவேற்பைப் பெற்றதிலேயே அவர் பாதி குணமாகி விட்டார். அவர் உயிர்த்துடிப்பு புத்தகத் திருவிழாவிலும், அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளிலுமே மையமிட்டிருப்பதைக் காண முடிந்தது. புத்தகத் திருவிழாவில் ஒவ்வோர் உரை முடிந்தபோதும் ஏற்பட்ட மனமகிழ்ச்சியைச் சொற்களால் சொல்லிவிட முடியாது. அங்கே வருகிறவர்கள் வேடிக்கை பார்ப்பவர்கள் அல்லர். அத்தனை பேருமே புத்தகங்களைப் பயின்றவர்கள். கை நிறைய நூல்களை வாங்கிச் செல்பவர்கள். ஆரவாரமின்றி அவர்கள் அந்தத் திருவிழாவை ஆண்டுதோறும் வெற்றியாக்கிக் கொண்டிருக்கிறார்கள். மக்களே முன்னின்று நடத்தும்போதுதான் எந்த நிகழ்வும் முழுமை பெறும் என்பதற்கு ஈரோடு ஓர் அத்தாட்சி. சில மாவட்டங்களில் அத்தகைய அமைப்புகள் தோன்றுவதும், அவர்கள் புத்தகத் திருவிழாக்களில் பங்குதாரர்களாக இருப்பதும், ஆண்டுதோறும் மாணவர்களோடும் இளைஞர்களோடும் தொடர்ந்த உரையாடலில் இருப்பதும் அவசியம். அப்போதுதான் வாசிப்பில் இருக்கிற இடைவெளிகளைக் கண்டு உணர்ந்து நிரப்ப முடியும்.

ஈரோடு புத்தகத் திருவிழாவைப் பொருத்தவரை பெருங்கூட்டம் வருவதற்கு இந்த இடைவெளிகளெல்லாம் நிரப்பப்பட்டிருப்பதே காரணம். எல்லாக் கல்வி நிலையங்களிலும் ஏன் வாசிக்க வேண்டும் என்பதற்கான விரிவான விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன. அங்குப் பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்கள் நூல்களை நேசிக்கிறார்கள். அவர்களே முன்னின்று மாணவப் பட்டாளத்தை வாசிக்க வழிநடத்துகிறார்கள். ஒவ்வொரு முறை நான் பேசி முடிந்ததும் ஓடிவந்து என்னுடைய நூல்களின் கையொப்பம் பெறுகிறவர்கள் பெரும்பாலும் ஆசிரியர்களாகவே இருக்கிறார்கள். ஓர் ஆசிரியர் வாசிப்பது ஆயிரம் மாணவர்களைச் சென்றடையும். அவர்கள் பாடத்தை நடத்தும்போது அவர்களையும் அறியாமல் அதில் சுவாரசியம் சேரும். குட்டித் தகவல்கள் குதித்து ஓடும். இவையே பள்ளியை அனைவரும் நேசிக்கும் இடமாக மாற்றும். எல்லா மாவட்டங்களிலும் இடைவெளிகளை நிரப்புவதும், வாசிப்பை இயக்கமாக்குவதும், மக்கள் சிந்தனைப் பேரவை போன்ற அமைப்பை உருவாக்குவதும் இன்றையத் தேவைகள்.

●

கட்டுரையாளர், எழுத்தாளர், பேச்சாளர்
முன்னாள் தலைமைச் செயலாளர், தமிழ்நாடு

கட்டுரை

# ஓர் இதழியலாளரின் சமூகச் செயல்பாடு

**வீ. அரசு**

*“ஆணவக்கொலைதான் இந்நூலின் மையம் என்றாலும் இது மரணத்தின் புத்தகமல்ல. வாழ்வின் புத்தகமும்தான். ஓர் ஆணவக்கொலை எப்படி நிகழ்கிறது என்பதோடு முடிந்து விடாமல் ஏன் நிகழ்கிறது என்னும் கேள்வியையும் எழுப்பி வாழ்வின் அத்தனைப் பக்கங்களையும், சமூகத்தின் அத்தனைத் துறைகளையும் ஆராய்கிறது. நமக்கும் சக மனிதர்களுக்கும் இடையிலான முரணை, நம் லட்சியத்துக்கும் நடைமுறைக்கும் இடையிலான முரணை, நாம் ஒவ்வொருவரும் அணிந்து கொண்டிருக்கும் முகமூடிக்கும் அதன் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கும் நம் நிஜ முகத்துக்கும் இடையிலான முரணை இந்நூல் கவனப்படுத்துகிறது. சமூக நீதியின் நிலமாக முன்னிறுத்தப்படும் இதே தமிழ்நாட்டில்தான் சாதி எனும் அரக்கனும் உயிர்த்திருக்கிறது. வெறுமனே உயிர்த்திருந்தால் போதாதென்று காதலர்களைக் கொன்று புசித்துக் கொழித்துக் கொண்டும் இருக்கிறது. இந்தப் பெருமுரணை, அபாயத்தை இயன்றவரை அழுத்தமாக இந்நூலில் உணர்த்த விரும்புகிறேன். எங்கோ, யாருக்கோ நடைபெற்ற கொடூரமாக ஆணவக் கொலையை எடுத்துக்கொள்ளமுடியாது. கொலையுண்டவர்கள் நமக்கு அந்நியர்களாக இருந்தாலும் கொலையாளியான சாதியை நாம் அனைவரும் அறிவோம். இக்கட்டுரைகளை நான் எழுதிக்கொண்டிருந்தபோது ஒவ்வொரு முறையும் இந்தக் கொலையாளியை மிக அருகிலிருந்து கண்டு திடுக்கிட்டுப்போனேன். பெற்றோரே தங்கள் குழந்தைகளைக் கொல்லும் அளவுக்குச் சாதி வெறி ஒரு நோய் போல் மனிதர்களைப் பிடித்திருந்தது என் இதயத்தில் ஆறாத வடுவை ஏற்படுத்தியது. அந்த வடு இந்நூல் முழுக்கப் பரவியிருப்பதை வாசிப்பவர்கள் உணரலாம்.”*

*(நூல்:ப.19-20)*

இதழியலாளர் இளங்கோவன் ராஜசேகரன் அவர்களின் 'சாதியின் பெயரால்' எனும் நூலில் இடம் பெற்று இருக்கும் வரிகள் மேற்கண்டவை. இவர் வெறுமனே செய்திகளைச் சேகரித்து வெளியிடும் யாந்திரிகமான பத்திரிகையாளராக வாழவில்லை; மாறாக ஈடுபாடுள்ள சமூகச் செயல்பாட்டாளராக வாழ்வதற்குப் பத்திரிகைத்துறையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்ற புரிதலை அவரது பதிவுகள் சொல்கின்றன. தமிழ்ச் சூழலில் சாதி எனும் அரக்கன், கலப்பு மணம் செய்து கொள்ளும் இளம் வயதினரைக் கொலை செய்யும் கொடுமையை சமூக வரலாற்றுப் பின்புலத்துடன் பதிவு செய்திருக்கும் ஆவணமாக இவரது நூல் உள்ளது. தமிழ்ச் சூழலில் சாதி, கலப்பு மணம் எனும் நடைமுறை செயல்பாட்டில் காட்டும் கோர முகத்தை ஏழு நிகழ்வுகளைக் கள ஆய்வு செய்து, அதன் பல்பரிமாணங்களையும் உணர்ச்சிகரமான மொழியில் பதிவு செய்து இருக்கிறார். இப்பதிவின் மூலம் தமிழ்ச் சூழலில் சாதிக்கும் கலப்பு மண நிகழ்விற்குமான தொடர்புகளைப் புரிந்து கொள்ள, இந்த நூலை அடிப்படையாகக் கொண்டு, உரையாடல் நிகழ்த்த முடியும்.

சமூக மாற்றத்தால் ஒடுக்கப்பட்ட, விளிம்பு நிலைச் சமூக மக்கள் கல்வி பெறுதல், பொருளாதார வளர்ச்சி பெறுதல், தாழ்வு மனநிலையைத் தூக்கி எறிந்துவிட்டு சுயமரியாதையோடு வாழ முற்படுதல் ஆகியவை புதிய நிகழ்வுகள் ஆகும். இதனால் இதுவரை ஒடுக்கியவர்களின் உளவியலில் ஏற்படும் காழ்ப்புணர்ச்சி என்பது அதிகமாக வளர்ச்சி பெறுகிறது. இதனைக் கௌசல்யா - சங்கர் நிகழ்வில் இளங்கோவன் பின்வருமாறு பதிவுசெய்கிறார்.

> "அவர்களைப் பொருத்தவரை (ஆதிக்க சாதியின்) கொலையல்ல அது. தண்டனை. மரண தண்டனை விதிக்கப்படும்போது எதற்காக தண்டனை என்பது குற்றவாளிக்குத் தெளிவாகச் சொல்லப் படுகிறது அல்லவா? அந்த வழக்கமே இங்கும் பின்பற்றப் பட்டிருக்கிறது. 'உனக்கென்று ஓரிடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த இடத்தில்தான் நீயும் உங்களைப் போன்றவர்களும் புழங்கிக்கொள்ளவேண்டும். அதன் எல்லையை நீ கடந்திருக்கிறாய். 'எங்க ஜாதி' எல்லைக்குள் நீ அத்துமீறி பிரவேசித்திருக்கிறாய். அதன்மூலம் எங்கள் மாண்பு கெட்டுப் போய்விட்டது. உன் காதலும் திருமணமும் எங்களை அசுத்தப் படுத்திவிட்டது. எனவே நீ இறக்கவேண்டும்'."
>
> (நூல்:ப.29-30)

இதன்மூலம் சாதி மரபுகளை மீறுவது என்பது குற்றம். எழுதப்படாத சட்டம் இது. ஒடுக்கப்பட்ட தலித் சமூகத்தில் பொறியியல் படித்த இளைஞனை, ஆதிக்க சாதிப் பெண் எப்படித் திருமணம் செய்யலாம்? அது சமூகக் குற்றம் என்று சொல்லி மரணத்தைப் பரிசாக வழங்குகிறார்கள். மனித உயிர்க்கொலை என்பது சமூக அறங்களில் முற்றுமுழுதுமாக ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. சமூகத்தின் கொடிய செயல் அது. எந்தச் சமூகமும் அதை ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், சாதி எனும் கொடிய நஞ்சு அதை மிக இயல்பாக எடுத்துக்கொள்கிறது. இந்த சாதிய மனநிலை, இயல்பாக உருவாவதில்லை; மாறாக ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை மாற்றங்களை, ஆதிக்க சாதி மனநிலை ஏற்றுக்கொள்வதில்லை. அதன் வெளிப்பாடு, இளைய சமூகத்தினர் இயல்பாக மேற்கொள்ளும் காதல் உணர்வுகளைக் கொலைசெய்ய முற்படுகின்றனர். சாதி இந்தத் தருணத்தில் மனித சமூகத்திற்கு, வாழ்க்கை அறத்துக்கு முற்று முழுதாக எதிர்நிலை எடுக்கிறது. அது பாசிச வெறியாகக் கட்டமைக்கப்படுகிறது. இதனை ஒவ்வொரு ஆணவக் கொலையிலும் நாம் காணமுடிகிறது. கலப்பு மணம் செய்வோரை கொலைசெய்யும் உளவியல் இப்படித்தான் அமைந்திருக்கிறது. இதனால்தான் தான்பெற்ற குழந்தைகளையே கொலைசெய்யும் அரக்க மனநிலை உருப்பெறுகிறது. இந்த வகையில் சாதி எனும் அரக்கநிலையின் கொடுமை என்பது, வேறெந்த கொடுமைகளையும் விட மிக மோசமாக நடைமுறையில் செயல்படுகிறது. இதனைத் தமிழ்நாட்டில் நடந்த அனைத்து ஆணவக் கொலைகளிலும் பார்க்க முடிகிறது.

மேற்குறித்த சமூக உளவியல் எனும் சாதி அரக்கன், நடைமுறைச் சமூகத்தில் எவ்வாறெல்லாம் செயல்படுகிறது என்பதை இந்த நூலில் இளங்கோவன் அவர்கள் பதிவு செய்திருக்கும் நிகழ்வுகளின் மூலம் காணமுடிகிறது. அந்த நிகழ்வுகள், எவ்வகையான பரிமாணங்களில், அண்மைக் காலங்களில் வடிவம் பெற்றிருக்கிறது என்பதை நமக்குச் சொல்வதாகவே இந்த நூல் அமைந்திருக்கிறது. இவற்றை ஊடகங்கள் எனும் சமூக நிறுவனங்கள் எப்படி வெளிப்படுத்துகின்றன; கடந்த முப்பது ஆண்டுகளில் சமூக சக்தியாக வலுப்பெற்றிருக்கும் சாதிச் சங்கங்களுக்கும் ஆணவக் கொலைக்குமான உறவு எப்படிப்பட்டது; வாக்குச்சீட்டு எனும் துருப்புச் சீட்டு வழியாக 'ஜனநாயகத்தை'ப் பேணும் அரசியல் கட்சிகள், இக்கொடுமையை எதிர்கொள்ளும் பாங்கு எத்தகையது; சமூக ஒழுங்கை கட்டிக்காப்பதற்கு என்று உருவாக்கப்பட்டுள்ள காவல்துறைக்கும் ஆணவக்கொலைகளுக்குமான செயல்பாடுகளை

எப்படிப் புரிந்துகொள்வது ஆகிய பல்வேறு சமூக இயங்குதளங்களின் முகங்களை இளங்கோவன் தோலுரிக்கிறார்.

மேற்குறித்த சமூக நிறுவனங்களின் செயல்பாடுகளின் கோரமுகத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ள பதிவுகளுக்கு இணையாக ஆணாதிக்கம் எனும் சமூக உளவியலுக்கும் ஆணவக் கொலைகளுக்குமான சமூக உறவு எப்படி அமைந்திருக்கிறது; தலித் பெண், தலித் ஆண் என்னும் நிலைகளில் மேற்குறித்த தன்மை எப்படிச் செயல்படுகிறது, சாதியம் சார்ந்த சமூக உளவியலுக்குள் பாலின சமத்துவம் என்பது எந்த வகையில் இருக்கிறது என்பதையும் இந்நூல் பேசுகிறது.

சாதியப் படிநிலைச் சமூகத்தில், ஆதிக்க சாதி, ஒடுக்கப்பட்ட சாதி ஆகிய சமூக எதார்த்தங்கள், ஆணவக் கொலை எனும் நிகழ்வில் எவ்வாறு தொழிற்படுகிறது என்ற உரையாடலும் இந்நூலில் ஊடுபாவாக அமைந்திருக்கிறது. இதில் தலித் சமூகம் எதிர்கொள்ளும் பல்வேறு சமூக உளவியலின் பரிமாணங்களை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. இவ்வகையில் நிறுவன அமைப்பாகவும் சமூக உளவியல் செயல்பாடுகளாகவும் கலப்பு மணம் சார்ந்த ஆணவக் கொலைகளைப் புரிந்துகொள்ளும் அரிய ஆவணமாக இந்நூலைச் சொல்ல முடிகிறது.

கடந்த முப்பது ஆண்டுகளில் மிகப்பெரிய அளவில், மின் ஊடக வளர்ச்சியால் ஊடகச் செயல்பாடுகள் வளர்ந்துள்ளன. காட்சி ஊடகமாக, வீடுகளின் வரவேற்பறையை ஆக்கிரமிப்புச் செய்துள்ள தொலைக்காட்சி, ஆணவக் கொலைகளை விறுவிறுப்பான உணர்ச்சிச் செய்திகளாக வெளிப்படுத்துகிறது. கொலைகளைக் காட்சிப்படுத்துவதன் மூலம், தங்களது பணி முடிந்துவிட்டதாகக் கருதுகிறார்கள். அந்நிகழ்வு குறித்த எந்தவிதமான எதிர் உரையாடல்களையும் நிகழ்த்துவதில்லை. வெறும் நுகர்வாக, ஆணவக் கொலைகள், தொலைக்காட்சி மற்றும் வெகுசன அச்சு ஊடகங்களில் பதிவாகிப் போகிறது. இவை எவ்விதமான சமூகச் செயல்பாட்டிற்கும் உதவுவதில்லை; மாறாக இளங்கோவன் ‘ப்ரண்ட் லைன்’ மற்றும் இந்து எனும் அச்சு ஊடகத்தில், மிக விரிவான உரையாடல்களை நிகழ்த்தினார். இளங்கோவனுக்கு இது வெறும் நுகர்வு சார்ந்த விறுவிறுப்புச் செய்தியாக இல்லை; மாறாக இவ்விதமான கொலைகள் அரங்கேற்றப்படுவதன் பல பரிமாணங்களை தமது துணிச்சலான கள ஆய்வு மூலம் அம்பலப்படுத்தியிருக்கிறார். அரசியல் கட்சிகள், ஆட்சி செய்யும் அரசு, காவல்துறை, சாதிச் சங்கங்கள் ஆகியவை சாதியைக் காப்பாற்றச் செய்யும் கேவலமான நடவடிக்கைகளை அமபலப்படுத்தியுள்ளார். அச்சு ஊடகவழி இவ்வகையான செயல்பாடுகளைச் சாத்தியப்படுத்த முடியும் என்பதை இளங்கோவன் நிரூபித்துள்ளார். இவரது பதிவின் மூலம் வெவ்வேறு அமைப்புகள், சாதியைக் காப்பாற்றச் செய்யும் தில்லுமுல்லுகளை அறியமுடிகிறது. சமூகக் கொடுமைக்கு எதிரான போராட்ட வடிவமாகச் செயல்பட வேண்டும் என்பது ஊடக அறம். ஆனால், இவை வெறும் பொழுது போக்கு, விளம்பரம் என்னும் வணிகக் கருவிகளாகவே உள்ளன. இதில் சமூகப் போராட்டம் குறித்தும் எழுத முடியும் என்ற பதிவாக, இளங்கோவன் அவர்களுடைய கட்டுரைகள் அடங்கிய இந்நூல் அமைந்துள்ளது.

தவிர்க்க முடியாத சமூக மாற்றம் என்பது, சமூகத்தில் நிகழத்தான் செய்யும். வளர்ச்சி அடைந்த தொடர்பு சார்ந்த மின் ஊடகங்கள் மனிதத் தொடர்பை மிக எளிதாகவும் வலுவானதாகவும் ஆக்கியுள்ளன. ஆண்-பெண் தொடர்புகள் எல்லாம், நிலவுடைமைப் பண்பாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டுச் செயல்படுவதற்கு தொடர்புக் கருவிகள் வழி வகுக்கின்றன. இதனால் சாதி போன்ற நிலவுடைமைக் கழிவுகள் ஆதிக்கம் செலுத்த முடியாது போகின்றது. அனைத்து மனித சமூகமும் தங்களுக்குள் தொடர்புகொள்ள முடிகிறது. இதற்குள் சாதிய முரண்கள் செயல்பட இயலாது போகிறது. சாதியை மீறி ஆண்- பெண் என்ற உறவு நிலைகளே நடைமுறைச் செயல்பாடாக வடிவம் பெறுகிறது. இதற்குள் சாதி இல்லை. பொதுவெளிகளில் நடமாடும் அனைத்து இளம் உள்ளங்களும் தமது விழைவை வெளிப்படுத்தி காதல்வயப்படும் சமூக நிலை இயல்பாக சாத்தியமாகிறது. ஆனால், நிலவுடைமைப் பண்பாட்டின் எச்சமாக இருக்கும் சாதி எனும் சமூகச் செயல், மேற்குறித்த தன்மைகளை ஏற்றுக்கொள்வதில்லை. சமூக வளர்ச்சி குறித்தப் புரிதல் இல்லை. இதனால் கலப்பு மணம் செய்துகொள்ளும் இளம் உயிர்களைக் கொலை செய்கிறார்கள். இந்தப் பின்புலத்தில்தான் சாதிச் சங்கங்கள், அரசு நிறுவனங்கள், பல்வேறு பொது நிறுவனங்கள் செயல்படுகின்றன. இவற்றை ஆதாரப் பூர்வமாகப் புரிந்துகொள்ள இளங்கோவன் நூல் உதவுகிறது.

தமிழ்ச் சூழலின் சமூக இயங்குதளத்தில், ஓட்டு வங்கி சார்ந்து தேர்தல் களம் செயல்படுகிறது. அது செயல்படும் முறை வெளிப்படையாக இல்லாமல் இலைமறை காயாக 1950கள் தொடங்கி 1990கள் வரை இருந்தது. இக்காலங்களில் திராவிடக் கட்சிகள் என்பவை, சுயமரியாதை எனும் சமூக நீதி மரபில் உருவானவை என்பதால் சாதியை வெளிப்படையான பேசுபொருளாகக் கொள்வதில்லை. நான்கு

சுவர்களுக்குள் நிகழும் உரையாடலாக இருந்தது. அம்பேத்கர் நூற்றாண்டுக்குப் பின் தலித் இயக்கம்; குறிப்பாக தொல்.திருமா அவர்களின் இயக்கம் எழுச்சியாக உருவாகி வருகிறது. இதன் எதிர்நிலையாக, பாட்டாளி மக்கள் கட்சி எனும் பெயரில் இருக்கும் வன்னிய சாதிக் கட்சி, சாதி என்பதை ஓட்டு வங்கியாக கட்டமைக்கிறது. சாதிய ஒன்று திரட்டல் என்பதை மறுகட்டமைப்பு செய்கிறது. இவ்வாறு உருவான சாதியச் சங்கங்கள் நடத்திய கொலைதான் திவ்யா - இளவரசன் கொலை என்பதைக் கள ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

தருமபுரி மாவட்டம் 1970 கள் தொடங்கி மாவோயிச இயக்கங்கள் உருப்பெற்ற இடம். இதில் இளவரசன், திவ்யா சாதிய ரீதியாக வேறாக இருந்தாலும், அரசியல் சார்ந்து கலப்பு மணங்களுக்கு எதிரானவர்களாக இல்லை. திவ்யாவின் தந்தை மாவோயிச இயக்கச் சார்பில் இருந்தவர். ஆனால், புதிதாக உருவான வன்னியர் சாதிச் சங்கம்; இளவரசன் - திவ்யா கலப்பு மணத்தை, ஓட்டு வங்கியாக மாற்றும் வேலையைச் செய்யத் தொடங்குகிறது. திவ்யாவின் தந்தையை மனரீதியாகக் கொலைசெய்து, பின்னர் தற்கொலை செய்துகொண்டதாகப் பொய்யான தகவல்களைப் பரப்பி, ஒடுக்கப்பட்ட சாதி மக்கள் வாழும் மூன்று கிராமங்களைத் தீ வைத்துக் கொளுத்துகிறது வன்னிய சாதி வெறிச் சங்கம். தொடர்புடைய குடும்பங்கள், தங்களது பிரச்சினையாக கலப்பு மணத்தைக் கொள்ளாத சூழலில், வன்னியர் சங்கமே பிரச்சினைக்குள்ளாக்கி, திவ்யா தந்தை இறப்புக்கும் இளவரசன் கொலைக்கும் காரணம் ஆகின்றனர். இருவரையும் கொலைசெய்து விட்டு, அவர்கள் தற்கொலை செய்துகொண்டதாக அறிவிக்கின்றனர். இதனை அரசால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையங்களும் காவல்துறையும் ஏற்கின்றன. இதன் மூலம் சாதி மறுப்புத் திருமணம் என்பதில் சாதிச் சங்கங்கள் கொண்டுள்ள இடத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது.

திவ்யா - இளவரசன் என்பதில் வன்னியர் சாதிச் சங்கம் நிகழ்த்திய கொலை என்றால், சுவாதி-கோகுல்ராஜ் நிகழ்வில் கொங்கு வட்டார வேளாளக் கவுண்டர் சங்கம் நிகழ்த்திய கொலை கோகுல்ராஜ் கொலை. அங்கு வழக்கு குறித்த செயலில் ஈடுபட்டவர் காவல் துணைக் கண்காணிப்பாளராக இருந்த, பட்டியல் இனத்தைச் சேர்ந்த விஷ்ணு பிரியா. சாதிச் சங்கங்கள் மேற்குறித்த இளவரசன் கொலையைத் தற்கொலை என்று பொய்யாகக் கட்டமைத்ததைப்போல் சுவாதி-கோகுல்ராஜ் நிகழ்வில், கோகுல்ராஜ் மற்றும் விஷ்ணுப் பிரியா கொலைகளைத் தற்கொலை என்றே கட்டமைத்துள்ளார்கள். ஆனால், கோகுல்ராஜைக் கொலைசெய்த கொங்கு வேளாளக் கவுண்டர் சாதித் தலைவன் யுவராஜ், கோகுல்ராஜை கொன்றதை இடதுசாரி மரபு சார்ந்த வழக்கறிஞர் தோழர் ப.பா.மோகன் மற்றும் பல தோழர்களின் தொடர்ச்சியான கூட்டுச் செயல்பாட்டில் ஆயுள் தண்டனைக் குற்றவாளியாக இப்போது சிறையில் இருக்கிறான்.

சாதிச் சங்கங்களுக்கும் ஆணவக் கொலைகளுக்குமான தொடர்பை இளங்கோவன் பதிவு செய்ததின் மூலம், சாதி என்ற நிலவுடைமைப் பண்பாட்டிற்கும் சாதிச் சங்கங்கள், ஓட்டு வங்கி சார்ந்த அரசியல் கட்சிகளாக வடிவம் பெற்றுச் செயல்படுவதற்குமான தமிழகச் சூழலைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆணவக் கொலைகள் வெறுமனே கலப்புமணப் பிரச்சினை மட்டுமல்ல; அது அரசியல் பின்புலம் சார்ந்த சாதிச் சங்கங்களின் அண்மைக்கால வெளிப்பாடு என்பதையும் அறிய முடிகிறது. இவ்வகையான நிகழ்வுக்கு, நிர்வாகம் சார்ந்த அனைத்து நிறுவனங்களும் உதவி செய்துள்ளன. குறிப்பாகக் காவல்துறை, அரசு உருவாக்கும் ஆணையங்கள், உள்ளூர்க் கட்டைப் பஞ்சாயத்துகள் ஆகிய அனைத்தும் ஆணவக் கொலைகளை மறைத்து, இயல்பான சமூக நிகழ்வு என்பது போல கட்டமைப்பதைக் காண்கிறோம்.

நிறுவனங்கள் ஆணவக்கொலைகளை எதிர்கொள்ளும் போக்கைப் புரிந்துகொள்ளும் அதே வேளையில் சாதிப் படிநிலை சார்ந்த ஒடுக்குமுறையும் பெண் ஒடுக்குமுறைக்குக் காரணமான ஆணாதிக்க மரபும் ஆணவக் கொலைகளில் தொழிற்படும் முறைமை குறித்தும் இளங்கோவன் பதிவு செய்திருப்பதைக் காண்கிறோம். இந்நூலில் பேசப்படும் ஏழு ஆணவக் கொலை தொடர்பான நிகழ்வுகளில் அதிகமாக கொலைசெய்யப்பட்டவர்கள் பெண்களே. ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும் நடைபெறும் கொலைகளில், பெண்களைக் கொலை செய்வதின் மூலம் சாதித் தூய்மையைக் காப்பாற்ற பெண்களைக் கொலைசெய்து ஆணாதிக்கத்திற்கு வலு சேர்க்கின்றனர். சமூக உளவியலில் பெண் ஒடுக்குமுறை ஆணவக் கொலைகளிலும் செல்வாக்குச் செலுத்துவதைக் காண்கிறோம். இது தொடர்பான விரிவான விவரங்களை இளங்கோவன் பதிவு செய்திருக்கின்றார்.

ஆணவக் கொலைகளில் அதிகபட்சமாகக் கொலை செய்யப்பட்டவர்கள் தலித்துகள் எனும் பட்டியல் இன மக்களே என்பதையும் இந்த நூல் பேசுகிறது. படிநிலைச் சாதியச் சமூக அமைப்பில்,

அடியில் இருக்கும் சாதிகளே ஒடுக்குமுறைக்குப் பெரிதும் ஆளாகும் கொடுமை நிகழ்கிறது. ஆணவக் கொலையிலும் அதுவே எதார்த்தமாகிறது. ஒடுக்கப்பட்ட சாதிகளுக்குள்ளும் உள்ள படிநிலை சார்ந்து ஆணவக்கொலைகள் ஆங்காங்கு நடப்பதையும் இந்நூல் பதிவுசெய்துள்ளது.

இளங்கோவன் அவர்களுடைய நூல் குறித்து அறிவதற்கு, அவர் பதிவு செய்திருக்கும் அவரது மனநிலை குறித்த செய்திகள் கவனத்துக்குரியவை. அவர் சொல்கிறார்....

“ரயில்வே தண்டவாளத்துக்கு அருகில் இளவரசனின் உடல் கண்டறியப்பட்டுள்ள செய்தி என்னை வந்தடைந்தபோது பெரிய பாறாங்கல் என்மீது வந்து விழுந்ததுபோல் இருந்தது. இது உண்மைதானா என்று மீண்டும், மீண்டும் உறுதிபடுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. இது உண்மையாக இருக்கக்கூடாது என்று என் மனம் அரற்றிக்கொண்டே இருந்தது. அதற்கு முந்தைய தினம்தான் இளவரசனைச் சந்தித்திருந்தேன். பேசியிருந்தேன். அவருடைய முகம் என் நினைவுகளை நிறைக்க ஆரம்பித்தது. அவருடைய புன்னகை வளர்ந்து, வளர்ந்து என்னைப் பிடித்து உலுக்க ஆரம்பித்தது.

> “பல இரவுகள் உறக்கமின்றித் தவித்தேன். எதையோ பறிகொடுத்தது போல் வெறுமையாக இருந்தது. கிட்டத்தட்ட ஒரு வாரம் நான் நானாகவே இல்லை. என்னுடைய இயல்பு நிலை பறிபோய் விட்டது போல், இன்னது என்று சுட்டிக்காட்டமுடியாத ஏதோவொன்று என்னிடமிருந்து பறிக்கப்பட்டதுபோல் உணர்ந்தேன். என் தவிப்பு முழுமையாக அடங்குவதற்கும் இதிலிருந்து நான் மீண்டுவருவதற்கும் எனக்கு மேலும் அதிகக் காலம் பிடித்தது.”

*(நூல்:ப-51)*

பத்திரிகையாளன் சமூக ஈடுபாடுள்ள மனித நேயமிக்கவராகவும் இருப்பது அவசியம் என்பதை இப்பதிவு சொல்கிறது. “சாதியின் பெயரால்” எனும் இந்நூல் வெறுமனே ஆணவக் கொலைகளின் பதிவு மட்டுமல்ல. மாறாக, தமிழ்ச் சமூகத்தின் கடந்த நாற்பது ஆண்டுகளின் வரலாறு; இச்சமூகத்தில் ஜனநாயக மரபு என்பதாக தேர்தல் நடைபெறும் முறைகளும், அதில் வாக்கு வங்கியாக சாதியக் கூடுகை நிகழ்கிறது. அதனைச் சாதியச் சங்கமாக கட்டமைத்து வரலாற்றைப் பின்னோக்கி இழுப்பது குறித்த நிகழ்வுகளை ஆவணமாக்கியுள்ளார் இளங்கோவன். சமூக வரலாற்று மாணவர்களுக்கான தரவு நூலாக இந்நூல் அமைகிறது. பாலின ஒடுக்குமுறை, சாதிய படிநிலை சார்ந்த ஒடுக்குமுறை எனும் சமூகவியல் சார்ந்த சமூக நிகழ்வுகளை அறிய உதவும் அரிய ஆவணமாக இந்நூல் அமைகிறது. சமூகச் செயல்பாட்டாளர்கள் அனைவரும் வாசிக்க வேண்டிய நூல் இது. இதனை உருவாக்கிய இளங்கோவன் ராஜசேகரன் அவர்களுக்கு எனது நன்றியும் வணக்கங்களும் பாராட்டுக்களும்.

இந்நூலின் இறுதியில் தலித் சமூகம் சார்ந்து நடைபெறும் கலப்பு மணத் தம்பதியர் தொடர்பான ஆங்கிலக் கட்டுரை மொழியாக்கம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. சாதி என்பதன் சமூகப் படிநிலையாக்கம், தலித் சமூகங்களுக்குள் தொழிற்படுவதைப் புரிந்துகொள்ள அக்கட்டுரை உதவுகிறது. இந்நூலை வாசிக்கும்போது மொழியாக்கம் செய்யப்பட்டது என்ற உணர்வு எந்த இடத்திலும் இல்லை. தமிழில் எழுதியதைப்போல் மொழியாக்கம் செய்துள்ள மருதன் மற்றும் நிவேதிதா லூயிஸ் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். வெளியிட்ட பதிப்பகத்திற்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

●

கட்டுரையாளர், எழுத்தாளர்,
ஓய்வுபெற்ற பேராசிரியர்

**புத்தகங்கள் அச்சிட**
**அற்புதத் தீர்வு**
**குறைந்த செலவு**
**அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

திறனாய்வு

# பொதுவெளிக்கு நகரும் பெண்வெளி

து.கலைச்செல்வன்

பிணக்கூராய்வுத் தொழிலாளர்களின் வாழ்வை விவரிக்கிறது ஆண்டாள் பிரியதர்ஷினியின் கிடங்கு நாவல். பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டுப் பிணக்கூராய்வுக் கூடத்தில் எட்டு வயதுசிறுமி கிடப்பதில் இருந்து நாவல் தொடங்குகிறது. பொதுவெளியில் பெண் ஒருத்தி தன்னை நிலைநிறுத்திக் கொள்வதாக நாவல் முடிகிறது.

ஆணாதிக்கம் நிறைந்த பொதுவெளியில் பெண் நுழைவதற்கான திறப்பை நாவல் ஏற்படுத்தியிருக்கிறது. சாதியவெளி, திருநங்கைகளுக்கான தனிவெளி, குடும்பவெளி, பெண்ணியவெளி போன்றவை நாவலில் நிறுவப்பட்டுள்ளன.

தொழிற்சங்கத் தலைவரான மாயாண்டி முப்பது வயதில் மனைவியை இழந்தவர். குழந்தைகளுக்காகத் திருமணம் செய்துகொள்ளாமல் வாழ்கிறார். உதயா, இதயா ஆகிய இருவரும் மாயாண்டியின் குழந்தைகள். முதல் தலைமுறை பட்டதாரிகள். உதயா வேலைதேடி அலைகிறான். அவன் தலித் என்பதாலும் அவனின் அப்பா பிணவறைக்கூடத்தில் வேலை செய்கிறார் என்பதாலும் அவனுக்கு வேலை கிடைக்காமல் துன்பப்படுகிறான்.

மாயாண்டிதான் பிணவறைக் கூடத்தில் சீனியர். அவருக்கு உதவியாளர்கள். பழனி, ரவுசு என்ற திருநங்கை, ஐம்பத்தைந்து வயதுடைய சங்கரத்தம்மாவும் இருக்கின்றனர். ரவுசு குடும்பத்தினரால் கைவிடப்பட்டவள். பிணவறையில் வைத்து ரவுசுவின் ஆணுறுப்பை அறுத்துப் பழனிதான் பெண்ணாக மாற்றினான். ஓடிப்போன ஒரே மகனை எண்ணியே வாழ்வைக் கழிக்கிறாள் சங்கரத்தம்மா. பிணவறைக்கூடமும் மாயாண்டியின் குடும்பமுமாக நாவல் நகர்கிறது.

பிணவறைக்கூடம் கொரானா கால நெருக்கடியில் ஏசி வசதி இன்றி பிணத்திலிருந்து புழுக்கள் ஊர்கின்றன. பிணவாடை வீசுகிறது. ஈக்களின் கூட்டமும் ரத்தக் கறையும் அறையில் நிறைந்திருக்கின்றன. மின்விசிறியும் பழுதானதால்




கிடங்கு | ஆண்டாள் பிரியதர்ஷினி
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
விலை ரூ.120/-

புழுக்கத்தில் பிணங்களோடு பிணங்களாக இவர்களும் அதிகாரிகளை எதிர்த்துப் பேசமுடியாமல் வாய்மூடி நிற்கின்றனர்.

கொரானா காலத்தைக் காரணம் காட்டி பல்வேறு மோசடிகள் அரங்கேறுகின்றன. பிணவறையில் உள்ளும் வெளியும் நிலவும் துன்பக் காட்சிகள் நாவலில் காட்டப்படுகின்றன. பிணத்தை அறுப்பதிலும் தைப்பதிலும் நடக்கும் தேர்ந்த செயல் காட்டப்படுகிறது. தொழில் செய்வதில் உள்ள துன்பம் நாவலில் இழைந்தோடுகிறது. மற்றொருபுறம் மாயாண்டியின் குடும்பம் வாழ்வு காட்டப்படுகிறது.

மாயாண்டியின் மகன் இறக்க அவனின் உடலையும் போஸ்ட் மார்ட்டம் செய்ய வேண்டிய நிலை வருகிறது. பழனிதான் எல்லாவற்றையும் செய்கிறான். தன் மகன் இறந்த துக்கத்தால் மாயாண்டியால் வேலை செய்ய முடியவில்லை. ஒரு கட்டத்தில் தன் வேலையை ராஜினாமா செய்ய முடிவு செய்கிறான். ஆனால் அந்தச் சமயத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சாலைவிபத்தில் மாயாண்டி இறக்கிறான். அதனால் மனமுடைந்தவளாக இதயாவும் அவளுக்குத் துணையாக ரவுசுவும் இருக்கிறாள். மாயாண்டியின் இறப்பிற்காக ஒரு இரங்கல் கூட்டம் நடத்தப்படுகிறது. அதில் இதயாவிற்குக் கருணை அடிப்படையில் வேலை வழங்க முடிவு செய்யப்படுகிறது. ஆனால் அதை இதயா மறுத்து, ஆதரவற்ற பெண்களைக் கொண்டு உணவகம் ஆரம்பிப்பதாகக் கூறுகிறாள்.

**பொதுவெளியில் ஒரு தனிவெளி**

மருத்துவமனையில் தனிவெளியாகப் பிணக்கூராய்விற்கான இடம் அமைகிறது. அரசு மருத்துவமனை வளாகத்தில் இறுதியாக உள்ள இடம் அதுதான். இத்தனிவெளி பிணக்கூராய்வு செய்யும் தொழிலாளர்களுக்கு மட்டுமே உரியதாக இருக்கிறது. மருத்துவர்கள் வந்து செல்பவர்களாக இருக்கிறார்கள். இத்தொழிலாளர்கள் தலித்துக்களாக இருக்கின்றனர். பிணக்கூராய்விற்கான அடிப்படை வசதிகள் அங்கு இருப்பதில்லை. அவர்கள் வாழும் பகுதியும் அதைப்போலவே இருப்பதை நாவல் காட்டுகிறது.

**சாதிய வெளி**

பிணக்கூராய்வு செய்யும் மாயாண்டி, பழனி, ரவுசு, சங்கரம்மா போன்றோரை மனிதராகக்கூட இச்சமூகம் மதிப்பதில்லை. இதை நாவலில் பல இடங்களில் ஆண்டாள் பிரியதர்ஷினி காட்சிப்படுத்துகிறார். மாயாண்டி என்ற பெயரில் வீசும் சாதியம் அவரின் குழந்தைகளான உதயா, இதயா என்ற பெயர்களில் இல்லை. உதயா என்பது உதயசூரியன் என்ற பெயரின் சுருக்கம்.

உதயா இன்ஜினியரிங் படித்தவன். அவன் திறமையானவான இருந்தபோதிலும் அவனுக்கு வேலைக்கான வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. "அப்பனை மாதிரி நானும் கருப்புத் தோலு, அழுக்கு மூஞ்சி, எவனுக்குமே ஆகல...." *(ப.24)* என்கிறான். முகத்தோற்றத்தையும் உடலின் நிறத்தையும் கொண்டு சாதியத்தைக் காணும் சமூகத்தைக் கண்டு மனம் வெதும்புகிறான். பொதுவெளியில் டீக்கடை, பக்கோடா கடைகூட போட்டுப் பிழைத்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறான். ஆனால் பொதுவெளியில் தலித்தான உதயா பக்கோடா கடைகூட வைத்து வாழ முடியாது என்கிறது நாவல்.

ஊரின் விளிம்பில் தலித்துகளுக்கான வெளி அமைந்திருக்கிறது. "ஊருக்கு ஒதுக்குப்புறமாகச் சொந்தமாகக் கால் ஊன்றி நிற்கக் கொஞ்சம் நிலமும், கூரையாக வீடும் என்கிற கனவை 50 வயசுக்கு மேல்தான் நிறைவேற்ற முடிந்திருக்கிறது" *(ப.20)* தலித் மக்களால். வங்கியில் கடன் வாங்குவதிலிருந்து வீட்டைக் கட்டி முடிப்பதுவரை முட்டுக்கட்டைகளால் வாழ்வு முறிபடுவதையும் நாவல் சொல்கிறது.

ஊரின் மையத்தில் அம்பேத்கர் பெயரினை வைக்க முடியுமா? என்ற கேள்வியினை நாவல் எழுப்புகிறது. உயர் சாதியைச் சார்ந்த பெரிய மனிதர்கள் இருக்கும் இடத்துக்கு அம்பேத்கர் பெயரினை வைக்கமுடியாத நிலையினை எண்ணி வருந்துகிறது; உலகத் தலைவர் அம்பேத்கர் உள்ளூரில் எல்லை-யிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் அவலத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

நூல்காரங்க ஏற்படுத்திய ஏற்பாடுதான் நல்லநேரம் என்றும் மூச்சுவிடும் எல்லா நேரமும் நல்ல நேரம்தான் என்ற பகுத்தறிவை ரவுசுவின் வழி பேசுகிறார் ஆண்டாள் பிரிதர்ஷினி. பறை அடித்துக் கொண்டாடும் திராவிடத்தைச் சொல்கிறது. பறை இசைக்குப் பயந்தவர்களாகப் பார்ப்பனர்களைக் காட்டுகிறது.

*அம்பேத்கர்னா அலர்ஜி, பறை அலர்ஜி, கவுச்சின்னா அலர்ஜி, புதுமைன்னா அலர்ஜி, சமத்துவம்னாக்கூட அலர்ஜிதான். ப.22*

என்று புதுமையினையும் சமத்துவத்தையும் ஏற்றுக்கொள்ளாத வைதீகத்தின் உண்மை முகத்தை நாவல் காட்டுகிறது.

**திருநங்கை வெளி**

திருநங்கைகள் குறித்துப் பொதுப்புத்தி சார்ந்து பேசப்படும் பொட்டை என்ற சொல் நாவலில் வருகிறது. ரவுசு திருநங்கை என்றறிந்ததும் அவர் குடும்பம் அவரைக் கைவிட்டு விட்டது. ரவுசு அண்ணன், அக்கா என்று இருந்தும் யாரும் இல்லாத அனாதையாக வாழ்வை நடத்துகிறாள். ரவுசுவிற்கு திருநங்கைக்கான அறுவை சிகிச்சையைப் பழனிதான் செய்கிறான். பழனியின் மீது அன்பினை ரவுசு வெளிப்படுத்துகிறாள். நாவலின் இறுதியில் இதயாவிற்குத் துணையாக இருப்பதோடு ஆறுதல் மொழி பேசும் நம்பிக்கைப் பாத்திரமாக ரவுசு காட்டப்படுகிறாள்.

**குடும்ப வெளி**

குடும்பம் என்ற நிறுவனம் சிதைந்துவிடக் கூடாது என்ற எண்ணம் நாவலில் பல இடங்களில் வருகிறது. பெண்ணைப் பொதுவெளியில் இயங்க வைக்கும் ஆண்டாள் பிரியதர்ஷினி குடும்பம் என்ற நிறுவனம் சிதைந்துவிடுவதைக் கண்டு வருந்துகிறார். அனாதைப் பிணங்களாக இருப்பவர்களுக்கும் குடும்பம் இருந்திருக்கும். அவர்கள் யாருமற்றவர்களாக அடக்கம் செய்யப்படுவோம் என்று எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அடக்கம் செய்யப்படும்பொழுதுகூட அழுவதற்கு ஆளில்லையே என்று வருந்துகிறது. ஆசையாக வளர்க்கும் பெற்றோரை இறுதிக் காலத்தில் கவனிக்காமல் விடுபவரைக்கண்டு மனம் வருந்துகிறது.

பழனி தன் குடும்பத்தோடு நேரத்தைச் செலவு செய்ய முடியவில்லை என்று கவலைகொள்கிறான். குடும்பம் தன்னை அனாதையாக விட்டுவிட்டதே என்று ரவுசு வருந்துகிறாள். தன் குடும்பத்தில் தந்தையும் அண்ணனும் இறக்கத் தான் அனாதை ஆகிவிட்டோமோ என்று இதயா வருந்துகிறாள். தொலைந்துபோன மகனை எண்ணி வருந்தியவளாக சங்கரம்மா வாழ்வைக் கழிக்கிறாள் என்று தொடர்ச்சியாகக் குடும்பவெளி கட்டமைக்கப்பட்டுள்ளது. குடும்பம் என்ற வெளிக்குள்ளே பாத்திரங்கள் உலவுகின்றன, ஊசலாடுகின்றன, வருந்துகின்றன. குடும்பவெளி சிதையாமல் இருக்க வேண்டும் என்பதையும் சிதைவதைக்கண்டு மனம் வருந்தும் நிலையினையும் நாவல் காட்சிப்படுத்துகிறது.

**பெண்ணிய வெளி**

நாவலின் தொடக்கத்தில் அடிமைப் பட்டுக்கிடக்கும் பெண் இறுதியில் தன்னிச்சையாகச் செயல்படுகிறாள். சமூகத்தில் பெண்வெளி பற்றிய எண்ணங்கள் பலவற்றைத் தவிடுபொடியாக்குகிறார் ஆசிரியர். பெண்கள் ஒரு வெளியிலிருந்து மற்றொரு வெளிக்குச் செல்ல நாவலில் அனுமதிக்கப்படுகிறார்கள். சுடுகாட்டுவெளிக்குள் செல்லும் கல்லூரிப் பெண்கள் அனாதைப் பிணத்தை அடக்கம் செய்கின்றனர். ஆண்தான் தகனம் செய்ய வேண்டும் என்ற கருத்து உடைபடுகிறது. கன்னிப் பெண்கள் சுடுகாடு செல்லக்கூடாது என்ற பழமை மாற்றப்படுகிறது. *“ஒரு காலத்துல வீதிவரை மனைவின்னாங்க, இப்ப மயானம் வரை பெண்கள் வர்றாங்கன்னா சும்மாவா?”(ப.49)* என்று பெண் முன்னேற்றத்தை நாவல் எடுத்துக்காட்டுகிறது. ஓரிடத்தில் பொதுப்புத்தி சார்ந்து ‘தேவடியாப் பசங்க’ என்று பெண்ணை மையமிட்ட கெட்ட வார்த்தையை நாவல் கூறுகிறது.

தந்தையின் இறப்பினால் கிடைக்கும் கருணை அடிப்படையிலான வேலையினை “நவீன கொத்தடிமை மாதிரி நானும் இருக்கணுமா?” என்று கூறி இதயா உதறுகிறாள். கருணை அடிப்படையிலான வேலை தனக்குத் தேவையில்லை என்றும் எல்லாரையும் போலத் திருமணம், குழந்தை என்றும் செக்குமாட்டு வாழ்க்கை வாழ விரும்பவில்லை என்றும் கூறுகிறாள்.

இதயா ஒடுக்கப்பட்ட பெண்களைக் கொண்டு உணவகம் ஆரம்பிப்பது, பெண் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கான வாய்ப்பாக அமைகிறது. யாருக்கும் அடிமைப்படாமல் தன் வாழ்வைத் தானே தீர்மானிக்கும் சக்தியாகப் பொதுவெளியில் பெண் இருக்க வேண்டும் என்ற ஆசிரியரின் எண்ணம் வெளிப்படுகிறது. மாயாண்டியின் திடீர் இறப்பு, உதயாவின் இறப்பு குறித்த தகவல் இல்லாமை, இதயா எடுக்கும் முடிவு பற்றிய அழுத்தம் போன்றவை நாவலில் இயல்பாக இல்லையோ என்ற எண்ணம் வாசிக்கும் வாசகருக்கு வருதல் தவிர்க்க இயலாது. ஆனாலும் நாவல் பெண்ணை ஒருவெளியிலிருந்து மற்றொரு வெளிக்குச் சுதந்திரமாகச் செல்ல அனுமதிப்பதும் பெண் தனக்கான வாழ்வைத் தானே தீர்மானிக்க முயல்வதுமான முயற்சிகள் நாவலைத் தொடர்ந்து வாசிக்கச் செய்கின்றன.

●

கட்டுரையாளர், முனைவர் பட்ட ஆய்வாளர்,
தந்தை பெரியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருச்சி-23

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 280/-




₹ 500 /-




₹ 380/-

₹ 340 /-

கட்டுரை

# காலனியத்தின் துவக்கம்

## திருநெல்வேலி படையெடுப்பு, வருவாய் வசூலிப்பு மற்றும் நிதி முறைகேடுகள், 1755

கி. மகாராஜ பாரதி

**1754**-ஆம் ஆண்டு ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனிக்கும், பிரெஞ்சு கிழகிந்தியக் கம்பெனிக்கும் இடையே ஏற்பட்ட பாண்டிச்சேரி உடன்படிக்கையின் அடிப்படையில், கர்நாடகப் பகுதியில் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கம் உறுதி செய்யப்பட்டது. அதே சமயம், வணிக முற்றுரிமையை தொடர்ந்து தக்க வைத்திருப்பதற்கும், அரசியல் ரீதியாக பிரெஞ்சுக்காரர்களை தனக்குக் கீழாக வைத்துக்கொள்ள விரும்பிய ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிகர்கள் முகமது அலி கர்நாடக நவாபாக தொடர்வதை உறுதி செய்தனர். பாண்டிச்சேரி உடன்படிக்கையைத் தொடர்ந்து, கம்பெனியின் பொதுக்குழு கர்நாடக நவாப் முகமது அலிக்கு கணிசமான அளவில் கடனாகக் கொடுத்திருந்த முன்பணத்தின் ஒரு பகுதியை திரும்பப் பெறுவதற்கு ஒரு திட்டத்தை உருவாக்குவதற்கான சாத்தியத்தை கவனமாக பரிசீலித்தது. அதே நேரத்தில் ஆங்கிலேய வணிகர்கள் கர்நாடக மாகாணத்திலிருந்து கிடைக்கும் வருவாயில் இருந்து தங்களுக்குத் தரவேண்டிய கடன் பாக்கிகளைத் திருப்பிச் செலுத்துவதற்கான வாய்ப்பு குறைவு என்று ஆங்கிலேய வணிகர்கள் கவலை கொண்டனர். அதே நேரத்தில், மதுரை மற்றும் திருநெல்வேலி மாகாணங்களிலிருந்து நவாப்பிற்குச் செலுத்த வேண்டிய வரி பாக்கிகளை வசூலிக்க, கம்பெனியின் படைப்பிரிவு ஒன்றை அனுப்பி வைக்க வேண்டி நவாப் முகமது அலி ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் புனித ஜார்ஜ் கோட்டையின் தலைவர் ஜார்ஜ் பிக்காட்டை *(George Pigot)* தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். கர்நாடக நவாப் முகமது அலி, தான் கர்நாடக போர்களில் ஈடுபட்டிருந்த சமயத்தில், மேற்குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள பாளையக்காரர்களும், வருவாய்த்தொகை வசூலிக்கும் பொறுப்பில் இருக்கும் அதிகாரிகளும் தனக்கு வரி செலுத்தவில்லை என்றும், அத்தொகை கணிசமானது என்றும் கம்பெனியின் தலைவரான பிக்காட்டிடம்

உறுதிபடத் தெரிவித்தார். போர் முடிந்த பின்னரும் கூட, அப்பகுதியினைச் சேர்ந்த பாளையக்காரர்கள் தனக்குச் செலுத்த வேண்டிய நிலுவை வரியினைக் கட்டுவதற்கு ஆர்வம் காட்டவில்லை என்பதை நவாப் கண்டறிந்தார். வலுவானதொரு இராணுவப்படையை அப்பகுதிக்கு அனுப்பி வைக்கவில்லை என்றால், இப்பிரச்சினை காலவரையின்றி நீடித்திருக்கும் என்று உறுதியாக நம்பினார் நவாப். இறுதியில், கம்பெனி தன்னுடைய இராணுவ துருப்புகளை மதுரை, திருநெல்வேலி பாளையக்காரர்களுக்கு எதிராக அனுப்பி வைக்க முடிவு செய்தது.

இந்த வரலாற்றுப் புரிதலிலிருந்து, இக்கட்டுரை 1755-ஆம் ஆண்டு ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி கர்நாடக நவாப்பிற்கு ஆதரவாகவும், மதுரை மற்றும் திருநெல்வேலி பாளையக்காரர்களுக்கு எதிராகவும் நடத்திய படையெடுப்பின் பொழுது, கம்பெனி படையை வழிநடத்திய கர்னல் அலெக்சாண்டர் ஹெரான் (Colonel Alexander Heron) செய்த நிதி முறைகேடுகள் குறித்து ஆராய்வதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## I

### கர்னல் அலெக்சாண்டர் ஹெரான் தலைமையில் நடத்தப்பட்ட படையெடுப்பு

மதுரை மற்றும் திருநெல்வேலி பகுதியில் இருந்த பெரும்பாலான மறவர் மற்றும் நாயக்கர் பாளையக்காரர்கள் தங்கள் சுதந்திரத்தைக் காத்துக்கொள்ளும் பொருட்டு கர்நாடக நவாபின் நிர்வாகத்திற்கு தொல்லை தரக்கூடியவர்களாக மாறியிருந்தார்கள். அதேசமயம், திருநெல்வேலி மறவர் பாளையக்காரர்களும், மறவர் காவல் தலைவர்களும் அந்தந்தப் பகுதிகளிலிருந்த மக்களிடமிருந்து தன்னிச்சையான வரி வசூலிப்பில் ஈடுபட்டதாகவும், குறிப்பாக, மதுரை அரசின் முன்னாள் மத்திய நிர்வாகம் இருந்த பகுதிகளில் இருந்த காவல் தலைவர்கள் சுதந்திரமான குறுநில மன்னர்களைப்போல நடந்து கொள்கிறார்கள் என்றும் அவர்களை அமைதிப்படுத்த முடியவில்லை என்றும் நவாபிற்கு தெரிவிக்கப்பட்டது. பாளையக்காரர்கள் முந்தைய நாயக்க மன்னர்களிடமிருந்து பதவிகளையும், பொறுப்புக்களையும் பெற்றிருந்ததன் காரணமாக, மதுரை, நடுமண்டலம், திருநெல்வேலி பாளையக்காரர்கள் நவாபின் நிர்வாகத்திற்கும், தொடர்ச்சியான படையெடுப்பிற்கும் பெரும் இடையூறு விளைவிக்கக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள் என்றும் நவாப் முகமது அலியிடம் தெரிவிக்கப்பட்டது.[1]

இருந்தபோதும், மதுரை நாயக்கர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர், பாளையக்காரர்கள் சுயாட்சி பெற்ற சுதந்திரமான ஆட்சியாளர்களாக தத்தமது பகுதிகளில் மாறியிருந்தார்கள். 1752-ஆம் ஆண்டு கர்நாடக நவாப் பொறுப்பிற்கு முகமது அலிக்கு எதிராக இருந்த சந்தா சாகிப் - ன் தளபதியான ஆலம்கானின் நிர்வாகத்தின் போது நியமிக்கப்பட்ட அரசாங்க நிலப்பரப்பில் இருந்த அலுவலர்களான முகமது கான் பர்கி, முகமது கான் மையானா, அப்துல் நபிகான் கட்டாக் ஆகியோர் நவாபின் நிர்வாகத்திற்கு பெரும் இடையூறு செய்பவர்களாக இருந்தார்கள்.[2] அதிகரித்து வரும் கடன் தொல்லையாலும், நிதிப்பிரச்சினைகளை சரிசெய்யவும், நவாப் முகமது அலி திருநெல்வேலியை தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முடிவு செய்தார்.[3] அதன் விளைவாக, நவாபின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, பாண்டிச்சேரி உடன்படிக்கைக்கு மாறாக, ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னர் பிக்காட், திருநெல்வேலி, மதுரை பாளையக்காரர்களிடமிருந்து நிலுவையிலிருந்த வரி வருவாயை வசூலிக்க கர்னல் அலெக்சாண்டர் ஹெரானை நியமித்தார். மேலும், படையெடுப்பை 1,000 வீரர்களுடன் துவங்குவதற்கும் அனுமதியளித்தார்.[4]

பிப்ரவரி 1755-இல் 2,000 சிப்பாய்கள் மற்றும் 500 நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட ஐரோப்பிய படை வீரர்கள் உள்ளடங்கிய ஒருங்கமைந்த படைப்பிரிவு முகமது யூசுப் கான், நவாபின் மூத்த சகோதரரான மாபூஸ் கான் மற்றும் கர்னல் அலெக்சாண்டர் ஹெரான் ஆகியோரால் வழிநடத்தப்பட்டது. மதுரை மற்றும் திருநெல்வேலி பாளையக்காரர்களை ஒடுக்குவதற்கு ஆயத்தப்படுத்தப்பட்டு முன்னேறிச் சென்றது.[5]

படையெடுப்பின் போது கர்னல் ஹெரான் திருநெல்வேலி பாளையக்காரர்கள் அனைவருக்கும் தனது வருகையைப் பற்றியும், அதன் நோக்கத்தைப் பற்றியும் அதிகாரப்பூர்வமாக தகவலளித்தார். அக்கடிதத்தில் செலுத்தப்பட வேண்டிய வரிப்பாக்கியை பாளையக்காரர்கள் எந்தவிதமான நிலுவையும் இல்லாமல் முழுமையாக "பேஷ்குஷ்" (Peshcush) தொகையைக் கட்டுவதற்கு கடுமையாக எச்சரித்ததோடு, கர்நாடக நவாபின் ஆட்சி அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளவும் கட்டாயப்படுத்தினார். தவறும்பட்சத்தில் இராணுவ நடவடிக்கையைச் சந்திக்க நேரிடும் என்று அவர்களை அச்சுறுத்தினார். இருப்பினும், 25 மார்ச் 1755 அன்று கர்னல் ஹெரான் மற்றும் மாபூஸ் கான், தமது நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள மறுத்த திருநெல்வேலி பாளையக்காரர்களை ஒடுக்குவதற்காகப் புறப்பட்டுச் சென்றனர். திருநெல்வேலி பாளையக்காரர்கள் நவாப் மற்றும் கர்னல் ஹெரானின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள மறுத்ததாலும், வரிகட்ட மறுத்ததாலும், மேற்குப் பகுதியில் நெல்கட்டும்செவல் காத்தப்ப பூலித்தேவர், கிழக்கில் பாஞ்சாலங்குறிச்சியைச் சேர்ந்த கட்டபொம்ம நாயக்கர் ஆகியோர் நவாப் மற்றும் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் முதன்மையான எதிரிகளாகக் கருதப்பட்டார்கள். 1 மே 1755 அன்று பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் கட்டபொம்மன் பீரங்கித் தாக்குதல் மூலம் அச்சுறுத்தப்பட்டார். அவருடைய வரி வருவாய் கடனுக்குப் பாதுகாப்புத்தொகையாக, நவாபின் இராணுவ தளபதியும், முதலியாரும் ரூபாய் 80,000 மதிப்பிலான உத்திரவாதப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டனர். அவரைத் தொடர்ந்து, இதர நாயக்கர் பாளையங்களும் கர்னல் ஹெரானின் உத்தரவிற்குக் கீழ்ப்படிந்தார்கள் மற்றும் கர்நாடக நவாபின் ஆதிக்கத்தையும் ஏற்றுக்கொண்டார்கள்.[6] இப்படையெடுப்பின் போது திருநெல்வேலி பாளையக்காரர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட வருவாய் நிலுவைத்தொகை விவரங்களை கீழ்க்காணும் அட்டவணை அளிக்கிறது.

**அட்டவணை I:1**

திருநெல்வேலி பாளையக்காரர்களால் செலுத்தப்பட்ட வரி பாக்கிகள்

| வ.எண் | பாளையக்காரர் பெயர் | வசூலிக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1. | பாஞ்சாலங்குறிச்சி | 80,000 |
| 2. | எட்டயபுரம் | 70,000 |
| 3. | ஏழாயிரம்பண்ணை | 15,000 |
| 4. | கோலார்பட்டி | 15,000 |
| 5. | மேல்மாந்தை | 1,250 |
| 6. | குளத்தூர் | 1,000 |
| 7. | நாகலாபுரம் | 12,500 |
| 8. | ஆத்தங்கரை | 3,062.1/2 |
| 9. | கொல்லபட்டி | 3,000 |
| 10. | காடல்குடி | 3,000 |
| | மொத்தம் | 2,03,812. 1/2 |

**Source:** *Report on the Records of Fort St. George: Military Department Diary and Consultation, 1755 (Madras: Government Press, 1912), p.162.*

இருப்பினும், திருநெல்வேலியின் மேற்குப்பகுதியில் இருந்த மறவர் பாளையக்காரர்கள் நவாப் அரசின் மேலாதிக்கத்தை உறுதியான முறையில் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு, நிலுவையிலிருந்த வரி பாக்கிகளைக் கட்டவும் மறுத்தார்கள். ஆகவே, கர்னல் ஹெரான் வரி செலுத்த மறுத்த மறவர் பாளையக்காரர்களை எதிர்கொள்வதென்று முடிவு செய்தார். இதற்கிடையில், கர்னல் ஹெரானுக்கு கம்பெனியின் அதிகாரிகள் ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார்கள். அதில் கர்னல் ஹெரான் தன்னுடைய சேனையோடு திருச்சிராப்பள்ளிக்கு உடனடியாக திரும்பி வருமாறு உத்தரவு வழங்கப்பட்டது. இருந்தபோதும், மாபூஸ் கானின் தூண்டுதலின் பேரில், எந்தவிதமான புலனாய்வுத் தகவலும் இல்லாமல், நெல்கட்டும்செவல் பூலித்தேவரை முற்றுகையிடச் சென்றார் கர்னல் ஹெரான்.

கர்னல் ஹெரான் திருநெல்வேலியின் உள்ளூர் விவகாரங்களை தனக்கு விளக்குவதற்காக ஒரு மொழிபெயர்ப்பாளரை நியமித்திருந்தார். அம்மொழிபெயர்ப்பாளர் கர்னல் ஹெரானின் படையெடுப்பு மற்றும் வெள்ளைக்கார இராணுவத்தின் பலகீனம் தொடர்புடைய உளவுச் செய்திகளை இராணுவம் செல்வதற்கு முன்பாகவே மிக விரைவாக நெல்கட்டும்செவல் பாளையக்காரரிடம் பகிர்ந்தார். அதன் காரணமாக பூலித்தேவர் வலுவான கல் சுவர்களுடன் தனது கோட்டையை பாதுகாத்தார்.[7]

## II

### நீதி விசாரணை: வரி வசூலிப்பும், நிதி முறைகேடும்

பல்வேறு முக்கியமான காரணங்களுக்காக படைகளைத் திரும்பப் பெறுவது அவசியமானது என்று கருதப்பட்டது. அதன் விளைவாக, 26 மார்ச் 1755 அன்று கம்பெனியின் பொதுக்குழு தனது இராணுவத்துடன் திரும்பி வருமாறு கர்னல் ஹெரானுக்கு உத்தரவு பிறப்பித்தது. படைகள் திரும்ப வருவது தொடர்பான இத்தகைய உத்தரவு 1755 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3, 22 மற்றும் 24 ஆகிய தேதிகளில் மீண்டும் பிறப்பிக்கப்பட்டது. ஆனால், கர்னல் ஹெரான் 6 ஜுன் 1755 அன்று வரை திருச்சிராப்பள்ளிக்கு வந்து சேரவில்லை. இறுதியில், கர்னல் ஹெரான் மூன்று வார காலதாமதமாக தனது படையுடன் வந்து சேர்ந்தார். இதற்கிடையில், கர்னல் ஹெரான் பணம் முறைகேடு செய்ததாக கம்பெனியின் தலைவர் ஜார்ஜ் பிக்காட்டிற்கு பல எழுத்துப்பூர்வ தரவுகள் கிடைத்தது. ஆகவே, படைகளை கேப்டன் பொலையரிடம் (Captain Polier) ஒப்படைத்துவிட்டு சென்னைக்கு வருமாறு கர்னல் ஹெரானுக்கு ஆணை அனுப்பிவைக்கப்பட்டது.[8]

மதுரை மற்றும் திருநெல்வேலி பாளையக்காரர்களின் வருவாய் பாக்கிகள் மற்றும் கணக்குகளை தணிக்கை செய்வதற்காக, 30 ஜூலை 1755-இல் கவர்னர் ஜார்ஜ் பிக்காட் மற்றும் ஸ்டிரிங்கர் லாரன்ஸ் (Stringer Lawrence), ஹென்றி போனி (Henry Poney), ராபர்ட் ஓர்ம் (Robert Orme), வின்ச் (Wynch), வில்லியம் பெர்செவல் (William Perceval) மற்றும் ராப் பால்க் (Rob Palk) உள்ளடங்கிய பிற உறுப்பினர்களைக் கொண்ட ஏழு பேர் கொண்ட விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. இறுதியாக, கர்னல் ஹெரான் தனது சேனைகளுடன் திருநெல்வேலியில் நிறுத்தப்பட்டிருந்ததாலும், மேஜர் தாமஸ் மான்செல் (Major Thomas Maunsell) கணக்குகளை சரிபார்க்க அனுப்பிவைக்கப்பட்டதாலும், கர்னல் ஹெரான் மீதான நிதி முறைகேடுகள் குறித்த சந்தேகங்கள் விசாரணைக்குழுவிற்குள் வலுவடைந்தது.

விசாரணைக்குழுவால் கம்பெனியின் செயலாளர் சட்டவிதிகளின் அடிப்படையில் மேற்கூறிய ஒவ்வொரு குற்றச்சாட்டுகளுக்கும் தனித்தனியாக கர்னல் ஹெரானிடம் இருந்து விளக்கம் கேட்டு பெறும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதற்கிடையில் கம்பெனியின் தலைவருக்கு நவாப் அரசாங்கம் வழங்கிய அறிக்கையில் கர்னல் ஹெரான் இலட்சக்கணக்கான ரூபாய்களை தமக்கு வரி வருவாய் பாக்கி வைத்துள்ள பாளையக்காரர்கள் மற்றும் முக்கியஸ்தர்களிடமிருந்து பெற்றுள்ளார் என்று குற்றம் சாட்டப்பட்டிருந்தது. ஆனால், விசாரணைக்குழுவோ நவாபின் குற்றச்சாட்டில் சொல்லப்பட்டுள்ள தனிக்கடன் பாக்கிகளை வசூலிப்பதற்காக கர்னல் ஹெரான் அனுப்பி வைக்கப்படவில்லை என முடிவு செய்தது. இருப்பினும் விசாரணைக்குழு ஒரு முடிவு செய்தது. அதனடிப்படையில் கர்னல் ஹெரான் நவாப் அரசாங்கத்திற்கு வரிபாக்கிகள் செலுத்தாமல் இருந்த பாளையக்காரர்கள், தலைவர்கள் அல்லது இதர நபர்களிடமிருந்து என்னென்ன வகைகளிலெல்லாம் பணம் வசூல் செய்துள்ளார் என்ற கணக்கை துல்லியமாகக் கொடுக்க வேண்டும் என உத்தரவிட்டது.

இதற்கிடையில், கம்பெனியின் செயலாளருக்கு வழங்கப்பட்ட உத்தரவில் கர்னல் ஹெரான் மதுரை மற்றும் திருநெல்வேலி பகுதியில் மேற்கொண்ட படையெடுப்பில் தொடர்புடைய அனைத்துக் கடிதங்களையும் நகல்களாக பதிவு செய்யும்படி பணிக்கப்பட்டார். அவ்வாறு பெறப்பட்ட அனைத்துக் கடிதங்களையும் தனித்தனியாக

பதிவு செய்து ஆய்வுக்கு உட்படுத்தவும் பணிக்கப்பட்டார். தற்சமயம் நடந்து கொண்டிருக்கக்கூடிய விசாரணை அறிக்கையில் இந்தத் தகவல்கள் அனைத்தையும் பதிவு செய்யும்படியும் பணிக்கப்பட்டார். இதன்மூலம், கர்னல் ஹெரானின் நடவடிக்கைகள் (Conduct) குறித்து கம்பெனியின் நிர்வாகிகளுக்கு முழுமையான மற்றும் தனித்துவமான புரிதல் ஏற்படும் என நம்பப்பட்டது.

இதுவரை மதுரை மற்றும் திருநெல்வேலி கிராமப் பகுதிகளிலிருந்து வசூலித்து கம்பெனிக்கு செலுத்தப்பட வேண்டிய ஒட்டுமொத்த வாடகை இரண்டு லட்சத்து முப்பத்தி இரண்டாயிரத்தில், ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபாயை மட்டுமே மாபூஸ் கான் செலுத்தியிருக்கிறார். ஆகவே, மாபூஸ் கான் மீதம் செலுத்த வேண்டிய பாக்கிப் பணம் ஒரு இலட்சத்து இருபத்தி இரண்டாயிரம் (1,22,000) ரூபாயை கேப்டன் கைலாடு (Captain Caillaud) வசூலிக்கும் படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது."[9]

இதற்கிடையில், கர்னல் ஹெரான் தன் மீது பதிவு செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு, கம்பெனியின் விசாரணைக்குழுவிற்கு பின்வருமாறு தனது பதிலை பதிவு செய்கிறார், சுருக்கம்: "...நான்காவது சரத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த குற்றச்சாட்டில், நவாபிற்கு வரிபாக்கிகள் செலுத்தாமல் வைத்திருந்த பாளையக்காரர்கள், தலைவர்கள் அல்லது இதர நபர்களிடமிருந்து என்னென்ன வகைகளிலெல்லாம் பணம் வசூல் செய்துள்ளேன் என்பதற்கான கணக்கை துல்லியமாகக் கொடுக்கின்றேன். கர்னல் ஹெரானாகிய நான் பதிவு செய்கின்றேன் எந்தப் பாளையக்காரரிடம் அல்லது எந்த ஊர் தலைவர்களிடமும் இருந்து நவாபிற்கு வழங்கப்பட வேண்டிய வரி பாக்கிகளையோ அல்லது கடன்களையோ நான் வசூலிக்கவில்லை. நவாப் தமக்கான இந்த பரிவர்த்தனைகளை திருச்சி மாவட்டத்தில் உள்ள மணப்பாறையில் இருந்தே அவர் செய்து முடித்துக்கொண்டுள்ளார். அதில் பின்வரும் பரிசுகளை நவாப் பெற்றுக்கொண்டதற்கான தகவல்களை நான் வழங்குகின்றேன்:

- இலட்சுமி நாயக்கரின் நாட்டைக் கைப்பற்றியபோது நவாப் அவரிடமிருந்து 1,000 ரூபாய் பணம் பெற்றுக்கொண்டார்.
- நத்தம் பாளையக்காரரிடமிருந்து அவருடைய நாட்டைக் கடந்து செல்லும் போது சிறிய அளவிலான நகைகள் மற்றும் 500 ரூபாய் பெற்றுக்கொண்டார்.
- திருநெல்வேலிக்குள் நுழையும் பொழுது பக்சியிடமிருந்து (இராணுவ தளபதி) நவாபிற்கு 15,000 ரூபாய் பெற்றுக்கொண்டார்.
- இராமநாதபுரம் சேதுபதியிடமிருந்து மறவர்களின் சார்பாக 6,000 பகோடாக்களும், சிறிய அளவிலான இரண்டு நகைகளும் நோய்வாய்ப்பட்ட ஒரு யானையும் நவாப் பெற்றுக்கொண்டார். சிறிது நாட்களில் நோய்வாய்ப்பட்ட யானை இறந்துபோனது.

நவாபின் சகோதரர் மாபூஸ் கான் பாளையக்காரர்களுடன் ஒப்பந்தம் செய்துவிட்டு வழக்கமாக வழங்கப்பட்ட பரிசுகளைப் பெற்ற பிறகு, கேப்டன் லீ மூலம் எனக்கு (கர்னல் ஹெரானுக்கு) மதுரை பணத்தில் 20,000 ரூபாய் அனுப்பி வைத்தார். மேலும் மாபூஸ் கான் ஐயாயிரம் (5,000) ரூபாய் அதிகமாகத் தருவதாக எனக்கு வாக்குறுதி வழங்கினார். ஆனால் மதுரை கோட்டையின் அரசாங்க காவலர் இதுவரை என்னைச் சந்திக்க வரவுமில்லை, அந்த பணத்தை என்னிடம் தரவுமில்லை.

மேற்கூறியவை மட்டுமே நான் பெற்றுக்கொண்டதாக எனக்கு நினைவில் இருக்கின்றது. திரு. மான்செல், அவர்கள் பதிவு செய்துள்ள கணக்குகள் அனைத்தும் கம்பெனியின் சார்பாக நவாப் அல்லது அவரின் சகோதரர் மாபூஸ் கான் வழங்கிய பதிவுகள் மட்டுமே என தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கிடையில், திருநெல்வேலி பாளையக்காரர்களிடம் சென்று வரி வசூலிப்புகள் நடத்துவதற்கு, நான் படை நடத்திச் செல்ல தயாரான நிலையில் எனது உடல்நிலை மோசமான காரணத்தால் அந்தப் படையெடுப்பு நடத்தப்படவில்லை" எனப் பதிவு செய்தார்.[10]

## III

### பணி நீக்கம்: கடமை தவறியதன் மீதான விசாரணை

கர்னல் ஹெரான் தன்னுடைய கடமையிலிருந்து தவறியமைக்காக கடுமையாக கண்டிக்கப்பட்டார். கர்நாடக நவாப் அரசாங்கம் மதுரை மற்றும் திருநெல்வேலி பாளையக்காரர்களுடனான தனது சொந்த கணக்குகளைக் கையாளுவதற்கும் மற்றும் தீர்த்துக்கொள்ளவும் பொருத்தமான நபர் என்று கமிட்டி பதிவுசெய்தது. இருந்தபோதும், கர்னல் ஹெரான் தான் எந்தவொரு நிதி பரிவர்த்தனைகளிலும் பாளையக்காரர்களுடன் ஈடுபடவில்லை என்று தன்னுடைய பதிலில் குறிப்பிட்டிருந்தார். ஆனால், கர்னல் ஹெரானின் இத்தகைய பதிலை விசாரணைக்குழு கடுமையாக ஆட்சேபனை செய்தது. ஏனெனில் கர்னல் ஹெரான் தனது படையோடு பிரத்தியேகமாக அந்தப் பணியை நிறைவேற்றுவதற்காக மட்டுமே திருநெல்வேலிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

தனது ஆட்சேபனையை விசாரணைக்குழு பின்வருமாறு பதிவு செய்தது: "நிச்சயமாக நவாப் முகமது அலி தன்னுடைய படையினரோடு இருக்கும்பொழுது, மிகத் திறமையான நபராகத்தான் இருக்கின்றார். அந்த நேரங்களில் பாளையக்காரர்களிடமிருந்து அவர் வசூலிக்க வேண்டிய வரிப் பாக்கிகளையும் எளிதாக வசூலிக்கவும் செய்வார் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் கிடையாது. ஆனால், இது எப்பொழுது சாத்தியப்படும் என்றால், அந்த பாளையக்காரர்கள் திருச்சிராப்பள்ளிக்கு அருகாமையில் வசித்து வந்தால் மட்டுமே சாத்தியமாகும். கர்னல் ஹெரானின் செயல்பாடுகளின் மீது நவாப்பிற்கு நம்பிக்கை இருக்கின்றது என்று அவர் கூறும் கருத்திற்கு விசாரணைக்குழு எந்தவிதமான மறுப்பும் தெரிவிக்கவில்லை. ஆனால் மற்றொருபுறம், நவாப் விசாரணைக்குழுவிற்கு எழுதிய பதில் கடிதங்களில் பெரும்பாலானவை கர்னல் ஹெரானின் செயல்பாட்டிற்கு எதிரானதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் கர்னல் ஹெரான் எந்தவொரு நிதி பரிவர்த்தனைகளிலும் பாளையக்காரர்களுடன் ஈடுபடவில்லை என்று சொல்லும் கருத்திற்கு எதிராக நவாப் பதிவு செய்துள்ள பதில்களை கம்பெனி கவனிக்கத்தக்க கருத்துக்களாக எடுத்துள்ளது. ஆனால், கர்னல் ஹெரான், மான்செல் மற்றும் நவாபின் அதிகாரிகளோடு இணைந்து, பாளையக்காரர்களிடமிருந்து

பெறப்பட வேண்டிய வரிப் பாக்கிகளை வசூலிப்பதற்கான வேலைகளைச் செய்வதற்காக மட்டுமே நவாபாலும் மற்றும் கம்பெனியாலும் அனுப்பி வைக்கப்பட்டார் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

நவாபின் அதிகாரிகளின் வார்த்தைகளை நம்பி கர்னல் ஹெரான் அவர்கள் வழங்கிய சிறிய தொகையை தனக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புப் பரிசாக வைத்துக்கொண்டார். ஆனால் உண்மையில் நவாபின் அதிகாரிகள் அதிகமான தொகையை வசூலித்து விட்டு அதை கம்பெனியின் கடன் கணக்கில் பதிவு செய்துவிட்டனர். கம்பெனி கொடுத்த உத்தரவை கணக்கில் எடுக்காமல், நவாபின் அதிகாரிகள் கொடுத்த உத்தரவின் அடிப்படையில் அவர் செயல்பட்டுள்ளார் என்பதையும் விசாரணைக்குழு பதிவு செய்தது. மேலும், கம்பெனியின் சார்பாக எவ்வளவு பணம் பெறப்பட்டது என்ற தகவல்களைப் பெறுவதற்காக கேப்டன் லீ, நவாபின் பக்சி மற்றும் மான்செல் ஆகிய மூவரையும் விசாரணைக்குழுவின் முன் மறுநாள் காலையில் ஆஜராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவர்களிடமிருந்து பெறப்படக்கூடிய தகவல்களை நவாப் வழங்கிய கணக்குகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.''[11]

திருநெல்வேலியின் உண்மையான பொருளாதார நிலையை மதிப்பிடுவதற்காக, 16 செப்டம்பர் 1755 அன்று, ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் விசாரணைக்குழு, கேப்டன் லீ, கேப்டன் லின், மான்செல் மற்றும் நவாபின் பக்ஸியால் நியமிக்கப்பட்ட ஒரு பிராமணர் ஆகியோரை விசாரணைக்கு ஆஜராகும்படி சம்மன் அனுப்பியது. 17 செப்டம்பர் 1755 அன்று, கேப்டன் லீ முதலில் விசாரணைக் குழுவின் முன் ஆஜராகுமாறு அழைக்கப்பட்டார். விசாரணையில், திருநெல்வேலிப் பாளையக்காரர்களிடம் இருந்து பெறப்பட்ட ரொக்கப் பணம் மற்றும் உத்திரவாதப் பத்திரங்கள் பெறப்பட்டது குறித்து விளக்கினார். சாட்சிப் பதிவின் சுருக்கம்: ''...கம்பெனியின் கணக்கில் பணம் பெறப்படவில்லை என்றும், உத்திரவாத பத்திரங்கள் மட்டுமே பெறப்பட்டது என்றும் பதிவு செய்தார். ஆனால் படை அணிவகுப்பின் பொழுது பக்ஸி மற்றும் முதலியார் பல்வேறு தொகைகளைப் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. பக்சியும், நானும் சேர்ந்து 73,000 ரூபாய் பணத்தை பாளையக்காரர்களிடமிருந்து வசூலித்தோம். அவையனைத்தும் பரிசாக தரப்பட்டவை என நவாபின் அதிகாரிகள் கூறினர். இருந்தபொழுதும், அவ்வாறு பெறப்பட்ட பணத்திற்கு கணக்கு எழுதி இரசீது தரும்படி நான் தொடர்ச்சியாக கர்னல் ஹெரானை வலியுறுத்தினேன். வெறும் 40,000 ரூபாய் பணத்தை எந்தவித கணக்கும் எழுதாமல் என் கையில் ஒப்படைத்துவிட்டு மீதிப்பணத்தை நவாபின் படையினரும், கம்பெனியின் படையினரும் தமக்குள் பிரித்து வைத்துக்கொள்வோம் என்ற ஆலோசனையை நவாபின் பக்சி வழங்கினார். ஆனால், அந்த ஆலோசனையை நான் ஏற்க மறுத்துவிட்டேன். ஒட்டுமொத்த பணத்தையும் நாங்கள் தங்கியிருந்த இராணுவ முகாமிற்கு எடுத்துவந்தேன். மேலும், அந்தப் பணத்தை என்ன செய்ய வேண்டும் என்று கர்னல் ஹெரானிடம் கேட்டதற்கு அந்தப் பணத்தை மாபூஸ் கான் தன்னிடம் கேட்டுள்ளதாக கர்னல் ஹெரான் கூறினார். பாளையக்காரர்கள் இவ்வாறு பெறப்பட்ட வரிப் பணத்தை நவாபிற்கு அன்பளிப்பாக வழங்குவது என்பது நெடுங்காலமாக பின்பற்றக்கூடிய வழக்கமாகும் என்றும் கூறினார். இதனடிப்படையில் கர்னல் ஹெரான் என்னிடமிருந்த பணத்தை மாபூஸ் கானிடம் ஒப்படைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். அந்த உத்தரவின் அடிப்படையில் நான் பணத்தை மாபூஸ்கானிடம் ஒப்படைத்தேன். அந்தப் பணத்திலிருந்து 3,000 ரூபாயை கர்னல் ஹெரானின் உத்தரவை நான் நிறைவேற்றியதற்காகவும், மேலும் 2,000 ரூபாயை முந்தைய நேரங்களில் நான் நிறைவேற்றிய கடமைகளுக்காகவும் வழங்குவதாகக் கூறி மாபூஸ்கான் எனக்கு கொடுத்தார். இந்தப் பணத்தை நான் மதுரையில் பெற்றுக்கொண்டேன்.''[12] விசாரணைக்குழுவின் முன் கேப்டன் லீ வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில், 15 மற்றும் 16 மே 1755 ஆம் தேதிகளில் ரசீது எதுவும் பதிவு செய்யாமல், மாபூஸ் கான் வசூலித்து பிரித்துக்கொடுத்த முழுமையான பண விவரம் மற்றும் ஈவுத்தொகை குறித்த கணக்கு பின்வருமாறு:

**அட்டவணை: III :1**

மாபூஸ்கானால் வசூலித்து
பிரித்துக்கொடுக்கப்பட்ட பணத்திற்கான கணக்கு

| வ. எண் | வசூலிக்கப்பட்ட தொகை | பெயர்களில் வரவு வைக்கப்பட்ட கணக்கு |
|---|---|---|
| 1. | 1,000 | நவாப்பிற்காக மாபூஸ்கான் எடுத்துக்கொண்டது |
| 2. | 15,000 | மாபூஸ்கானுக்கானது |
| 3. | 20,000 | கர்னல் ஹெரானுக்கானது |
| 4. | 5,000 | பக்சிக்கானது |
| 5. | 5,000 | கேப்டன் லீ - க்கானது |
| 6. | 2,000 | அப்துல் ரஹீம் கானுக்கானது |
| 7. | 2,000 | கேப்டன் காலெந்தர் - க்கானது |
| 8. | 4,000 | ரங்கப்பா, கர்னல் ஹெரானின் துபாஷ் - ற்கு வழங்கப்பட்டது. |
| 9. | 2,000 | மான்செலுக்கானது |
| 10. | 1,000 | மான்செல் படையில் இருந்த இராணுவ அதிகாரிகளுக்கானது |
| 11 | 1,000 | பக்சி -ன் துபாஷ் |
| 12 | 1,000 | மாபூஸ்கான் - ன் துபாஷ் -ற்கு வழங்கப்பட்டது |
| 13. | 500 | கேப்டன் லீ-ன் துபாஷ் -ற்கு வழங்கப்பட்டது |
| 14. | 3,000 | முதலியாருக்குரியது |
| 15. | 500 | கேப்டன் பீவர் -ற்கு வழங்கப்பட்டது |
| 16. | 1,000 | கோபால் -ற்கு வழங்கப்பட்டது |
| Grand Total | 73,000 (இருந்தபோதும், கொடுக்கப்பட்ட விபரங்களிலிருந்து ஒட்டுமொத்த தொகை ரூ. 64,000) | |

*Source: Report on the Records of Fort St. George: Military Department Diary and Consultation, 1755, Enquiry dated 17th September 1755 (Madras: Government Press, 1912), p.158.*

அதன்பிறகு, கர்னல் ஹெரான் திருநெல்வேலிக்குச் சென்ற பின்னர், மதுரையின் படைப் பிரிவிற்கு பொறுப்பாக இருந்த கேப்டன் லின் மதுரையின் கோட்டைக்கு பொறுப்பாக இருந்த கிள்ளேதாரரிடம் மற்றும் கொத்துவால் ஆகியோரிடமிருந்து 75,000 ரூபாய் பணத்தைத் தருமாறு வலியுறுத்தினார். ஆனால், 20,460 ரூபாய் மட்டுமே தங்கள் பங்காக வழங்கினார்கள். மேலும், நவாபின் பக்சியிடமிருந்து 500 ரூபாயை அன்பளிப்பாகப் பெற்றுக்கொண்டார்.[13] பின்னர், மான்செல் மற்றும் நவாபின் பக்ஸியின் பிராமண உதவியாளர் ஆகியோர் விசாரணைக் குழுவின் முன் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டனர். அவர்கள் இருவரிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் பெறப்பட்ட நிதி பரிவர்த்தனை குறித்த தகவல்களை ஒப்பிட்டுப் பார்த்த பொழுது ரூபாய் 19,689 ¾ - எந்தவிதப் பதிவும் செய்யப்படாமல் மற்றும் கம்பெனிக் கணக்கில் வரவு வைக்கப்படாமல் இருந்த முரண்பாடை கண்டுபிடித்தனர்.[14]

கேப்டன் லீ, கேப்டன் லின், மான்செல் மற்றும் நவாபின் பக்சியின் பிராமண உதவியாளர் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்து விசாரணைக்குழு கர்னல் ஹெரானுக்கு எதிராக மேலும் மூன்று குற்றச்சாட்டுகளை கூடுதலாகப் பதிவு செய்தது. முதலாவதாக, திருநெல்வேலியில் கர்னல் ஹெரான் இருக்கும் பொழுது மாபூஸ் கான் தான் வழங்கிய ரூபாய் 1,30,000-க்கான ரசீதுகள் வைத்திருந்தார். அந்தப் பணத்தில் கர்னல் ஹெரான் ரூபாய் 1,00,000 மட்டும் கம்பெனியின் கணக்கில் வரவு வைத்துவிட்டு, மீதமுள்ள தொகையான ரூபாய் 30,000 கையாடல் செய்துவிட்டார் என்பது தெரியவந்தது. மேலும், கர்னல் ஹெரான் அளித்த வாக்குமூலத்தில் தனது அனுமதியின்றி மாபூஸ் கான் எந்தவித நிர்வாக வேலைகளிலும் தலையிடவில்லை என்பதை உறுதிப்படுத்தினார்.

இரண்டாவதாக, நவாபின் பக்ஸி மற்றும் கேப்டன் லீ ஆகியோர் பாளையக்காரர்களிடம் இருந்து ரொக்கமாக வசூலித்த எழுபத்து மூன்றாயிரம் ரூபாயை கர்னல் ஹெரானிடம் தான் ஒப்படைத்திருந்தார்கள். இருந்தபொழுதும், அந்தப் பணம் கம்பெனிக்கு உரியது இல்லை என கர்னல் ஹெரான் அவர்களிடம் பதிவு செய்திருந்தார். இந்த விவகாரத்தில் தலையிட விருப்பமில்லாமல் கேப்டன் லீ - யை அந்தப் பணத்தை மாபூஸ் கானிடம் வழங்குமாறு அனுப்பிவைத்தார். கம்பெனியின் சார்பாக பொறுப்பாக வரி வசூலித்து அந்தப் பணத்தை கம்பெனியிடம் சேர்க்க வேண்டிய பணியிலிருந்த கர்னல் ஹெரான் தாம் வசூலித்த 73,000 ரூபாய் பணத்தை கம்பெனிக்கு உரிமையானது அல்ல என்று கூறி மாபூஸ் கானிடம் ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள முடியாத செயலாக விசாரணைக்குழு பார்த்தது. மேலும், கர்னல் ஹெரான் தனது தனிப்பட்ட நலனுக்காக ரூபாய் 20,000-யை கையாடல் செய்திருந்ததை விசாரணைக்குழு கண்டுபிடித்தது. மூன்றாவதாக, நவாப் மற்றும் கம்பெனியினர் பராமரித்து வந்த நிதி பரிவர்த்தனை பதிவேடுகளில் ஏற்பட்டிருந்த கணக்கு முரண்பாடுகளுக்கு கர்னல் ஹெரான் கட்டாயம் விளக்கம் அளிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார்.[15] இதன் தொடர்ச்சியாக 19 செப்டம்பர் 1755 அன்று, கம்பெனியின் செயலாளர் கர்னல் ஹெரானுக்கு எழுதிய கடிதத்தில் மேற்கூறிய குற்றச்சாட்டுகளுக்கு உடனடியாக பதிலளிக்கும்படி கோரினார். 22 செப்டம்பர் 1755 அன்று, கர்னல் ஹெரான் தன் மீது வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு எதிராக வழங்கிய பதில்கள் பெரும்பாலும் அவரது முந்தைய பதில் கடிதங்களுக்கு முற்றிலும் முரண்பாடுகளுடன் இருந்தன.[16]

29 செப்டம்பர் 1755 அன்று, கர்னல் ஹெரானின் பணி நடத்தை குறித்து விசாரிப்பதற்காக கம்பெனியின் பொதுக் குழுவின் தலைவர் வாரியத்தின் உறுப்பினர்களின் குழுவைக் கூட்டினார். கர்னல் ஹெரான் மீதான குற்றச்சாட்டுகள் அவருடைய கடிதங்களில் உள்ள பதில்கள் மற்றும் இரசீதுகளில் உள்ள கணக்குகளின் விபரங்கள் ஆகியவற்றை மிகக்கவனமாக ஆய்வுக்கு உட்படுத்திய பிறகு, பல்வேறு சந்தர்ப்பங்களில் கர்னல் ஹெரான் கம்பெனியின் உத்தரவுகளை மீறியதற்கும், அவரது படையெடுப்பின் நோக்கங்களை திசைதிருப்பியதற்கும் அவர் குற்றவாளி என்று வாரியம் கூட்டாக ஒரு ஒருங்கிணைந்த முடிவை எடுத்தது. இதன் தொடர்ச்சியாக ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் தலைவர் கர்னல் அலெக்சாண்டர் ஹெரானை வாரியத்திலிருந்து இடைநீக்கம் செய்தார்.[17] மேலும், கர்னல் ஹெரானின் நடத்தையின் பல பகுதிகளை கம்பெனி நிர்வாகம் கணக்கில் எடுத்துக்கொண்டது. குறிப்பாக நத்தம் காட்டில் நடந்த போரில் கர்னல் ஹெரான் ஒரு அதிகாரியைப் போல் இல்லாமல் செயல்பட்டதை உன்னிப்பாகக் கவனித்தது. இதன் அடிப்படையில் இராணுவ நீதிமன்றத்தின் முன் போர்க் குற்றம் புரிந்தவராக கர்னல் ஹெரான் குற்றம் சாட்டப்பட்டு விசாரணையின் முடிவில் பணியிலிருந்து நீக்கப்பட்டார்.[18]

### இறுதியாக

திருநெல்வேலி பாளையக்காரர்களை தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு, ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் இராணுவ உதவியோடு, கர்நாடக நவாப் அரசாங்கம் எடுத்த முதல் முயற்சி கர்னல் அலெக்சாண்டர் ஹெரானின் நிதி முறைகேடுகளால் தோல்வியில் முடிந்தது. அதன் பின்னர், 12 மார்ச் 1756 அன்று திருநெல்வேலி மறவர் பாளையக்காரர்கள் மீண்டும் நவாப் நிர்வாகத்திற்கு எதிராக கிளர்ச்சிகளில் ஈடுபட்டு வருவதாக ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனிக்கு தெரிவிக்கப்பட்டது. திருநெல்வேலி மறவர் பாளையக்காரர்கள் செய்து வரும் கிளர்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக நவாபின் சகோதரர் மாபூஸ் கானுக்கு உதவி செய்திட ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி முகமது யூசுப் கானை நியமித்தது. இதற்காக கம்பெனி 1,000 சிப்பாய்களையும், இரண்டு பெரிய பீரங்கிகளையும் முகமது யூசுப் கானுக்கு வழங்கியது. இந்த நடவடிக்கை தொடர்பான செய்தி நவாப் முகமது அலிக்கு தெரிவிக்கப்பட்டது. இந்த இராணுவ நடவடிக்கைக்கு ஈடாக திருநெல்வேலி பாளையக்காரர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிகளிலிருந்து நேர் பாதியை முகமது யூசுப் கானிடம் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனிக்கு

வழங்க வேண்டும். இந்தப் பணம் கம்பெனிக்கு வழங்கப்பட வேண்டிய கடனில் கழிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த இராணுவ நடவடிக்கையைப் பாராட்டி நவாப் முகமது அலி கம்பெனி நிர்வாகத்திற்கு ஒரு வேண்டுதல் கடிதத்தை கீழ்க்கண்டவாறு அனுப்பினார், சுருக்கம்: "கம்பெனிக்கு திருப்பிக்கொடுக்க வேண்டிய கடனைச் செலுத்தும் விதமாக திருநெல்வேலி நாட்டின் வருவாயில் பாதியை முகமது யூசுப் கானிடம் மாபூஸ் கான் செலுத்துவதற்கு தான் கடிதம் எழுத வேண்டும் என்று தாங்கள் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், திருநெல்வேலி நாடு பிரச்சினையில் இருக்கிறது. மேலும், அந்த நாட்டிலிருந்து பெறப்படும் வருவாய் அனைத்தும் அந்தப் பிரச்சினைகளை சரிசெய்வதற்கு மிகப்பெரிய எண்ணிக்கையில் பயன்படுத்தப்படும் இராணுவ துருப்புக்களின் செலவுகளுக்குக் கூட சரியாக இருக்காது. அதேசமயம், அந்நாட்டின் பிரச்சினைகளை சரி செய்வதற்கு முகமது யூசுப் கான் தலைமையில் அனுப்பி வைக்கப்படும் படைகளைச் சார்ந்து மாபூஸ் கானின் படைகளை குறைக்கவும் முடியாது. இந்த விசயத்தில் வசூலிக்கப்படும் ஒவ்வொரு தொகையும் இராணுவ துருப்புகளின் கணக்கில் தான் செலவு செய்யப்படும். திருநெல்வேலியிலிருந்து நீங்கள் பணத்தைப் பெற வேண்டுமானால், மாபூஸ் கான் தனது படைகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்ற முடிவை நோக்கி நீங்கள் சென்றால் அதற்கு பொருத்தமான எண்ணிக்கையுடன் கம்பெனி உதவ வேண்டும். அதே சமயம், கம்பெனி படைகளின் உதவி மூலம் திருநெல்வேலி நாட்டிலுள்ள பிரச்சினைக்குரிய விவகாரங்களை சரிசெய்து, வரி வருவாயை வசூல் செய்யும் பட்சத்தில், வசூலிக்கப்பட்ட தொகையில் ஒரு பாதியை கம்பெனிக்கும், மற்றொரு பாதியை என்னுடைய செலவிற்கும் வைத்துக்கொள்ள உறுதியளிக்க வேண்டுகிறேன். ஒருவேளை கம்பெனி குறைந்தபட்ச எண்ணிக்கையில் படைவீரர்களை அனுப்பி, வரி வருவாயைக் கோரினால், திருநெல்வேலியில் இருக்கும் விவகாரத்தில் மேலும் குழப்பங்கள் தான் நேரக்கூடும். ஆகவே தயவுகூர்ந்து இந்த விவகாரத்தினை தீவிரமாக பரிசீலனை செய்யவும், மேலும், இந்தப் பிரச்சினை தொடர்பாக நீங்கள் என்னென்ன நினைக்கிறீர்களோ அவற்றை எனக்கு எழுதுங்கள். அதன்படி நான் நடந்து கொள்கின்றேன். எனவே, முகமது யூசுப் கானுக்கு விரைந்து திருநெல்வேலியில் கிளர்ச்சி செய்துவரும் பாளையக்காரர்களை ஒடுக்குவதற்கு படைநடத்துவதற்கான உத்தரவை கடிதமாக அனுப்பும் படி வேண்டி கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் எதிரிகளின் நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் எனக்கு வந்த வண்ணம் உள்ளன."[19]

**Endnotes**


1. K. Rajayyan, "Rise and Fall of the Poligars of Tamilnadu," Journal of Madras University, Vol. 46, 1974, pp. 119 – 120.
2. Report on the Records of Fort St. George: Military Department Country Correspondence, 1755, Letter dated 29th November 1755 (Madras: Government Press, 1912), p. 14; see also Robert Caldwell, A Political and General History of the District of Tinnevelly, in the Presidency of Madras: From the Earliest Period to its Cession to the English Government in A.D. 1801 (Madras: Government Press, 1881), pp. 96 - 97.
3. S. Kadhirvel, A History of the Maravas, 1700 – 1802 (Madurai: Madurai Publishing House, 1977), p. 97.
4. Report on the Records of Fort St. George: Military Department Diary and Consultation, 1755, Letter dated 4th February 1755 (Madras: Government Press, 1912), p.25; see also Richard Owen Cambridge, An Account of the War in India Between English and French on the Coast of Coramandel from the Year 1750 to the Year 1760, p. 83; see also Robert Orme, History of the Military Transactions of the British Nation in Indostan: From the Year MDCCXLV, Vol. I (London: J. Nourse, 1763), p. 377.
5. A. J. Stuart, A Manual of the Tinnevelly District in the Presidency of Madras (Madras: Government Press, 1879), p. 48.
6. Report on the Records of Fort St. George: Military Department Diary and Consultation, 1755, Report dated 17th September 1755, pp. 157 - 162; see also S. Kadhirvel, A History of the Maravas, 1700 - 1802, pp. 105 - 106.
7. Robert Orme, History of the Military Transactions of the British Nation in Indostan: From the Year MDCCXLV, Vol. I, p. 390.
8. Report on the Records of Fort St. George: Public Department Diary and Consultations, 1755, Report dated 29th September 1755 (Madras: Government Press, 1942), p. 262.
9. Report on the Records of Fort St. George: Military Department Diary and Consultation, 1755, Report dated 5th September 1755, pp. 144-146.
10. Ibid for Letter dated 15th September 1755, p. 153.
11. Ibid., pp. 153 – 154.
12. Ibid for Report dated 17th September 1755, p. 157.
13. Ibid., pp. 158 – 159.
14. Ibid., p. 160.
15. Ibid for Report dated 17th September 1755, pp. 157-161.
16. Ibid for Letter dated 24th September 1755, p. 164.
17. Report on the Records of Fort St. George: Public Department Diary and Consultations, Report dated 29th September 1755, pp. 262 - 263.
18. Ibid., p. 263; see also Ibid for Letter dated 15th October 1755, pp. 280 – 281; see also A.J. Stuart, A Manual of the Tinnevelly District in the Presidency of Madras, p. 49.
19. Report on the Records of Fort St. George: Military Department Country Correspondence, 1756, Letter dated 12th March 1756 (Madras: Government Press, 1913), p. 33.


**Notes**

பேஷ்குஷ் - கப்பத்தொகை
கிள்ளேதார் - கோட்டையின் கவர்னர்
கொத்துவால் - கோட்டையின் தலைவர்


*கட்டுரையாளர்கள்:*

கி. மகாராஜ பாரதி
முனைவர் பட்ட ஆய்வாளர், நவீன வரலாற்றுத்துறை,
வரலாற்றுப்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

பேரா ஜே.சண்முகராஜா
உதவிப் பேராசிரியர், நவீன வரலாற்றுத்துறை, வரலாற்றுப்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 120/-




₹ 230/-




₹ 120/-




₹ 330/-

திறனாய்வு

# இது போன்ற பதிப்புகள் தொடர்ந்து வெளிவர வேண்டும்

**அ.கா.ஈஸ்வரன்**

பதினெண் மேற்கணக்கு என்று கூறப்படுகிற எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்களைச் சங்க இலக்கியம் என்று அழைக்கப்படுகிறது. சங்க இலக்கியம் தோன்றிய காலம் கி.மு.3 முதல் கி.பி.3 ஆம் நூற்றாண்டு வரை என்று பலகாலமாகக் கூறப்பட்டுவந்தது. கீழடி தொல்லியல் அகழாய்வுக்குப் பிறகு சங்க இலக்கியத்தின் தொடக்க எல்லை கி.மு. 6ஆம் நூற்றாண்டுக்கும் பின்னோக்கிச் செல்கிறது. இத்தகைய பழைமையான இலக்கியத்தை இன்றைய தமிழ் பயிற்சியின் மூலம் நாம் எளிதாகப் படித்திட முடியாது. படிப்பதற்கு இடைக்காலத்தில் எழுதப்பட்ட உரைகளே உதவியாகக் கொள்ளமுடியும்.

தமிழ் இலக்கிய வரலாற்றியல் கி.மு.9ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.14ஆம் நூற்றாண்டு வரை உரையாசிரியர்களின் காலமாகக் கொள்ளப்படுகிறது. இந்த உரைகள், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய இலக்கியத்துக்கு எழுதியது, அந்த உரையாசிரியர்களுக்கு அன்றைக்கு இருந்த தமிழ் பயிற்சியைக் கொண்டு சங்க இலக்கியத்தைப் படிப்பது கடினமான முயற்சியாகவே இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் 2000 ஆண்டுகளுக்குப் பிறகு உள்ள இன்றைய தமிழ் பயிற்சியின் மூலம் படிப்பதைவிட 1000 ஆண்டுகளுக்கு முன் சற்று குறைவான கடினத்தையே தந்திருக்கும் என்பதிலும் ஐயமில்லை. இந்த இடைக்கால உரையாசிரியர்கள் இல்லை என்றால் இக்காலத்தில் சங்க இலக்கியத்தை நேரடியாகப் படித்தறிவது மிகுந்த கடினமான செயலாக இருந்திருக்கும். ஆகவே









இடைக்கால உரைகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகிய பதினெண் மேற்கணக்கு நூல்களுக்கு நச்சினார்க்கினியர் மற்றும் பெயர் தெரியாத பழையுரைகள் கிடைத்துள்ளது. இந்த உரைகளை ஏற்றும் சற்று மாற்றியும் ஒரு நூற்றாண்டுகளாகப் புதிய உரைகள் வந்துள்ளது.

இயந்திர அச்சு உருவான காலத்தில் தோன்றிய பாரதியாரின் கவிதைகளிலேயே பாடவேறுபாடு காணப்படுகிறது. 2000 ஆண்டுகளுக்கு முன்பான பதினெண் மேற்கணக்கு ஏட்டுச்சுவடியை, பல ஆண்டுகளுக்கு இடையில் மீண்டும் மீண்டும் படியெடுக்கும் போது பாடவேறுபாடு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகம் இருக்கிறது. பல்வேறு ஏட்டுச்சுவடிகளைப் பார்வையிட்டு, பாடவேறுபாடுகளைச் சுட்டிக்காட்டியே சங்க இலக்கிய மூலப்பாடத்தை இந்த நூற்றாண்டில் பதிப்பிக்கப்பட்டது.

பல்வேறு உரையாசிரியர்கள் சங்க இலக்கியத்துக்கு உரை எழுதும் போது, அதுவும் 1000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய உரையாக இருந்தாலும், தற்போதைய ஒரு நூற்றாண்டுகளாக எழுதிய புதிய உரையாசிரியர்களாக இருந்தாலும் உரைகளுக்கு இடையே வேறுபாடுகள் இருக்கவே செய்யும். இதனை அறிந்த தமிழ் அறிஞர்கள் கூடி, சங்க இலக்கிய உரைவேறுபாடுகளைச் சுட்டிக்காட்டும் ஒரு நூல் தொகுதிகளை உருவாக்க முனைந்தனர்.

சங்க இலக்கிய மூலத்துக்கு, செம்பதிப்பு எந்தளவுக்குத் தேவையோ அதே அளவுக்கு உரைகளுக்கும் தேவைப்படுகிறது. இதைப் பற்றி முனைவர் அ.செல்வராசு, புறநானூறு பதிப்பில் உள்ள உரைவேறுபாட்டுக்கான காரணங்கள் என்கிற பகுதியில் கூறியுள்ளார்.

> "ஒரு பனுவலுக்கு உரைகள் எந்த அளவிற்குப் பெருகிக் கொண்டு வருகிறதோ அந்த அளவிற்கு உரைவேறுபாடும் பெருகக்கூடும். இவ்வாறு வேறுபடுவது இயல்புதான் என்றாலும்கூட, அதனை அவ்வாறே விட்டுவிடுவது நாளடைவில் மூலபாடத்தை மாற்றும் அளவிற்குக்கூடச் சென்றுவிடக்கூடும். மேற்சுட்டிய வேறுபாடுகள் அனைத்தையும் கவனத்திற்கொண்டு பார்க்கிறபொழுது, செம்பதிப்பு என்பது மூலபாடத்திற்கு மட்டுமன்று, உரைக்கும் தேவைப்படுகிறது என்தையே புரிந்து கொள்ள முடிகிறது."

இந்தக் கூற்றைப் புரிந்து கொண்டாலேயே இந்த "சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம்" என்கிற நூலின் தேவையை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

உரைவேறுபாட்டு நூலுக்கான முறையாக, அவர்கள் பின்பற்றியதைத் தெரிந்து கொண்டால், அந்தப் பணி எவ்வளவு கடினமானது என்பதை அறிய முடிகிறது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றுக்கு வெளிவந்துள்ள உரை நூல்களைத் தொகுத்தல், உரைகளை ஒப்பிட்டுப் பார்த்தல், பாடவேறுபாடுகளைக் கண்டறிதல், உரைவேறுபாடுகளைக் கண்டறிதல், உரைவேறுபாடுகளை ஒப்பிட்டு வேறுபாடுகளைக் கண்டு, அதற்கான காரணங்களைச் சுட்டிக்காட்டுதல் இந்த முறையில்தான் இந்த நூல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மூலப்பாட வேறுபாடுகளைவிட உரைவேறுபாடுகளைக் கண்டறிவது கடுமையான பணி ஆகும். இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்கப் பணியைத்தான் இந்த நூல் தொகுதிகளில் செய்யப்பட்டுள்ளது. இந்தக் கடும்பணியினை முடிப்பதற்கு 10 ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவில் உள்ளவர்கள் இந்தப் பணியை மட்டுமே தமது வேலையாகக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் தமது அலுவல் பணியைச் செய்ய வேண்டும், குடும்ப வேலைகளைச் செய்ய வேண்டும். மீதமுள்ள நேரங்களையே இதற்கு ஒதுக்க முடியும். அதனால்தான் இந்த நூல்கள் வெளிவருவதற்கு 10 ஆண்டுகள் ஆகியிருக்கிறது.

காலம் அதிகமானதற்கு வேறொரு காரணமும் இருக்கிறது. ஒரு நூல் அச்சாகி வெளிவந்த பிறகு தான், அந்த நூலைப் பற்றி மதிப்பிடப்படும். ஆனால் இந்த நூல் அச்சாவதற்கு முன்பே, புறமதிப்பீட்டாளர்கள் நியமித்து மதிப்பீட்டைப் பெற்றுள்ளனர். அந்த மதிப்பீட்டாளர் கருத்தை குழு விவாதத்துக்கு உட்படுத்தி ஏற்கக்கூடியதை ஏற்று மாற்றப்பட்டுள்ளது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய அனைத்து நூல்களுக்கான உரைவேறுபாடுகள் இந்த முறையில் ஒழுங்குப்படுத்தப்பட்டதால் தான் இந்தத் தரத்திற்கு இந்த நூல் வந்திருக்கிறது.

இதுவரை வெளிவந்துள்ள உரைகளில் எது சிறந்தது என்பதை சுட்டிக்காட்டும் வேலையை இந்த நூல் செய்யவில்லை. உரைகளிடையே காணப்படும் வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி அதில் மூலப்பாடலுக்கு நெருக்கமான பொருளைக் குறிப்பிடுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த அரும்பணிக்கு எட்டுத் தமிழ் அறிஞர்கள் கடும் உழைப்பை செலுத்தி உள்ளனர். கூட்டாகச் செயல்பட்டதினால்தான் இந்தத் தொகுப்பு இவ்வளவு சிறப்பாக வந்துள்ளது. க.பாலாஜி, இரா.அறவேந்தன், ம.லோகேஸ்வரன், இரா.மகிழேந்தி, மு.முனீஸ்மூர்த்தி, மா.பரமசிவன், அ.செல்வராசு, நித்தியா அறவேந்தன் ஆகிய எட்டுத் தமிழ் அறிஞர்கள் ஒற்றுமையாக இந்தப் பணியினை முடித்துத் தந்ததற்க்கு இவர்களை

நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த உரைவேறுபாட்டுக் களஞ்சியத்தை வெளியிட்ட என்.சி.பி.எச். நிறுவனத்தையும் சேர்த்தே பாராட்ட வேண்டும். கண்டிப்பாக இது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்கப் பணியே ஆகும்.

சங்கப்பாடல், பாடவேறுபாடு, அடிக்குறிப்புப் பாடவேறுபாடு, உரைவேறுபாடு, பாடல் கருத்து, அருஞ்சொற்பொருள் - இதுவே இந்தச் சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் என்கிற இந்த நூலின் அமைப்பு முறை ஆகும்.

இந்தத் தொகுப்பு நூல்களின் சிறப்பே இந்த உரைவேறுபாட்டில்தான் இருக்கிறது. உரைவேறுபாட்டைக் கண்டறிதல் என்பது அவ்வளவு எளிதான செயல் அல்ல. ஒரே பொருளைக் கொண்ட பல்வேறு உரைகளைப் படித்து, அதில் உள்ள வேறுபாடுகளை எடுத்து எழுதுதல் என்பது சிரமமான ஒன்றே. வெறும் சிரமம் மட்டுமல்ல மனஅழுத்தத்தை ஏற்படுத்தும் என்பதே பெரிய உண்மை.

அகநானூறில் உரைவேறுபாட்டைக் கண்டறிந்த முனைவர் மா.பரமசிவன் அவர்களின் கூற்றே இதற்குச் சான்றாகிறது.

> “.. .. ..மாலை 6 மணிக்கு கல்லூரி முடிந்தவுடன் 7 மணிக்கு வீட்டிற்கு வந்து உரைவேறுபாட்டில் அமரும் நான், இரவு 8.30 மணிக்கு இரவு உணவுக்காக எழுவேன்; பின்னர் இரவு 12 அல்லது 1 மணிவரை எழுத்துப் பணி தொடரும். அதிகாலை 4 மணிக்கே எழுந்து எழுத ஆரம்பித்துவிடுவேன். இரவு 10 மணிக்கு மேல் விழித்துப் பழக்கமில்லாத நான், ஏறக்குறைய 4 மணிநேர உறக்கத்தோடு 301 முதல் 400 பாடல்களுக்கான உரைவேறுபாட்டை எழுதிக்கொண்டிருந்தபோது மன அழுத்தத்திற்கு ஆளானேன். இதற்கிடையில் தந்தை மணிவாளனின் படைப்புகள் குறித்த நூலாக்கத்திற்காகவும் திண்டுக்கல் சென்றுவந்து கொண்டிருக்க வேண்டிய சூழல். 350 பாடல்வரை நிறைவு செய்த எனக்கு மன அழுத்தம் அதிகரிக்கவே எழுத்துப் பணியை நிறுத்தும் சூழல் ஏற்பட்டது. பேராசிரியரும் சூழலைப் புரிந்துகொண்டார். இசிஜி எடுத்துப் பார்த்தபோது, தற்போது முழு உறக்கமும் ஓய்வும்தான் தேவை என்பதை மருத்துவர்கள் தெளிவாக உணர்த்திவிடவே, 3 மாத காலம் உரை வேறுபாட்டுப் பணி கிடப்பில் போடப்பெற்றது. உறக்கமே இல்லாமல் பணியாற்றியதால் உறங்குவதற்காகச் சித்த மருந்து உள்ளிட்ட மருந்துகள் சாப்பிட வேண்டிய சூழலும் ஏற்பட்டது. 2019 கோடை விடுமுறை முழுவதும் உடல்நலக் குறைவால் எனது மாமா வீட்டில் இருந்து ஓய்வெடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. மாமா வீட்டிலும் என்னை அவர்களின் மூத்தமகனைப் போல எண்ணிக் காத்தனர். அதன்பின்னர் முழு ஓய்விற்குப் பிறகு மீண்டும் உரைவேறுபாட்டை எழுதத் தொடங்கினேன்; 2019 நவம்பர் மாதத்தில் நிறைவுசெய்தேன். என்னைப் போலவே உரைவேறுபாடு எழுதிய என் நண்பர்கள் ஒவ்வொருவரும் ஏதோவொரு மனச்சிக்கலுக்கும் தூக்கமின்மையால் மருத்துவம் பார்க்கும் சூழலுக்கும் ஆளாயினர் என்பதும் இங்குக் குறிக்கத்தக்கதாகும்.”

சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் வெளிவந்தது முதல் இந்தத் தொகுப்பை நான் முகநூலில் சிறப்பித்து எழுதி வந்தேன். அப்போது சில இடதுசாரி தோழர்கள், இலக்கியத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து நான் எழுதுவதை ஆச்சரியமாகப் பார்த்தனர். அப்படிப்பட்டவர்களுக்கு உரைவேறுபாட்டைக் கண்டறியும் பணியில் ஈடுபட்ட தமிழ் அறிஞர்களின் கடும் உழைப்பையும் அவர்கள் அடைந்த மன அழுத்தத்தையும் மனதில் கொண்டே சிறப்பித்துள்ளேன் என்று இங்கே பதிலளிக்கிறேன்.

தமிழர்களை ஒன்றிணைத்தல் என்பது அவ்வளவு எளிதான செயல் அல்ல, தமிழ் அறிஞர்களை ஒன்றிணைப்பது அதைவிடச் சிரமம் மிகுந்த செயலாகும். உரைவேறுபாடுகளைக் கண்டறிந்தவர்களையும் அவைகளை மதிப்பீடு செய்தவர்களையும் சேர்த்துப் பார்த்தால், இவ்வளவு தமிழ் அறிஞர்களை ஒன்றிணைக்கும் பணியினை

வெற்றிகரமாகச் செய்து முடித்ததற்கு, முனைவர் இரா.அறவேந்தன் அவர்களின் இல்லமான “தாயறமே” காரணம் என்பதை அறிய முடிகிறது. முனைவர் இரா.அறவேந்தன் அவர்களின் தலைமையில் இந்தச் சிறப்பான பெரும்பணி நிறைவேறி உள்ளது.

சங்க இலக்கிய மூலப்பாடலாக, முதல் பதிப்பையே அனைவரும் ஒரேவிதமாக ஏற்றுள்ளனர், அடுத்தப் பதிப்புகளில் மாற்றப்பட்டது பாடவேறுபாடாகக் கருதப்பட்டுள்ளது. இந்த “சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம்” என்கிற இந்த நூல் மூலப்பாடம், உரைவேறுபாடு ஆகியவற்றோடு நின்றுவிடவில்லை, உரைபகுதியும் காணப்படுகிறது. சங்க இலக்கியத்துக்கு உரையாகப் புதிய தெளிவுரையை எழுதாது, இதுவரை எழுதப்பட்ட தெளிவுரைகளின் சாரமாகத் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது, அதனால் உரை என்கிற சொல்லைப் பயன்படுத்தாமல் "பாடல் கருத்து" என்று இந்நூலில் கூறப்பட்டுள்ளது. மேலும் மூலப்பாடலில் உள்ள கருத்தை விளக்குவதற்கு கூடுதலாக எதையும் சேர்க்காமல், மூலப்பாடல் அடிகளில் காணப்படும் கருத்துக்களை மட்டுமே கூடுமானவரை கொடுக்க வேண்டும் என்கிற நோக்கத்தின் அடிப்படையில் பாடல் கருத்து கொடுக்கப்பட்டுள்ளது.

கல்லூரியில் தமிழ் இலக்கியம் பயிலுவதற்கு முன்பே சங்க இலக்கியங்களைப் புலியூர்க்கேசிகன் தெளிவுரைகளின் வாயிலாக நான் பயின்றேன். இது ஒரு மக்கள் உரையாக இருப்பதினால் இதன் தரத்தைப் பற்றிய ஐயம் அன்றுமுதல் இன்றுவரை எனக்கு இருந்துவந்தது. அகநானூறு முதல் தொகுதியில் புலியூர்க்கேசிகனைப் பற்றி முனைவர் மா.பரமசிவன் கூறியதை அறிந்த பின்பே அந்த ஐயம் நீங்கியது.

> "புலியூர்க்கேசிகன் எந்த இலக்கிய அடிகளையும் விழுங்காமல் அதேவேளை, எளிமையான சொற்களைக் கொண்டு தேவையான இடங்களில் தேவையான விளக்கங்களை அளித்துத் தெளிவான ஓர் உரையை உருவாக்கியுள்ளார். புலமைத்துவ உரையாளர்கள் தடுமாறுகின்ற ஒரு சில இடங்களுக்கும் இவர் உரை தெளிவான பொருளைக் குறிக்கிறது என்பது இத்தெளிவுரையின் தனித்தன்மையாகும். இந்த உரை அளவிற்கு இதைத் தழுவி எழுந்த எந்தப் பிற்கால உரைகளும் உருவாகவில்லை என்பதும் இன்றளவும் பல்வேறு மறுபதிப்புகளைக் கண்டுவருகிறது என்பதும் இவ்வுரையின் பெருமையைப் பறைசாற்றுவதாகும்."

இதனைப் படித்த பிறகு தெளிவுகிட்டியது. ஏன் என்றால், பரிபாடலில், செவ்வேள் ஒன்பதாவது பாடலில், “நான்மறை விரித்த நல்லிசை விளக்கும் வாய்மொழிப் புலவீர்!” என்பதில் உள்ள “வாய்மொழிப் புலவீர்” என்பதற்குப் புலியூர்க்கேசிகன் “வாய்ப் பேச்சில் வல்லவரான வடமொழிப் புலவர்களே” என்று தெளிவுரை எழுதியுள்ளார். இந்த உரை பாரதியார் கூறிய “வாய்ச்சொல்லில் வீரர்” என்பதின் தாக்கம் காணப்படுகிறது. இதைத் தவிர்த்துப் பார்க்கும் போது புலியூர்க்கேசிகன் உரைகளே சங்க இலக்கியத்துக்கான புரிதலை என்னைப் போன்றோர்களுக்குத் தந்துள்ளது.

2004இல் என்.சி.பி.எச். வெளியிட்ட சங்க இலக்கியத் தெளிவுரைகளுக்கு முன்பு புலியூர்க்கேசிகன் உரைகளையே நான் முழுதுமாக நம்பி இருந்தேன். இந்தப் பரிபாடல் பகுதிக்கு 2004இல் வெளிவந்த என்.சி.பி.எச். வெளியீட்டில் “வாய்மொழியாகிய வேதத்தில் வல்ல புலவர்களே!” என்று இருந்தது. ஆக நான் புரிந்து கொண்டது சரி என்பதை இந்த என்.சி.பி.எச். வெளியீடு உறுதிப்படுத்தியது.

இதுபோன்ற உரைவேறுபாடுகளைத் தொகுத்துக்காட்டுகிறது இந்த “சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம்.” மேலே குறிப்பிட்ட உரைவேறுபாட்டை இந்த நூல் “தற்கால வழக்கினைக் கையாளுதல்.” “புழங்குபொருட்களை எடுத்துரைத்தலில் வேறுபாடு” என்று கூறுகிறது. இன்றைய வழக்கில் உள்ள சொல்லின் பொருளில் அன்றைய சொல்லுக்கு ஏற்றி உரைத்தல் என்பதே இத்தகைய உரைவேறுபாட்டுக்குக் காரணமாகும்.

உரைவேறுபாட்டுக்கு பல காரணங்கள் இருக்கின்றன, அதில் சிலவற்றைப் பார்ப்போம்.



1) மூலபாட வேறுபாடு காரணமாதல்
2) கொண்டுகூட்டிப் பொருள்கொள்ளுதல் காரணமாதல்
3) இலக்கண மரபினைப் பின்பற்றுதலில் வேறுபாடு
4) தற்கால வழக்கினைக் கையாளுதல்
5) ஆணாதிக்க மனப்பாங்கில் உரையெழுதும் நிலையில்
6) வழிபாட்டுக் கருத்துகளில் வேறுபாடு
7) புறச்சமயக் காழ்ப்புணர்ச்சி காரணமாக
8) பாடலிலுள்ள சமயம்சார் குறிப்பினை விளக்குதலில் தற்சார்புடன் செயல்படலால்

மூலபாடத்தில் வேறுபாடு இருந்தால், அப்படியே அது உரையில் வெளிப்படும். பாடலின் வரிசையில் பொருள் கொள்ளாது, ஒரு சொல்லையோ தொடரையோ பொருத்தமான மற்றொரு சொல்லோடு அல்லது தொடரோடு பொருத்தி விளக்குதல், கொண்டுகூட்டிப் பொருள்கொள்ளுதல் என்று அழைக்கப்படுகிறது. அப்படிச் செய்யும் போது மூலப்பாடத்துக்கு மாறாகப் பொருள் கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது.

சங்க இலக்கியத்துக்கு வழிகாட்டியாகத் தொல்காப்பியம் என்கிற இலக்கண நூல் இருக்கிறது, இதனைக் கணக்கில் கொள்ளாது இலக்கணத்துக்கு மாறாகப் பொருள் கூறப்பட்டால், இலக்கண மரபினைப் பின்பற்றாமையினால் உரைவேறுபாடு ஏற்படுகிறது.

ஒரு இலக்கியத்தை அது தோன்றிய காலச் சூழலைக் கொண்டே விளக்க வேண்டும், அப்படியில்லாது இன்றைய நிலையில் உள்ள புரிதலுக்கு ஏற்ப உரை எழுதினால் அது தற்கால வழக்கினைக் கையாளுதலால் உரைவேறுபாடு ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது.

தாய்வழிச் சமூகம் சிதைந்து ஆணாதிக்கம் ஏற்பட்ட போது சங்க இலக்கியம் தோன்றியது. சங்க இலக்கியத்தில் காணும் சமூகம் ஆணாதிக்கச் சமூகமே, இருந்தாலும் பழைய மரபுகள் அங்கே தொடர்கிறது, அதனைக் கணக்கில் கொள்ளாது அதற்கு ஆணாதிக்க மனப்பான்மையினால் எழுதுவதினால் உரைவேறுபாடு ஏற்படுகிறது. இதற்கு உதாரணமாகக் கலித்தொகை நூலில் ''ஈன்றவள்'' ''மகவீன்றவள்'' என்று பொதுவாகக் கூறப்பட்டிருந்தாலும் இதற்கு உரை எழுதும் போது புதல்வனை ஈன்றவள் என்று புதல்வனைச் சேர்த்துக் கூறுவது ஆணாதிக்க மனப்பான்மை என்று இந்நூல் சுட்டிக்காட்டி உள்ளது.

''தேம்பலிச் செய்த வீர்நறுங் கையள்'' *(ஐங் 259/4)* என்கிற ஐங்குறுநூறு பாடலில் உள்ள ''தேம்பலி'' என்பதற்கு இனிய உணவு என்பதே நேரடி பொருள், ஆனால் இதற்கு விளக்கம் கொடுப்பவர்கள் ''தேவருணவு'' என்று உரை எழுதுவது ''வழிபாட்டுக் கருத்துகளில் வேறுபாடு'' ஆகும். அதாவது தாம் வழிபடுகிற கருத்துக்களின் வழியில் உரை எழுதுவதினால் ஏற்படும் உரைவேறுபாடு.

''உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்'' *(9:2)* என்கிற கலித்தொகைப் பாடலில் உள்ள ''கரகம்'' என்பது அந்தணர்க்குரிய கமண்டலத்தைக் குறிக்கிறது. ஆனால் சில உரையாசிரியர்கள் ''பிச்சைப் பாத்திரம்'' என்று எழுதுவதை, புறச்சமயக் காழ்ப்புணர்வு காரணமாக எழும் உரைவேறுபாடு என்று இந்நூல் கூறுகிறது.

"தொல்லியல் ஞாலத்துத் தொழிலாற்றி ஞாயிறு
வல்லவன் கூறிய வினைதலை
வைத்தான்போல்" (148:1–2)

-என்கிற கலித்தொகைப் பாடலில் உள்ள ''வல்லவன்'' என்ற சொல் காமனைக் குறிக்கிறது, ஆனால் இதற்கு ''எல்லாம் வல்ல இறைவன்'' என்று சமயச்சார்பாக சில உரைகள் எழுதப்பட்டிருக்கிறது. இவ்வாறு எழுதுவது உரையாசிரியர் தம்முடைய சமயம் சார்ந்த கருத்தோடு இணைத்து எழுதுவதால் உரைவேறுபாடு ஏற்பட்டுள்ளது.

சமஸ்கிருதமயமாதல் என்பது சங்க இலக்கியக் காலத்திலேயே தொடங்கிவிட்டது கண்டிப்பாக அதைச் சுட்டிக்காட்டி அகற்ற வேண்டும். பிற மொழி தாக்கம், அல்லது பிறவற்றின் தாக்கம் இல்லாது எதுவும் வளர்ச்சி பெற்றதில்லை, தொடர்பற்றுத் தனித்திருப்பது அழிந்தே தீரும். புதிய சூழ்நிலைக்கு ஏற்ப தம்மை வளர்த்திடும்போது பிறவற்றின் தாக்கம் இருக்கும், இந்தத் தாக்கம் வளர்ச்சிக்கானது, ஆனால் பிறவற்றில் நுழைந்து தனதாக்கும் முயற்சி என்பது மோசடியான செயலாகும். அது எதுவாக இருந்தாலும் அதை எதிர்த்து மறுத்து உண்மையை நிலைநிறுத்தப்பட வேண்டும்.

''நெடுநல்வாடை'' நூலில் முன்னுரைப் பகுதியில், பொ.வே.சோமசுந்தரனாரிடம் சைவப் பற்று வெளிப்படுவதை, இந்நூல் குறிப்பிட்டுள்ளதை பாராட்டாமல் இருக்க முடியாது. சமஸ்கிருதமயமாதலைப் போன்றே சைவமயமாதலையும் மறுத்து உண்மையை நிலைநிறுத்த வேண்டும். ஆதாரத்துடன் நிறுவுவதில்தான் உண்மைத்தன்மை அடங்கி உள்ளது. எத்தகைய தலையீடும் இல்லாது உண்மை வெளிப்பட வேண்டும், அதற்கான முயற்சியே பாராட்டுதலுக்கும் சிறப்புக்கும் உரியது ஆகும்.

''1956-இல் கழக வெளியீடாக, பொ.வே.சோமசுந்தரனாரின் உரையுடன் வெளிவந்த பத்துப்பாட்டு, 'நச்சினார்க்கினியரின் நல்லுரை

இருந்தாலும், எளிமையும் புதுமையும் கொண்ட உரை வகுப்பதே நோக்கம் எனத் தெரிவிக்கின்றது. அதன்படி, ஒரு சில இடங்களில் நச்சினார்க்கினியர் உரையை மாற்றி உரைப்பதையும் காண முடிகின்றது. ஆராய்ச்சி முன்னுரையில் மறைமலையடிகளின் கருத்துத் துணையோடு தமது சைவப் பற்றை வெளிப்படுத்துகிறார் இவர்.''

அதே போல, குறுந்தொகையில் சைவமயமாக்கலையும் வைதீகப்படுத்துதலையும் இந்நூல் சுட்டிக்காட்டியுள்ளது.

''...பாடல் பொருண்மையை வருவித்துக் கொண்டு விளக்குதலால் குறுந்தொகையின் மூன்று பாடல்கள் உரையாசிரியர் சிலரால் வைதீகப்படுத்தப் பெற்றுள்ளன.

**விவரம் வருமாறு:**

குறுந்தொகையின் முதல் பாடல் பாடாண் திணைக்கு உரியதாகத் தொடக்ககால உரையாசிரியர்கள் குறித்துள்ளனர். அப்பாடலினை உவேசா முருக வழிபாட்டுக்குரியது என்கிறார். இதுபோன்றே 'கொங்குதேர்' என்று தொடங்கும் குறுந்தொகைப் பாடல் (2) சிவன் X நக்கீரர் எனும் திருவிளையாடல் புராணக் கதையோடு தொடர்புபடுத்தி உரையாசிரியர் சிலரால் விளக்கப் பெற்றுள்ளது. இப்புராணக் கதையை 'வரலாறு' என்றே உவேசா குறித்துச் செல்கின்றார்.

நிலத்தினும் பெரிதே (3) எனும் பாடலை உவேசாவும் இராகவையங்காரும் முற்றிலும் சமயச் சார்பு அடிப்படையிலேயே விளக்குகின்றனர். இவைபோன்றே கெழீஇய நட்பை (2) எழுபிறப்பிற்குரியது என்றும் வானினும் (3), பெரும்பெயர் உலகம் (83), புத்தேள் நாடு (101) என்பன தேவலோகத்தைக் குறிக்கின்றன என்றும் நோமென் நெஞ்சு (4) மூன்று முறை இடம் பெறுவதால் முப்பிறவிகளைக் குறிக்கின்றது என்றும் அன்புடை நெஞ்சம் தெய்வத்தால் கலந்தது (40, 371), மறுமைக்குச் செல்வதற்காகக் கொடை (137), தெய்வத்தன்மையால் தொழத்தக்க பிறை (178), திருமனை - திருமகள் தங்கும் மனை (181), அரளை மாலை - ருத்திராத்திர மாலை (214), தலைவி தெய்வத்திடம் வேண்டல் (378), ஆ நெய்யால் தெய்வத்தை வழிபடல் (398) நெடுவரை மருங்கில் பாம்புபட ஆதிசேடன் மலையைச் சுற்றியது என்றும் பாடல் பொருண்மையை வைதீகப் படுத்தும் பாங்கு ஒரு சில உரையாசிரியர்களிடம் மட்டும் காணப் பெறுகின்றது.''

இவைகளைப் பார்க்கும் போது சங்க இலக்கியத்துக்கு உரைவேறுபாட்டுக் களஞ்சியம் எவ்வளவு அவசியமானது என்பதை அறிய முடிகிறது. இப்படிக் கூறுவதினால் சமயவழி உரை வேறுபாட்டுக்கு மட்டுமே இந்த நூல் முதன்மை இடம் கொடுக்கப்பட்டுள்ளது என்று கருதிடக்கூடாது. சமயக் கண்ணோட்டத்தினால் உருவான வேறுபாட்டை இந்த நூல் கணக்கில் கொண்டுள்ளதை குறிப்பிடுவதற்காக இங்கே கூறப்பட்டது. சமய வேறுபாட்டைவிட மற்ற உரைவேறுபாடுகளே அதிகம் இந்த நூலில் காணப்படுகிறது.

இந்த உரை வேறுபாட்டுக் களஞ்சியம் உருவாவதற்குப் பாடுபட்ட முனைவர்கள் க.பாலாஜி, இரா.அறவேந்தன் ம.லோகேஸ்வரன், இரா.மகிழேந்தி, மு.முனீஸ்மூர்த்தி, மா.பரமசிவன், அ.செல்வராசு, நித்தியா அறவேந்தன் ஆகியோர்களாவர். இவர்கள் மட்டுமல்லாது மதிப்பீட்டுப் பணிக்கும் பல அறிஞர்கள் பணிபுரிந்துள்ளனர். இவர்களின் பத்தாண்டு கடும் உழைப்பால் கிடைத்த இந்த நூல்களுக்காக பாராட்டுவதோடு நன்றியையும் செலுத்த வேண்டும்.

''சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம்'' என்கிற இந்தப் பதினெண் மேற்கணக்கு நூல்களை வெளியிட்ட என்.சி.பி.எச். நிறுவனத்தையும் பாராட்ட வேண்டும்.

இதனை மாணவர்கள் மட்டுமல்லாது சங்க இலக்கியத்தைப் படிக்க விரும்பும் அனைவருக்கும் இந்த நூல் தொகுதிகள் பயனுள்ளதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இருபத்தி இரண்டு நூல்களைக் கொண்ட இந்தத் தொகுதியை, என்.சி.பி.எச். நிறுவனம் குறைந்த விலையில் வழங்கி இருக்கிறது. இருந்தாலும் இதனைத் தனிப்பட்ட முறையில் பலரால் வாங்க முடியாது, சிறு ஊர் முதல் பெருநகரம் வரையில் உள்ள நூலகங்கள் இதனை வாங்கி வைத்தால் அனைவராலும் படித்துப் பயனடைவதற்கு உதவியாக இருக்கும்.

கீழடி போன்ற இடங்களில் தொல்லியல் ஆய்வுகள் சங்க இலக்கியத்தை வரலாறாகப் பார்க்க வைக்கிறது. கீழடி தொல்லியல் ஆய்வுகள் பொது மக்களிடம் கொண்டு சேர்க்கப்பட்டது போலச் சங்க இலக்கியமும் பொது மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். அதற்கு இதுபோன்ற பதிப்புகள் தொடர்ந்து வெளிவர வேண்டும்.

சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம் நூல் தொகுதிகளுக்கான அறிமுகமாகவே இதனை எழுத நினைத்தேன், ஆனால் அறிமுகத்துடன், நன்றி தெரிவித்தலாகவும், பாராட்டுதலாகவும் மாறிவிட்டது, இதைத் தவிர்க்க முடியவில்லை.

●

கட்டுரையாளர், எழுத்தாளர்,

# கவி கா.மு. ஷெரீபின் இறையருள் வேட்டல்

முனைவர் உ. அலிபாவா
& ப. முத்துபாண்டியன்

கவி கா.மு. ஷெரீப் திருவாரூர் மாவட்டத்திலுள்ள அபிவிருத்தீஸ்வரத்தில் காதர்ஷா, இபுராஹிம் பாத்தும்மாள் இணையருக்கு 1914ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11ஆம் நாள் பிறந்தார். பெற்றோர் படித்திருந்தபோதும் வறுமை காரணமாகக் கவி கா.மு. ஷெரீப் பள்ளி சென்று பயிலும் வாய்ப்பினைப் பெறவில்லை. தந்தையாரிடமும் மற்றோரிடமும் தாமாக முயன்று கேட்டுக் கல்வி கற்றுக் கவிதை புனையும் பெற்றியும் பெற்றார். அரசியலிலும் ஆன்மீகத்திலும் சமூகப் பிரக்ஞையிலும் சிறந்து விளங்கிய கவி கா.மு. ஷெரீப் கவிதை மட்டுமன்றி சிறுகதை, புதினம், நாடகம், கட்டுரை, சிற்றிலக்கியம், கடித இலக்கியம், திரையிசைப் பாடல்கள், காவியம், பயண இலக்கியம், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், இதழியல் பணியான பத்திரிகைத் தலையங்கம், வானொலி உரை, இலக்கிய உரையாசிரியர், மிகச் சிறந்த சொற்பொழிவாளர் எனப் பல்வேறு தளங்களில் தமிழ் இலக்கியத்திற்குத் தமது பங்களிப்பினைச் செலுத்தியுள்ளார். அவருடைய இலக்கியப் படைப்புகளுள் குறிப்பிடத்தக்க அளவில் இஸ்லாமிய இலக்கியப் படைப்புகளும் படைத்து வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் இறையருள் வேட்டல் எனும் நூலும் ஒன்றாகும்.

கவி கா.மு. ஷெரீப் பற்றி மு. கருணாநிதி, "அண்ணன் கவி கா.மு. ஷெரீப் அவர்கள் என்னுடைய சொந்த மாவட்டமான தஞ்சையில் பிறந்தவர். நல்ல கவிஞர், சிறந்த எழுத்தாளர், விடுதலைப் போராட்ட வீரர், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர். சீறாப்புராணத்திற்கு உரை எழுதியவர். என்னுடன் நெருக்கமான நட்பு பூண்டவர்" எனக் குறிப்பிடுகிறார் (வாழ்த்துச் செய்தி, கவி கா.மு. ஷெரீப் நூற்றாண்டு விழா மலர், ப.2).

ஓவியப் பாவலர் மு. வலவன் தமது நெஞ்சத் திரையில் நினைவுக் கோடுகள் எனும் நூலில் கவிஞரைப் பற்றி, "காயல் பட்டணத்து சைகு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிம்

புலவர் குத்பு நாயகம், திருக்காரணப் புராணம், திருமணிமாலை, புதூகுஷ்ஷாம் என நான்கு காப்பியங்கள் நல்கியுள்ளார். மதுரை மீசல் வண்ணக் களஞ்சியப் புலவர், இராச நாயகம், குத்பு நாயகம், தீன் விளக்கம் என்று மூன்று காப்பியங்களை வழங்கியுள்ளார். நாகூர் குலாம் காதிறு நாவலர் எனும் புலவர் நாகூர்ப் புராணம், ஆரிபு நாயகம் என்னும் இரண்டு பெருங்காப்பியங்களையும் முகாசபாமாலை என்னும் சிறுகாப்பியத்தையும் இயற்றியவர் ஆவார். வாழையடி வாழையென இந்த மரபில் தோன்றித் தமிழ் இலக்கியத்திற்குத் தன் எண்ணற்ற படைப்புகள் மூலம் ஏற்றமளித்த பெருந்தகை நம் முதுபெரும் பாவலர் அமரர் கவி கா.மு. ஷெரீப் ஐயா ஆவார்கள்'' என அறிமுகம் செய்கிறார் (ஓவியப் பாவலர் மு. வலவன், நெஞ்சத் திரையில் நினைவுக் கோடுகள், பக். 5-6).

சமய நல்லிணக்க உணர்வாளரான கவிஞரைப் பற்றி அபிராமி நிலையத்தார், ''எல்லாச் சமயங்களையும் சமயத் தத்துவங்களையும் நுணுகி ஆய்ந்தவர். காழ்ப்பற்றவர். இலக்கியம் என்றால் அது எச்சமயம் சார்ந்ததாயினும் படிப்பவர். அஃதொப்ப சங்க இலக்கியங்கள் முதல் இன்றளவும் உள்ள இலக்கிய வகை அனைத்தையும் ஊன்றிப் படிப்பவர். அவை பற்றி எடுத்துரைக்கவும் வல்லவர்'' எனக் குறிப்பிடுகின்றனர் (அபிராமி நிலையத்தார், பதிப்புரை, கண்ணகியின் கனவு, ப.7).

''மனிதரெலாம் ஓர் குலமாகும் நாளே மகிழ்ச்சிக்குரிய நாள்'' (கவி கா.மு. ஷெரீப், கவி கா.மு. ஷெரீப் கவிதைகள், ப.X) எனும் எண்ணமுள்ள கவி கா.மு. ஷெரீப், ''உயிர் உள்ள வரை எழுதிக் கொண்டே இருக்க வேண்டும்'' என்று ஆசைப்பட்டார் (மேலது,ப.X). ''முதலிலும் இடையிலும் முடிவிலும் தமிழன். இந்தியக் குடிமகன். உலக மானிடரில் ஒருவன் இறை ஏற்பில் இஸ்லாமிய வழியினன்'' (மேலது, ப.X)எனத் தம்மைப் பற்றிக் குறிப்பிடும் கவிஞர் 1978ஆம் ஆண்டு இறையருள் வேட்டல் எனும் நூலைப் படைத்துள்ளார். ''இத்தொகுதியில் அடங்கியுள்ள ஆழிய கருத்துகளைக் கொண்ட பாடல்கள் மனவழுக்கைப் போக்கி மதிநலத்தைத் துலக்கும் மாண்புடையவையாகும்'' என்று எம். அப்துல் வஹாப் இத்தொகுப்புப் பற்றி குறிப்பிடுகிறார் (கவி கா.மு. ஷெரீப், இறையருள் வேட்டல், முன்னுரை, ப.3).

இந்நூலில் எல்லோர் பாவங்களையும் தன் பாவங்களாகக் கருதி இறைவனிடம் கவிஞர் வேண்டும் போக்கும் எல்லோரிடமும் இருக்கும் பாவக்கறைகளை அகற்றி நற்பண்பினை வேண்டும் போக்கும் காணப்படுகிறது. நூறு பாடல்களைக் கொண்ட இந்நூல் பாடல் முழுவதும் அடிதோறும் இறுதிச் சீர் அல்லாஹ் என முடிந்துள்ளது.

''கலைமாமணி அவர்களின் ''இறையருள் வேட்டல்'' எனும் இனிய நூலைப் படிக்கும் பேறு பெற்றேன். பாடல்கள் பாகாக, தேனாக, பழச்சாறாகத் தித்தித்தன. இவரின் இசை நலங்கனிந்த பாடல்களால் தமிழ்த் திரையுலகம் வளம் பெற்றது. இவரது தேசியப் பாடல்கள் சுதந்திரக் கனலை மூண்டெழச் செய்தன. தற்போது இவரது புதிய படைப்புகள் இஸ்லாமிய இலக்கியச் சோலையை வளப்படுத்துகின்றன. 'நபியே எங்கள் நாயகமே' பக்தி மணங் கமழச் செய்யும் பாமாலையாகும். இறையருள் வேட்டல் இஸ்லாமியத் தமிழுக்கும் இலக்கியத் துறைக்கும் வளமும் நலமும் தரும் பக்தி இலக்கியமாகும். எளிமையும் தெளிவும் இலக்கியத்திற்கு இனிமையும் பொலிவும் தருவன. உணர்ச்சியும் கற்பனையும் கவிதைக் கலைக்கு உயிர் நாடிகளாகும். இப்பண்புகள் அனைத்தும் பொருந்திச் சொற்சுவையும் பொருட்சுவையும் மிகுந்து அணி நலமும் சுவை நலமும் சிறந்து விளங்குகின்றன'' என்று சி. நயினார் முகம்மது பாராட்டுகிறார் (கவி கா.மு. ஷெரீப், சி. நயினார் முகம்மது, ஆய்வுரை, ப.7). 'இறையருள் வேட்டல்',

"நலமே யளிப்பவா நல்லவை செய்பவா  
நானிலங் காக்கு மல்லாஹ்!  
பலமே தருபவா பாவந் துடைப்பவா  
பாங்குள என்ற னல்லாற்  
நிலமே தொழுதிட நீள்புவி யாள்பவா  
நித்திய னான அல்லாஹ்  
உளமே வைத்துனை நாளும் வணங்கிடும்  
உயர்வெனக் கீந்தி டல்லாஹ்!" (பா.1)

எனத் தொடங்குகிறது. இப்பாடலில் எல்லோர்க்கும் நல்லதையே செய்து நானிலம் காக்கும் இறைவன் எல்லோர் பாவங்களையும் துடைத்து என்றும் நிலைத்திருப்பவன். ஆகவே, அவன் உளம் வைத்து அவனை வணங்கிடும் உயர்வினைத் தனக்குத் தர வேண்டுகிறார்.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளான கலிமா, தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ் எனும் ஐந்தனுள் 'அல்லாஹ்' என்னும் ஏக இறைவனை அடிதோறும் அழைக்கிறார்.

"நபியே நெஞ்சுடன் நானுனைத் தொழுதிட  
நயந்தெனக் கருள்வா யல்லாஹ்!" (பா.2)  
"சங்கை யோடுனை யென்றுந் தொழுதிடுஞ்  
சால்பெனக் கீந்தி டல்லாஹ்!"  
(பா.6)

"உந்தனை நான்தினம் போற்றித் தொழுதற்  
குதவுவா யென்ற னல்லாஹ்!" (பா.7)

எனும் அடிகளில் இரண்டாவது கடமையினை நிறைவேற்றும் அருளை வேண்டி நிற்கிறார். இங்ஙனம் தொழுகையை வேண்டும் கவிஞர் ஒரே பாடலில் ஐம்பெருங் கடமைகளையும் சுட்டுகிறார்.

"ஐந்தில் தோய்ந்திலேன் ஆறை யறிந்திலேன்
அதிகமாய்ப் பேசு கின்றேன்
ஐந்தை யடக்கு மாற்றலைப் பெற்றிலேன்
அகில மென்றனைப் புகழ
சிந்தை யிலெண்ணுவேன் சிறுமையே
செய்குவேன்
தினமிது வென்றன் தொழிலாம்
நைந்துநா னழிந்திடா துன்னை வணங்கிடும்
நற்பே றளித்தி டல்லாஹ்!" (பா.36)

எனும் இப்பாடலிலுள்ள 'ஐந்து' எனும் சொல் கலிமா, தொழுகை, நோன்பு, ஜக்காத், ஹஜ்ஜு ஆகிய ஐம்பெருங் கடமைகளையும் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளையும் ஐந்தெழுத்துகளைக் கொண்ட 'அல்லாஹ்' எனும் திருநாமத்தையும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் முதலிய பஞ்ச பூதங்களையும் குறிப்பிடுகின்றது. 'ஆறு' எனும் சொல் இறை நம்பிக்கையைக் குறிக்கும் ஈமானின் பர்ளுகள் (கட்டாயம் பின்பற்ற வேண்டியவை) ஆறையும் மூலம், தொப்புள், மேல் வயிறு, நெஞ்சு, மிடறு, புருவ நடு ஆகிய ஆறு ஆதாரங்களையும் ஆறு தத்துவங்களையும் நன்னெறியையும் குறிப்பிடுகின்றது. ஐந்து, ஆறு ஆகிய இரு எண்களிலும் எண்ணற்ற பொருட்களைப் புதைத்துக் கவிஞர் இப்பாடலில் நயம்பட எடுத்துரைக்கிறார்.

பிறர் மனை நயத்தலைக் கவிஞர் இழித்துரைக்கிறார். "பிறர் மனை நயந்து திரிபவனின் பிழை பொறுக்க மாட்டான் இறைவன்" (கவி கா.மு. ஷெரீப், இறையருள் வேட்டல், பா.15) என்பதையுணர்த்தும் கவிஞர், 'இறைவன் பொய் கூறித் திரிபவனை வெறுப்பான்' (மேலது, பா.15), 'சூதும் கள்ளும் உடையவனைக் கண்டு இறைவன் வெகுள்வான்' (மேலது, பா.15), 'ஈகை இல்லாதவன் ஈடேற மாட்டான்' (மேலது, பா.16), 'ஆணவத்தை அகற்ற வேண்டும்' (மேலது, பா.34), 'ஆசையை அகற்ற வேண்டும்' (மேலது, பா.37), 'வியாபாரத்தில் கொள்ளை இலாபம் கூடாது' (மேலது, பா.38) எனப் பல்வேறு அரிய கருத்து மணிகளையும் வெளியிடுகிறார். ஒரு பாடலில் உலக நிலையாமையையும் படம்பிடித்துக் காட்டுகிறார்;

"மாளிகை பலப்பல கட்டினேன் காலமும்
வாழ்ந்திடும் நினைப்பி னல்லாஹ்
நாழிகைப் பொழுதையும் வீணாக் கிடாமலே
நான்பொருள் சேர்த்தே னல்லாஹ்
ஆளுநல் லாசையால் போதிய பதவிபெற்
றாட்சியுஞ் செய்தே னல்லாஹ்
சூழு மிவையெலாஞ் சொர்க்கம் சேர்க்குமோ
சொல்லுவா யெந்த னல்லாஹ்!"

(பா.45)

இப்பாடலில் உலக வாழ்க்கையைப் பெரிதாக எண்ணி வாழும் மூடரைக் கண்டிக்கிறார். 'இன்றைக்கு இருப்பவர் நாளை இல்லை' எனும் நிலையை உணர்ந்து வாழ அறிவுறுத்துகிறார். அத்தகைய நிலையை இறைவன் தமக்கு அருள வேண்டுகிறார். நூறாவது பாடலில் கவிஞர் இறைவனிடம்,

"எழுத்தும் பேச்சும் நினைப்பும் உன்வழி
இயங்கிட வைத்தி டல்லாஹ்
வழுத்தி யுன்னை நாளும் வணங்கிடும்
மனமெனக் கருள்வா யல்லாஹ்
இழுத்துப் பிடித்தும் அடங்கா மனத்தின்
இடக்கை யடக்கி டல்லாஹ்!
பழுத்த பழமாய்ப் பக்குவ மடைந்துனைப்
பற்றிட வைத்தி டல்லாஹ்!"

(பா.100)

என்று இறைஞ்சி நூலை நிறைவு செய்கிறார். நூல் நெடுகிலும் இஸ்லாமியருக்குமானவும் இஸ்லாமியரல்லாத பொதுவான அனைத்து மார்க்க மக்களுக்கானவுமான அரிய கருத்து மணிகளைச் சந்த நயத்துடன் சிந்தையள்ளுமாறு கவிஞர் எடுத்து மொழிகிறார்.

சமுதாய மேம்பாட்டிற்கு அல்லும் பகலும் அயராது உழைத்து வாழும் கவி கா.மு. ஷெரீபின் இறையருள் வேட்டல் தமிழ் இலக்கியத்திற்குக் கிடைத்த அரிய மணியாரமாகும்.

கவிஞர் வானம்பாடி இந்நூல் குறித்து, "இறைவனின் அருள் வேண்டி எல்லா வரிகளுமே குரல் எழுப்புகின்றன; அந்தக் குரல் - எளிய குரல் - இனிய குரல் - இதயத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படும் குரல்! இவற்றைப் பூரணமாக இயல்பாக உணர்ந்து கொள்ள முடிகிறது! எழுத்துக்கள் இமயத்தின் அடிவாரத்தைப் போன்று எப்படிப் பிடிக்க எளிமையாகவும் கருத்துக்கள் அதன் உச்சியைப் போன்று கம்பீரமாகவும் நின்று இதயத்தைக் கசிந்துருகச் செய்கின்றன!" (மேலது., அறிமுகவுரை, ப. 13) என்பதுடன், "எல்லாம் வல்ல இறைவனை எண்ணியும் பார்க்க நேரமில்லாது, ஆறாவது அறிவைத் தங்களது அலங்கோல வாழ்வுக்கே உரியதாக்கி, மனித மனங்களின் ஆசா பாசங்கள், உலகச் சந்தையின் மாய்மாலங்களில் அரங்கேறி நடனமிடுவதைத்தான் நாம் வெகுவாகக் கண்டு வருகிறோம்; இந்த எண்ணிக்கையில், நம்மிலும் பலர் இருக்கத்தான் செய்கிறோம்! இத்தகைய மானுடர் செய்யும் எந்தவொரு இழிந்த செயலையும் தம்மீதே ஏற்றிக் கொண்டு பாடுவது, வாழையடி வாழையென வந்துதிக்கும் தகைமையாளர்களின் பண்பாக இருந்து வருகிறது! அந்த மாபெரும் மரபினைப் பின்பற்றி அண்ணன் ஷெரீப் அவர்களும் இதயம் கசிந்துருகி, இறையருள் வேண்டிப் பாடியுள்ளார்கள்.

சர்வ சமய இலக்கியங்களைச் சலிப்பின்றி ஆய்ந்த உள்ளம்! மரபினைப் போற்றும் அவர்களது மகத்தான

பாடல்களில், தேவாரப் பாடல் முறை தேனாக ஓடி வருகிறது! திருவாசகத்தின் அருள் வாசகங்கள் தித்திக்கத் தேடி வருகின்றன! பாடல்களைக் குரலெடுத்துப் படிக்கும்போது சந்தங்கள் சொந்தங் கொண்டாடுகின்றன!

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரிசையில் 'இறையருள் வேட்டல்' எல்லா வகையிலும் தனிச் சிறப்புக்குரியது என்று சொன்னால், அது மிகையாகாது. அது மட்டுமல்ல; வடலூர் வள்ளல் வழங்கிய தமிழே கவிதைத் துறையில் எளிமையின் தொடக்கம்! அதனையுளங் கொண்டு உருவான இந்நூல், இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வானில் முளைத்த விடிவெள்ளி என்றும் சொல்லலாம்!" என்றும் எடுத்துரைக்கிறார் (மேலது., அறிமுகவுரை, பக். 13-14).

அந்த வகையில் கவி கா.மு. ஷெரீபின் இறையருள் வேட்டல் என்னும் நூல் இஸ்லாமியக் கருத்து விளக்கமாகவும் பொதுவான அனைத்துச் சமய மக்களுக்கு நற்பண்புகள் பலவற்றை எடுத்துரைக்கும் நற்பெட்டகமாகவும் திகழ்கிறது.

**துணைநூற்பட்டியல் :**


1. கவி கா.மு. ஷெரீப், 1985. கண்ணகியின் கனவு, சென்னை : அபிராமி நிலையம்.
2. கவி கா.மு. ஷெரீப், 1990. கவி கா.மு. ஷெரீப் கவிதைகள், சென்னை : கலாம் பதிப்பகம்.
3. கவி கா.மு. ஷெரீப், 1978. இறையருள் வேட்டல், சென்னை : சீதக்காதி நூல் வெளியீட்டகம்.
4. வலவன் மு. 1998. நெஞ்சத்திரையில் நினைவுக்கோடுகள், சென்னை : முத்தையன் பதிப்பகம்.
5. 2014, கவி கா.மு. ஷெரீப் நூற்றாண்டு மலர், சென்னை : முஸ்தபா தமிழ் அறக்கட்டளை.


●


*கட்டுரையாளர்கள்*

முனைவர் உ. அலிபாபா
பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

ப.முத்துபாண்டியன்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி



## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!



**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**ஆகஸ்ட் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7786 | 8969 | 1174 | 5694 | 7422 | 2067 | 2164 | 3723 | 4073 | 5354 |
| 7787 | 8970 | 1175 | 5693 | 7423 | 2068 | 2165 | 8811 | 3715 | 5356 |
| 1528 | 3980 | 1176 | 1530 | 7424 | 5359 | 2166 | 8812 | 5691 | 5355 |
| 6868 | 3981 | 1177 | 7975 | 126 | 5358 | 545 | 2561 | 3719 | 5351 |
| 314 | 2560 | 1178 | 5357 | 5697 | 972 | 546 | 2651 | 7974 | 1529 |
| 4072 | 1887 | 1179 | 2160 | 5698 | 7667 | 547 | 5502 | 7694 | 6871 |
| 3982 | 3713 | 3710 | 2161 | 5695 | 7695 | 548 | 3725 | 969 | 8800 |
| 2558 | 1169 | 3983 | 2162 | 5696 | 7696 | 549 | 6651 | 3716 | 4073 |
| 2559 | 1170 | 543 | 7788 | 5699 | 7697 | 550 | 6652 | 3721 | 6870 |
| 5692 | 1171 | 544 | 7420 | 5360 | 7698 | 7916 | 7700 | 3726 | 963 |
| 8968 | 1172 | 1702 | 7421 | 5501 | 2163 | 974 | 4075 | 5352 | 7699 |
| | | | | | | | | 5353 | 7976 |

தனி இதழ் ₹ **45.00**
ஆண்டு சந்தா ₹ **540.00**
மாணவர்களுக்கு ₹ **500.00**,
ஆயுள் சந்தா ₹ **5400.00**
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ **4050.00**
*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

கட்டுரை

# தனுஷ்கோடி ராமசாமி சிறுகதைகளில் பெண்களின் நிலை

கா.சத்தியா
& முனைவர் சு.சந்திரா

பெண்களின் சிக்கல்கள் என்று பேசப்படும் போது அவற்றிற்குக் காரணமான சமூக அமைப்பு, குடும்ப நிறுவனம், அதிகாரம், ஆதிக்க உடைமை, மனப்போக்குகள் ஆகிய ஆண் நிலைப்பாடுகள் முதன்மையாகின்றன. தனுஷ்கோடி ராமசாமி பாதிக்கப்பட்ட பெண்களின் நடப்பியல்புகளை அவர்களின் தன்மை மாறாமல் தனது புனைகதைகளில் சித்தரிக்கிறார். சமூகத்தில், பெண்களுக்கு இழைக்கப்படும் வன்கொடுமைகள் அதிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகள் போன்றவற்றைப் புரட்சி சிந்தனைகளாக வெளிப்படுத்துகிறார். த.ராவின் புனைகதைகளில் பெண்களின் நிலை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண்ணிய நிலைகளன் சிறுகதைகள்**

ரோஷம், ரெட்டியார் சத்திரம், பரவசம், சுதந்திரம் சிறையிலே, அழகின் ரகசியம், தடங்கள், சேதாரம், கந்தகக் கிடங்கிலே, சூரசம்ஹாரம், இளையநிலா, அன்புள்ள,

தரகன்பாடு, நேசம், சேதாரம், சைத்தான்களின் வேதம், தேவதைகள் தழுவினார்கள். வழிகள், புதிய பூ முதலிய சிறுகதைகள் சமகாலப் பெண்களின் நிலை பற்றிய த.ராவின் பதிவுகளாக அமைகின்றன.

**குடும்ப நிர்வாகம்**

சமூகம் முன்னேற்றம் அடைய வேண்டுமாயின் குடும்பங்கள் மேன்மையுற வேண்டும். நிறை, குறைகள் பகுத்தறிந்து உறவுகளை ஒருங்கிணைத்து, குடும்பங்களைக் கட்டுக்கோப்போடு கொண்டு செல்ல வேண்டும். அதில் பெண்களின் பங்கு அளப்பரியதாகும். கிராமப்புற பெண்கள் தங்கள் சூழலுக்கு ஏற்பக் குடும்பப் பொறுப்புகளோடு தங்களை இணைத்துக் கொள்கிறார்கள். தடங்கள், இளையநிலா, ரெட்டியார்சத்திரம் ஆகிய கதைகளில் இதனை வெளிப்படுத்துகிறார்.

இளையநிலாவில் ஆவடத்தாய் மிகுந்த மனவேதனையில் இருக்கிறாள். அச்சூழலிலும் தன் குடும்பத்தை எண்ணி ஏங்குகிறாள்.

ஆவடத்தாய், அண்டை வீட்டாருடன் நடந்த சண்டையில் கைது செய்யப்படுகிறாள். காவல் நிலையத்தில் காவல் துறையினர் அவளைச் சீண்டுவதும், அத்துமீறுவதுமாக நடந்து கொள்கின்றனர். அவர்களைக் கண்டிக்கிறாள். லாரி ஓட்டுனரான தன் கணவனை எண்ணி வேதனைப்படுகிறாள். "இந்த அர்த்த ராத்திரியிலே எந்த பூமியிலே நீங்க லாரிய ஓட்டிட்டுப் போறீங்களோ, மத்த டிரைவர்களைப் போல எந்த தப்பான பழக்கத்துக்கும் போக மாட்டீங்க..... எஞ்சீமான்.... படிக்காச வச்சு நல்லா சாப்பிடுங்கண்ணா அதுவும் கேக்க மாட்டீங்க. நாலு காசு சேத்து வச்சாத்தானே..... நாளைக்கு நம்ம புள்ளைய நல்லாப் படிக்க வச்சு நல்ல நெலமைக்குக் கொண்டு வரலாம்னு சொல்லிருவீங்க..." (ப.182) என்று கணவன் மற்றும் மகனை நினைத்து அவள் மனம் கொதித்தது என்கிறார் த.ரா. வாழ்வின் துயரநிலையிலும் குடும்பத்தை எண்ணி வருந்தும் பெண்களின் உளப்போக்கு சித்தரிக்கப்படுகிறது.

**பெண்களின் ஆளுமைத்திறம்**

பெண்ணிற்குத் தோன்றுகின்ற எண்ணம், அறிவாற்றல், குறிக்கோள்,இலட்சியம், உணர்ச்சி ஆகியவற்றின் தொகுப்பிலிருந்து அவளுக்கு ஏற்படும் தனித்துவத்தைப் பெண்ணின் ஆளுமைத் திறன் எனலாம். விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, தியாகம் முதலியன பெண்களுக்கு உரியன. ரோஷம், பரவசம், அழகின் ரகசியம் முதலிய கதைகள் பலவீனத்தால் எழுச்சி பெற்று இலட்சியத்திற்காகப் போராடும் பெண்களை எடுத்துக்காட்டுகின்றன.

ரோஷம் சிறுகதையில் மாரியம்மாளின் கணவன், வேறொரு பெண்ணுடன் தகாத உறவு வைத்திருக்கிறான். மாரியம்மாளிடம் விவாகரத்துக் கேட்கிறான். ஜீவனாம்சம் கொடுப்பதைப் பிச்சையிடுவதாகக் கூறி மாரியம்மாளை அவமானப்படுத்துகிறான். அதற்குப் பதில் கடிதமாக மாரியம்மாள், "அவன் மாட மாளிகையும், தோட்டம்துறவும், கொடுத்தாலும் அவனுடைய நீசக்கல்வி, விபச்சார சட்டத்தினாலே தேடின அவன் சொத்து எனக்கோ நான் பெத்த செல்வங்களுக்கோ வேண்டாம்.." (ப-77) என ஆவேசப்படுகிறாள். வீணடித்தவன் முன்பு வாழ்ந்து காட்ட முடிவு செய்கிறாள்.

அழகின் ரகசியம் சிறுகதையில், தோல்வியிலிருந்து பிறக்கும் இலட்சிய நோக்குடைய ஒரு பெண்ணின் சூளுரை அமைந்துள்ளது. ருக்மணி ஓர் ஆசிரியை. காதலித்து திருமணம் செய்து விவாகரத்து பெற்றவள். பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு தன்னுடன் பணியாற்றிய தமிழாசிரியர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு அவளுக்கு ஏற்படுகிறது. அவரிடம் தன் நிலையைக் கூறுகிறாள்.

**பிள்ளைகளை அவர் நிழல்**

'நான் சும்மாவிடப் போறதில்ல. என் செல்லப் கூடப்படாம வளப்பேன். ரொம்ப உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவேன் நானும் பட்டப்படிப்பு படிச்சு, சட்டம் படிப்பேன். நான் கேஸ் போட்டு, நானே அவரோட வக்கீல் நாணும்படி வாதாடி, ஜெயிச்சு அவர எங்காலடியில் விழச்செய்வேன்" (பக்-487) எனக் குமுறுகிறாள்.

த.ராவின் கதைகளில் கணவனால் நிராகரிக்கப்பட்ட பெண்கள், தங்கள் எதிர்காலத்தை வெறும் வாய்ச்சண்டையால் தீர்மானிக்கவில்லை. உணர்வு மரித்து வாழாமல் நியாயத்திற்காக எதிர்த்துப் போராடுகின்றனர். உணர்வு கலந்து எதிர்காலச் சிந்தனைகளை இருத்தும் ஆளுமையின் விரிவும், ஆவேசப் புலப்பாடும் கொண்ட பெண் மாந்தர்களை த.ரா.இக்கதைகளில் எடுத்துக்காட்டுகிறார்.

**தாய்மையுணர்வு**

தாய்மை என்பது இணையில்லாத உன்னத உயர்நிலை, மாசற்ற அன்பினை அள்ளி வழங்குகின்ற அட்சயப்பாத்திரம், நிலைத்த பேறுடைய உயர் குணமாகும். பெண்களின் இத்தகைய உயர் குணங்களைப் பகுத்துணர்ந்து, த.ரா. தன் படைப்புகளில் காட்டுகிறார். சுதந்திரம் சிறையிலே மற்றும் கந்தகக் கிடங்கிலே போன்ற கதைகள், தாய்மையின் மேன்மையினை விளக்கிச் சொல்கின்றன. சுதந்திரம் சிறையிலே கதையில் ஆசிரியர் முத்துப்பட்டன் போராட்டக் குழுக்களோடு சிறையில் அடைக்கப்படுகிறார். அச்சமயம் கோரைப்பள்ளம் கிராமத்தில் இருந்த அவர் தாய் இறந்து விட்டதாகச் செய்தி வருகிறது. தன் தாயை நினைத்து முத்துப்பட்டன் அழுகிறார்.

“அம்பது, அறுபது ஊர் மாடுகளை மேய்ச்சு எனக்குக் கஞ்சி ஊத்தி வளர்த்தாளே... எங்க ஆத்தா... எத்தனை தடவ புஸ்தகம் பீஸ்கட்டன்னு எங்க ஆத்தா வாத்திமாருக, கால்களிலே நெடுஞ் சாங்கிடையா விழுந்திருக்கா.. கையெழுத்து வாங்கக் கணக்குப்பிள்ளை கால்லே, ரெவென்யூ இன்ஸ்பெக்டர் கால்லே... விழுந்தாளோ... என்னப் படிக்க வச்சு ஆளாக்க... ஊர்லே எடுத்த பல சோறு என் ஒடம்புக்கு ஆகாதுன்னு ஆழாக்கு அரிசி தேடி தனி ஒல வச்சு சோறு பொங்கிப் போட்டியே... ஆத்தா” *(ப-235)* என்று தோளில் தொங்கிய துண்டைக் கைகளில் அள்ளி, அதிலே முகம் புதைத்து அழுகிறார்.

**வரதட்சணைக் கொடுமை**

பிராமணப் பெண்களுக்கு நேரும் அவலநிலையினை எதிர்த்து த.ரா கோவில் நிகழ்ச்சியில் பேசுகிறார். அதனைக் கேட்ட முருகனூர் கோவில் பட்டர், பிராமண சமூகத்திற்கு அரசு சலுகைகள் இல்லாததால் பல குடும்பங்கள் வறுமையில் வாழும் நிலை ஏற்படுகிறது. ஏழை பிராமணப் பெண்களின் வாழ்க்கையில் வேலை, திருமணம் என்பது கனவாகவே இருக்கின்றன, பெண்கள் தவறான வழிக்குப் போகும் நிலையும் உருவாகிறது என்று கூறுவதாக ஆசிரியர் த.ரா குறிப்பிடுகிறார்.

வரதட்சணையால் பெண்களுக்கு ஏற்படும் துயர நிலையினை சூரசம்ஹாரம், அன்புள்ள, தரகன்பாடு மற்றும் பரவசம் முதலிய சிறுகதைகள் வெளிப்படுத்துகின்றன.

மேலும்.. உங்களை அந்தப் பகவானாகவே நம்பிச் சொல்கிறேன்... எம் பொண்ணை நான் விபச்சாரியா அலைய விட சம்மதிக்கலே... அதனாலே... அதனாலே... ஏங்கி ஏங்கி மூச்செறிந்து பேச முடியாது திண்டாடி விழிகள் பிதுங்கி நீர் சொரிந்தார். எனக்கு தலைச்சன் ஆண் பிறந்தவுடனே.. கும்பகோணம் மகாமகத்துக்குப் போய்ட்டு வர்றேன்னு என் ஆத்துக்காரிக்கிட்ட பொய் சொல்லிட்டு... தேனிக்குப் போய் குடும்பக் கட்டுப்பாடு... வாஷக்டமி ஆபரேஷன் பண்ணிட்டேன் என்று தட்டுத் தடுமாறி கூறுகிறார்.

பெண்ணுக்குத் திருமணம் என்றால் வரதட்சனை கொடுக்க வேண்டும் என்பதனை இச்சமூகம் வரித்துக் கொண்டுள்ளது. வரதட்சணை கொடுக்க வழியின்றித் திருமணம் நடக்காமல் பெற்றோர்களுக்குத் தலைக்குனிவு ஏற்படுகிறது. பிறகு பெண்ணின் வாழ்க்கை உருக்குலைந்து விடுகிறது. இதற்குப் பயந்து பெண் குழந்தையே வேண்டாம் என முடிவு எடுக்கும் பட்டர் போன்றவர்களின் செயலும், மனநிலையும், வரதட்சணைக் கொடுமையின் தாக்கத்தைப் பிரதிபலிக்கின்றன.

**பெண்கள் போகப்பொருளாக்கப்படுதல்**

சேதாரம் கதையில் வருகின்ற ராமுத்தாய், அவள் சகோதரி சீதா, இருவரும் தீப்பெட்டி அலுவலகத்தில் வேலை செய்கிறார்கள். அங்குள்ள ஆண்கள் பற்றி ராமுத்தாய், “தீப்பெட்டி ஆபீஸிக்கு வேலைக்கு வர்ற பெண்கள் எல்லாம் பெரிய முதலாளி, சின்ன முதலாளி, கணக்குப்பிள்ளைகள்.... எல்லாப் பயல்களும் என்கிறாள். எல்லாத்துக்கும் உடன்படனும்னு அலைறாங்க..." *(ப.206)*

அவளுடன் வேலை பார்த்த கோபால் நேர்மையாளன். சீதாவை விரும்புகிறான். திடீரென ஒருநாள் கோபாலை அழைத்த அவன் முதலாளி அவனிடம் மெல்ல பேச்சுக் கொடுத்து சீதாவை ஒருநாள் தனக்கு ஏற்பாடு செய்யும்படிக் கூறுகிறார். அப்படிச் செய்தால் மேலும் பல சலுகைகள் அளிப்பதாகவும் கூறுகிறார்.

வேலை செய்யும் இடங்களில் உள்ள ஆண் தொழிலாளர்கள், அங்குள்ள பெண்களைச் சீண்டுவது, இரட்டை அர்த்தங்களில் பேசுவது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். அவர்களின் ஆசைக்கு மறுக்கும் பெண்களைத் துன்புறுத்துவதோடு வேலை நீக்கமும் செய்து விடுகின்றனர். இவ்வாறு பெண்களைப் போகப் பொருளாக எண்ணுவதால் பணியிடங்களில் பெண்களுக்கு அச்சமும் பாதுகாப்பற்ற நிலையும் உருவாகின்றன.

கந்தகக் கிடங்கிலே சிறுகதையில் பூமாலை, தன் மகனுக்குக் காய்ச்சல் என்பதால் மருத்துவமனைக்கு அழைத்து வருகிறாள். வரும் வழியில் நடக்க இயலாமல் மூடிக்கிடந்த பெட்டிக்கடை முன் அமர்ந்திருக்கிறாள். இவளைக் கண்ட கடைக்காரனிடம், குழந்தைக்கு உடல்நிலை சரியில்லை அண்ணாச்சி என்கிறாள். அதற்கு அவன் பனியாக இருக்கிறது உள்ளே வா என்கிறான். அவன் கண்ணும் பேச்சும் அசிங்கத்தை மிதித்தது போல் இருந்ததாகப் பூமாலை உணர்கிறாள். உடனே தன் மகனை வாரிச் சுருட்டி மார்போடு அணைத்துக் கொண்டு வெளியேறுகிறாள். பெண் என்றாலே போகப்பொருள் என வரித்துக் கொண்ட ஆண்களின் அவச்செயலைத் த.ரா.தம் சிறுகதைகளில் சுட்டிக்காட்டுகிறார்.

**பாலியல் வன்கொடுமை**

பெண் உரிமைப் போராட்டங்கள் சமூக மாற்றத்திற்கு ஏற்பத் தங்களது கோரிக்கைகளை வலுப்படுத்தி வருகின்றன. சமூக நிறுவனங்கள் அனைத்திலும் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் கொடுமைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. ஏழைப் பெண்கள் இக்கொடுமைகளுக்கு ஆளாகும் பொழுது, வசதிபடைத்த பதவியில் இருக்கும் ஆண்களை, எதிர்க்கத் துணிவின்றி தங்களையே மாய்த்துக் கொள்கின்றனர் அல்லது

மன உளைச்சலோடு வாழ்க்கை நடத்துகின்றனர். பெண்ணினத்திற்கானப் பாதுகாப்புச் சட்டங்கள், இறுக்கப்படுதலின் அவசியத்தைத் த.ரா.வின் கதைகள் உணர்த்துகின்றன.

இளையநிலா, நேசம், சைத்தான்களின் வேதம் போன்ற சிறுகதைகள், பெண்களுக்கு நேரும் பாலியல் வன்கொடுமைகளை எடுத்துரைக்கின்றன.

இளையநிலா கதையில், ஆவடத்தாய் விசாரணைக்காக காவல் நிலையம் அழைத்துவரப்படுகிறாள். அவளது வடிவழகு, வெள்ளை நிறம் வரிசையான அழகான பற்கள், அகன்ற விழிகள், வறுமையைத் தாண்டி பொங்கிநிற்கும் இடையழகில் தலைமைக் காவலர் மயக்கம் கொள்கிறார். விசாரணை என்ற பெயரில் அவள் காவல்துறையினரால் கற்பழிக்கப்படுகிறாள். அங்கு ஓர் அறைக்குள் தள்ளி விடுகின்றனர். அங்கிருந்த அந்தப் பெரிய மனிதன் முகம் சிவந்து, கூறிட்டு நிற்கும் வெறிப் பார்வையோடு புகைமண்டலத்தில் இருப்பது தெரிந்தது. அந்த அறை முழுவதும் நவநாகரீகப் படுக்கைகள், திரவிய வாசனை, ஓவியங்கள், அழகுப் பொருள்கள் என நிறைந்திருக்கின்றன.

அது அதலபாதாள சுடுகாடாகவும், அவன் பிணந்தின்னும் கோரப் பிசாசாகவும்.... வாசனைகள் சகிக்க முடியாத அழுகிய பிண நாற்றமாக அவள் உடல், உள்ளம் முழுக்க அதிர்ச்சி ஏற்படுத்தியது. 'ஓ' வென அலறிக்கொண்டு வெறி பிடித்தவளைப் போல வெளியே பாய்ந்தாள். கூந்தலை இறுகப் பற்றி இழுத்து இரண்டு போலீஸ்காரர்களும் அவளைத் தூக்கிக் கொண்டு வந்து பெட்ரூமுக்குள் போட்டுப் பூட்டினார்கள்' (பக் 183,184) என இக்காட்சி சித்தரிக்கப்படுகின்றது.

காவல் துறையும், நீதிமன்றங்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்குவதற்கும், பாதுகாப்பு அளிப்பதற்கும் அமைக்கப்பட்டதாகும். அபலைப் பெண்களை சித்ரவதைக்கு உள்ளாக்கும் இவர்களே சட்டத்தின் முன் குற்றவாளிகள் ஆவர். மக்களால் இவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதைத் தோலுரித்துக் காட்டுகிறார்.

**பெண்ணடிமைத்தனம்**

சின்னம்மா, நர்சரிப் பள்ளியில் ஆயா வேலை பார்க்கிறாள். இருபத்து மூன்று வயதில் விதவையாகி, அண்ணன் வீட்டில் தங்கி இருக்கிறாள். பள்ளிக்கூடத்தைப் பெருக்குவது, தண்ணீர் எடுத்து வைப்பது, குழந்தைகளைக் கவனித்து கொள்வது என எடுபிடி வேலைகள் அனைத்தையும் செய்கிறாள். ஓய்வில்லாத உழைப்பு, மாதம் முப்பது ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். பத்து ஆண்டுகள் கழித்து எழுபத்து ஐந்து ரூபாய் உயர்த்தி இருக்கிறார்கள். இதுதான் இன்றைய பெண்களின் நிலையாக உள்ளது. உழைப்பிற்கேற்ற ஊதியம் பெண்களுக்குச் சரிவரக் கிடைக்கவில்லை.

'தேவதைகள் தழுவினார்கள்' சிறுகதையில் பள்ளி ஆசிரியர் ஒருவரின் எதிர் வீட்டில் உள்ள பெண்ணின் திருமண வாழக்கை பற்றிப் பேசப்படுகிறது. திருமணம் முடிந்து மூன்று ஆண்டுகள் கழித்தும் அவள் அடிக்கடி தாய் வீட்டிற்கு வந்து விடுகிறாள். அவளின் நிலையை ஆசிரியர்,

...அந்தப் பெண்ணும் அந்தப் பெண்ணின் பெற்றோரும்......அந்த மாப்பிள்ளை குடும்பத்திற்கு பயந்து அவர்கள் பின்னால் ஓடறதும்....அவர்கள் பாதங்களுக்குப் பூஜைகள் செய்து திரியறதும்....பெரிய கொடுமை. இதைவிடப் பெருங்கொடுமை....மாறி மாறி பிறந்த வீட்டிற்கு அந்தப் பெண் கண்களைக் கசக்கிட்டு வந்து ஏங்கி அழுவது (ப.403) எனக் குறிப்பிடுகிறார். பெண் வீட்டார், வசதிபடைத்தவர்களாக இருப்பினும் மாப்பிள்ளையின் குடும்பத்திற்கு பயந்து அடிமைப்பட்டு வாழ்கின்றனர். அத்துடன், அவள் மன அதிர்விற்கு ஆளாகிறாள். பயம் பிடித்து, நடை பிணமாகிறாள். கடைசியில் விடுதலையாகி பிறந்த வீட்டிற்கு நிரந்தரமாக வந்து விடுகிறாள்.

கனவுகளோடு மணவாழ்க்கையில் அடிஎடுத்து வைக்கும் பெண்ணின் எதிர்பார்ப்புகள் முடக்கப்படுகின்றன. பிரச்சனைகளை சமாளிக்கும் வழி அறியாது, மன அமைதி வேண்டி தாய் வீட்டிற்குச் செல்கிறாள். ஆண்களால் அடிமைப்படுத்தப்படும் பெண்களின் துயரநிலையை ஆசிரியர் தம் கதையில் எடுத்துரைக்கிறார்.

**ஆண்களால் பெண்கள் வஞ்சிக்கப்படுதல்**

வழிகள் சிறுகதையில், அல்லி காந்திகிராம பல்கலைக் கழகத்தில் இலக்கியம் பயின்று வருகிறாள். விடுமுறைக்காகக் கிராமத்திற்கு வருகிறாள். பேருந்து பயணத்தின் போது எழுத்தாளன் வெண்ணிலவன் நட்பு கிடைக்கிறது. ஒவ்வொரு சந்திப்பின் போதும் சங்க இலக்கியம், நவீன இலக்கியம், கவிதைகள், நாவல்கள் பற்றிப் பேசுகிறான். நாளடைவில் அல்லியின் அழகை வருணிக்கத் தொடங்குகிறான். காதலிப்பது போல் நடித்து அவளை அடையத் திட்டமிடுகிறான். இறுதியில், கண்ணகி, கோவலன் ஒப்புமைகளோடு அவள் வாழ்க்கையைச் சீர்குலைத்து விடுகிறான். அல்லி கர்ப்பமடைகிறாள். வெண்ணிலவனைத் தேடி அலைகிறாள். அவன் யாரிடமும் சொல்லாமல் தங்கியிருந்த அறையைக் காலி செய்து விட்டு எங்கோ சென்று விடுகிறான். அல்லி தற்கொலைக்குத் துணிகிறாள்.

ஆண்களின் நயவஞ்சகச் செயலை அறியாத பெண்கள் கற்பினை இழந்து சமூக மதிப்பிழந்து அல்லலுறுகின்றனர். "திருமணமாகாமல் கன்னித்தன்மை இழந்துவிட்ட பெண் பெரும் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டாலும் நீதி விசாரணையின் அக்யூஸ்"டு நெ.1 ஆக நிற்பது அவளது கற்பின்மையே! காமம்

புருஷலட்சணம்." (1997:21) என மைதிலி சிவராமன் குறிப்பிடுகின்றார். இழந்த கற்பிற்காகப் பெண்கள்

நீதிமன்றங்களுக்குச் சென்றால் மிஞ்சுவது அவமானமே ஆகும்.

**முடிவுரை**

- த.ரா.வின் சிறுகதைகளில் பெண்கள் விடா முயற்சியும், கடுமையான உழைப்பும் கொண்ட குடும்பத் தலைவிகளாகத் திகழ்கின்றனர்.
- எதிர்காலச் சிந்தனைகளைகளோடு இருந்தும் சிறந்த ஆளுமைப்பண்பு மிக்க பெண்மாந்தர்களை த.ரா தம் படைப்பில் வெளிப்படுத்தியுள்ளார்.
- தாய்ப்பாசத்திற்கு ஈடு இணை எதுவுமில்லை என்பதை தம்படைப்பில் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.
- வரதட்சணைக் கொடுமைக்குப் பயந்து பெற்றோர் பெண் பிள்ளைகளை வெறுப்பதும், பெண்கள் முதிர்கன்னியாகிப் போகும் நிலையின் கொடுமையையும் த.ரா.தம் கதைகளில் பதிவுசெய்துள்ளார்.
- பெண் என்றாலே போகப் பொருள் என்று எண்ணும் ஆண்களை தம்கதைகளில் ஆசிரியர் சாடியுள்ளார்.
- பாலியல் வன்கொடுமையையும், பெண்ணடித்தனத்தையும், பெண் ஆண்களால் வஞ்சிக்கப்படுவதையும், ஆணாதிக்கத்தையும் தம் கதைகளில் சுட்டிக்காட்டி தம் எதிர்ப்பைப் படைப்பில் வெளிப்படுத்தியுள்ளார்.

**துணைநூற்பட்டியல்**


1. தனுஷ்கோடி ராமசாமி சிறுகதைகள், இரா.காமராசு, 2008
2. தமிழகராதி, தமிழப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர், முனைவர் பெ.மாதையன், 1997
3. பெண் ஏன் அடிமையானாள்?, ஈ.வெ.இராமசாமி, 2019


●


கா. சத்தியா
இணைப்பேராசிரியர்,முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளின் கலைக் கல்லூரி(த),
மதுரை.

முனைவர் சு.சந்திரா
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளின் கலைக் கல்லூரி(த), மதுரை.2



நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்
புதிய வெளியீடுகள்



₹ 400/-

₹ 360 /-

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

**வழங்கும் மகத்தான படைப்பு தற்போது விற்பனையில்...**

# சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம்

22 தொகுதிகள்
7500 பக்கங்கள்
விலை
**ரூ.9000/-**

1/8 டெம்மி அளவு,
தரமான தாள்,
அழகிய
வடிவமைப்புடன்

- ஒரு நூற்றாண்டு வாசிப்புப் பின்புலத்தில் -
- பாடல் - பாடவேறுபாடு - உரைவேறுபாட்டு விளக்கங்கள் - பாடல் கருத்து - அருஞ்சொற்பொருள் - விரிவான ஆய்வு முன்னுரை எனும் அமைப்பில் -
- எண்மரின் பத்தாண்டு காலக் கடும் உழைப்பில் -
- 22 தொகுதிகள் 7500 பக்கங்களில் -
- பலமுறை முன் மதிப்பீடு செய்யப்பட்டு -
- உயர்ந்த கட்டமைப்பில் -
- தமிழக வரலாற்றில் முதல்முறையாக -

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.

நூல்
அறிமுகம்

# சூழலியலில் மாற்றங்களைக் கொண்டுவரும் நூல்

முனைவர் ஜ. பபிதா

சங்க இலக்கியம், சிறார் இலக்கியம், தற்கால இலக்கியம், விளிம்பு நிலையினர் இலக்கியம், பெண்ணியம், சுற்றுச்சூழலியல் போன்ற பல்வேறு தடங்களில் தம் கருத்துகளை விதையாகத் தூவிச் செல்பவர் இந்நூலாசிரியர், அக்சிலியம் கல்லூரி முதல்வர் முனைவர் அருட்சகோ.அ. ஆரோக்கிய ஜெயசீலி அவர்கள். எப்பொழுதும் முப்பொழுதும் வாசிப்பை நேசமாக்கியவர். சூழலியலைப் பாதுகாக்க வேண்டும் என்ற துடிப்பைத் தன் இதயத்துடிப்பிற்கு நிகராக மதித்தவர். அதன் விளைவாக ‘பசுமைப் பெண்கள்’ என்னும் நூல் உயிர்ப்புப் பெற்றது. இது ஆசிரியரின் ஆறாவது நூல் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூல் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கப் போராடிய பெண்களின் வாழ்வியலை, வரலாறுகளைப் பதிவுகளாய் தாங்கியுள்ளது.

இலக்கியக் காலந்தொட்டு இன்று வரையிலுமான இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற பெண்களின் எண்ணம் உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது என்பது உண்மை. பேரிடர்கள் பல தோன்றி மக்களை மிரளவும் அலறவும் வைத்திருக்கின்ற இவ்வேளையில், அதனைப் போக்குவதற்கான வழிகளையும், சூழலியலை, இயற்கையைப் பாதுகாத்துப் பராமரிக்கின்ற நெறிகளையும் நம் கண்முன்னே பசுமைப் பெண்களாய் கொண்டுவந்து நிறுத்தும் ஆசிரியரின் சிந்தனை போற்றுதற்குரியது.

பெண்களால் என்ன செய்ய முடியும்? என்ற கேள்விக் கணைக்கு ‘பெண்களால் எல்லாம் முடியும்’ என்ற பதில் விதை போடுகிறது இப்புத்தகம்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள பத்துக் கட்டுரைகளும் பத்துப் பெண்களின் துல்லியமான சிந்தனையையும், இயற்கைப் பாதுகாப்பில் இவர்கள் மேற்கொண்ட துணிவானப் பணிகளையும் இவர்களின் முழுமையான பங்களிப்பையும் விரித்துரைக்கின்றது.

இவர் சூட்டியிருக்கும் ஒவ்வொரு தலைப்பிற்கான சிறப்புப் பெயரும் அப்பெண்களின் சாதுர்யத்தை வெளிப்படுத்துவதோடு அதனை முழுமையாக படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுகிறது. படிக்கின்ற போதே நாம் சூழலியலைப் பாதுகாக்க முயற்சிகளை மேற்கொண்டோமா என்ற கேள்விகள் நம்மையே நிலைகுலுங்க வைப்பதும் உண்மைதான்.

மரம் நட்டு, வளர்த்து, பாதுகாத்து தாய்மைக்கான உன்னதத்தன்மையை உலகப் பார்வைக்கு முன் நிறுத்தியுள்ளார் சாலுமரத்த திம்மக்கா அவர்கள்.

பருவநிலை மாற்றம், நெகிழிகளின் பயன்பாட்டை குறைத்தல், புதைவடிவ எரிமங்களை பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்ற எச்சரிக்கைக் குரலைக் கொடுத்தவர் பருவநிலைப் பாதுகாப்புப் போராளி லிசிபிரியா கங்குசம் எனும் சிறுமி.




நூல் பெயர் பசுமைப் பெண்கள்
முனைவர் அருட்சகோ. அ. ஆரோக்கிய ஜெயசீலி
பதிப்பகம்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
நூலின் விலை: 50 | Mob:....

ஆறுகளைப் பாதுகாத்து, மின்சாரத்தை எடுக்காமலும், அணைகள் எழுப்பாமலும் தடுத்து ஆற்றையும் ஆற்றொழுக்கத்தோடு வாழும் மக்களின் வாழ்வையும் மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டவர் ஆறுகளின் அன்னை மேத்தா பட்கர்.

பருவநிலை மாற்றம் விவசாயிகளிடம் ஏற்படுத்தும் பாதிப்பைக் குறித்தும் சமத்துவமான எதிர்காலம் குறித்தும் பேசியவர் பசுமை அரசியல்வாதி சுனிதா நரேன்.

வனப்பாதுகாப்பு, புலிகள் பாதுகாப்பு, முப்பதுக்கும் மேற்பட்ட உயிரின வகைகள் பாதுகாப்பு, காட்டுத் தீ பரவாமல் தடுத்தல், வன விலங்குகளை வேட்டையாடாமல் தடுத்தல் போன்ற முயற்சிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் காடுகளின் தாய்த் தெய்வம் துளசி கவுடா அவர்கள்.

பசுமைப் புரட்சி விவசாயத்தின் மரபுத் தன்மையை அழித்துவிடக்கூடாது என்ற அக்கறையில் 40க்கும் மேற்பட்ட விதை வங்கிகளை உருவாக்கி பலதரப்பட்ட விதைகளைப் பாதுகாத்தவர் விதைகளின் வித்தகி வந்தனா சிவா.

மக்களின் வாழ்வாதாரம் உயர வேண்டுமென்றால் மண்ணையும், மக்களையும் பாதுகாக்க கென்யா முழுவதும் மரம் நட வேண்டும் என்பதனைப் புரிந்துகொண்டு 'பசுமைப் பகுதி இயக்கத்தைத்' தோற்றுவித்தவர் வனராணி வான்காரி மாத்தாய்.

நிலம், நீர், பறவை, விலங்கு, மண், மக்கள் என அனைத்தையும் தொடர்புப் படுத்துவது, ஒன்றை அழிக்க நினைத்தால் மொத்தமும் அழிந்துவிடும் என்ற எச்சரிக்கையை விடுத்தவர் இயற்கையின் தீர்க்கதரிசி ரெய்ச்சல் கார்சன்.

இயற்கைப் பாதுகாப்பு, பாலின சமத்துவம், அனைவருக்குமான வேலைவாய்ப்பு இம்மூன்று கருத்தையும் மையப்படுத்தி 'ப்ளு ஸ்டோன்' என்ற நிறுவனத்தைத் தொடங்கி, திடக்கழிவுகள், கண்ணாடிகள் போன்றவற்றை மறுசுழற்சி செய்து அலங்காரக் கற்களை உருவாக்கியவர் மண்காக்கும் மங்கை ரவான் ரசாப்.

பொதுவாகனங்களில் பயணிப்பது, விமானப் பயணத்தைத் தவிர்ப்பது, இறைச்சி உணவைத் தவிர்ப்பது, காய்கறித் தோட்டங்களை அமைப்பது, மின்சாரப் பயன்பாட்டிற்கு சூரியஒளி கலன்களைப் பயன்படுத்துவது போன்றவை காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்தும் என்கிறார் காலநிலைக் கலங்கரை கிரேட்டா.

மேற்கூறிய பசுமைச் சிந்தனையாளர்களின் கருத்தினை உள்ளடக்கிய இந்நூலானது பெண்கள், சிறுவர்கள், இளைஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தொழில்நுட்பத் துறையினர்கள் என்று அனைத்துத் தரப்பினரும் வாசிக்க வேண்டிய நூலாகும்.

இன்றைய வாசிப்பிற்கும் சூழலியல் சிந்தனைக்கும் ஏற்றதொரு கருத்தினை முன்வைக்கின்ற ஒரு சிறந்த நூல். இனிவரும் காலங்களில் சமூகத்தில் குறிப்பாகச் சூழலியலில் பல மாற்றங்களை இந்த நூல் கொண்டு வரும்.

மரம் வளர்த்தல், ஆறுகளைப் பாதுகாத்தல், நீரை சேகரித்தல், வீட்டில் வளர்க்கும் தாவரம், செடி, கொடிகளுக்கு நீர்ப்பாய்ச்சுதல், காகிதத்தை அளவோடு பயன்படுத்தல், மின்சாரம் பாதுகாத்தல், நெகிழிகளை பயன்படுத்தாமை, பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தாமை, வாகனங்களை அதிகளவில் பயன்படுத்தாமை போன்ற நற்சிந்தனைகள் வாசகர்களின் உள்ளத்தில் இந்நூல் பதியம்போடும் என்று நம்புகிறேன்.

எப்பொழுதும் சேவையாற்றும் கண்ணெதிர் கடவுளர்களாய் நிற்கும் இயற்கையைப் பாதுகாப்போம்! சூழலியல் பராமரிப்பில் நாம் காட்டுகின்ற அக்கறையால் இயற்கை மீளட்டும்! மானுடம் மிளிரட்டும்!!

இந்த நூலை அச்சிட்டு வெளியிட்ட நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். பதிப்பகத்தின் நூலாக்கப் பணி அருமை.

●

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அக்சிலியம் கல்லூரி, வேலூர் - 6

திறனாய்வு

# தனித்தன்மை வாய்ந்த அழகர் கோயில்

**சி.ஆர்.ரவீந்திரன்**




அழகர் கோயில் | தொ.பரமசிவன்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
விலை: ரூ.400

நிலப்பரப்பில் மனிதர்கள் எங்கே வாழ்ந்தாலும் கூட்டு வாழ்க்கையைப் பின்பற்றுவது என்பது தவிர்க்க முடியாது காரணம். தனியொரு மனிதன் தனக்குத் தேவையானவைகளையெல்லாம் தனிப்பட்ட நிலைமையில் உருவாக்கிக் கொள்ள முடியாது. அதற்கு முறையான உற்பத்திமுறை திட்டமிடப்பட்டு கூட்டு முயற்சியில் தேவைப்பட்ட ஒன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதனாலேயே, மனிதர்கள் ஒன்று கூடி வாழவேண்டிய நிலைமை உருவாகிச் சமுதாயம் என்ற கட்டமைப்பிற்குள் வாழவேண்டிய கட்டாயத் தேவை உருவாகிறது. அதன் விளைவாக மனிதர்கள் ஒவ்வொருவரும் 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்ற கருத்தின் அடிப்படையில் வாழ்க்கையை வடிவமைத்துக் கொள்கிறார்கள். தொடர்ந்து, அந்த வாழ்க்கையை வளர்த்துக் கொள்ளக்கூடி வாழ்கிறார்கள்.

காலப்போக்கில் மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கையை மேலும் மேலும் வளப்படுத்திக் கொள்ள தங்களுக்குள் மாறுபட்ட பிரிவுகளையும், பகுப்புகளையும் வகுத்துக் கொள்கிறார்கள். அதன் விளைவாகவே வாழ்க்கை பன்முகப்பாகுபாடுகளையும், தோற்றங்களையும் உடைய ஒன்றாக வடிவம் பெறுகிறது.

சமுதாயமாக வாழும் மனிதர்கள் தங்களுக்குரிய இயல்பாகக் காணப்படும் மாறுபாடுகளையும், வேறுபாடுகளையும் ஒருங்கிணைக்க சமுதாயத்திற்குப் பொதுவான கட்டுப்பாடுகளையும், விதிமுறைகளையும் வடிவமைத்துக் கொள்கிறார்கள். அதன் விளைவாகவே ஆன்மீகம், அரசியல், பொருளாதாரம், கலை இலக்கியப் பண்பாடு போன்றவை தோன்றி தொடர்ந்து மாறிக் கொண்டும், வளர்ந்து கொண்டும் இருக்கின்றன.

அந்த வகையில், பரந்து விரிந்த இந்தியா அதன் இயல்பான மண்வளத்துக்கு ஏற்றவகையில் வாழத் தொடங்கி அதன் அடிப்படையிலேயே தங்களுடைய ஆன்மீக வாழ்க்கையை அமைத்துக் கொண்டு ஒருங்கிணைந்து வாழ்கிறார்கள். கணக்கற்ற சாதிகள், நிறங்கள், மொழிகள், மொழி இனங்கள், மரபுகள் கொண்ட விரிவான இந்தியா உடன்பட்டும், முரண்பட்டும் அமைதியாகத் தொடர்ந்து வாழ்ந்து வளர்கிறது. குறிப்பாக ஒற்றுமை நோக்கத்தின் அடிப்படையில் ஆன்மீக வாழ்க்கை வளப்படுத்தப்படுகிறது. இதற்கு ஓர் எடுத்துக்காட்டாக 'அழகர் கோயில்' தனித் தன்மைகளோடு வரலாற்றில் இயங்கி வருகிறது.

மக்களின் ஆன்மிகத் தளமாக விளங்கி வரும் ‘அழகர் கோயில்’ என்ற அரிய ஆய்வு நூலை, தமிழின் மிகச் சிறந்த பண்பாட்டு ஆய்வாளரான தொ. பரமசிவன் அவர்கள் கள ஆய்வு அடிப்படையில் தொகுத்து வெளியிட்ட முதலாவது நூல் இது.

பௌத்தமும், சமணமும், சைவமும், வைணவமும் தோன்றி வளர்ந்த நிலையில் எத்தனையோ ஆன்மிகத் தலங்கள் இந்த மண்ணில் தோன்றி வளர்ந்தன. அதைப்போலவே, ஆரியம், வேதம், கிறித்துவம், இசுலாமியம் போன்ற வெளிநாட்டுச் சமயங்களும் இந்தியாவில் வளர்ந்து கணக்கற்ற கோயில்கள் தோன்றி மக்களை ஒருங்கிணைத்து வளமடையச் செய்தன.

அவைகளில் குறிப்பிடத்தக்க ஒரு தனித்துவக் கோயில்தான் அழகர்கோயில். அதன் தோற்றம் பற்றி ஆய்வாளர் குறிப்பிடுகிறார்: தமிழ்நாட்டு வைணவத் திருப்பதிகளில் அழகர்கோயில் பழமை சான்ற ஒன்றாகும் சங்க இலக்கியங்களில் ஒன்றான பரிபாடலில் பெயர்சுட்டிச் செல்லப்பெறும் திருமால் திருப்பதி இதுவாகும். முதலாழ்வார்கள் மூவரில் ஒருவரான பூதத்தாழ்வாரும் இக்கோயிலைப் பாடியுள்ளார். இக்கோயிலின் தோற்றம் இங்கு ஆராயப்படுகிறது.

இதற்கான சான்றுகளைப் பன்முகத் தன்மையுடன் விரிவாக எடுத்துக்கூறி இவர் விளக்குகிறார். மதுரை மாவட்டத்தில் இது மேலூர் வட்டத்தைச் சேர்ந்ததாகும். மதுரையிலிருந்து வடக்கு, வடகிழக்கு திசையில் பனிரண்டு கல் தொலைவில் அமைந்துள்ளது. அதன் அமைப்பைத் தெளிவாக இனம் காண்கிறார். கிழக்குத் திசையினை நோக்கியதாக அழகர்கோயில் அமைந்துள்ளது. கோயிலுக்கு மேற்கிலும், வடக்கிலும் மலைப்பகுதிகள் உள்ளன. கோயில் இரண்டு கோட்டைகளால் சூழப்பட்டுள்ளது. கோயில் அமைந்துள்ள உட்கோட்டை இரணியன் கோட்டை எனவும் வழங்கப்படுகின்றன. அவைகளைப் பற்றிய விவரங்களைத் தெளிவாக விளக்குகிறார் ஆய்வாளர்.

தனது மதிப்பீடுகளுக்கு ஆதரவாக தாம்சன், டெனிஸ், போன்ற வெளிநாட்டு ஆய்வாளர்களையும் தமிழ்நாட்டு மயிலை.சீனி வேங்கடசாமி, கேரளத்தைச் சேர்ந்த ஸ்ரீதரமேனன் போன்ற ஆய்வாளர்களின் குறிப்புகளையும் எடுத்துக் காட்டாகக் கூறுகிறார். கோயிலின் தலவிருட்சம், நரசிம்ம வழிபாடு, புற மதத்தவர் சுக்கரத்தாழ்வார் இலக்கியச் செய்திகள், கருவறை தலைமழிக்கும் வழக்கம் போன்றவை குறித்து விளக்கம் அளிக்கிறார் ஆய்வாளர். அதற்குரிய அடிப்படை ஆதாரங்களைக் குறிப்பிடுகிறார்.

‘இத்தலத்தைப் பாடிய ஆழ்வார்’ பாசுரங்களும் அவற்றிற்கான உரைகளும் தமிழ்நாட்டில் சமண, பௌத்த எதிப்புணர்ச்சி நிறைந்திருந்த காலத்தையும் சமண பௌத்த எதிர்ப்பில் இக்கோயில் பெற்றிருந்த பங்கிணையும் காட்டுகின்றன. தலவிருட்சம் விமானத்தின் பெயர் முதலியவை பிற்காலத்திலெழுந்தவை என்பதைச் சிற்றிலக்கியங்களே அவற்றை முதலிற் குறிப்பிடுவதாலறிகிறோம் என்ற தனது மதிப்பீட்டை இவர் முன்வைக்கிறார்.

இவர் தனது ‘அழகர் கோயில்’ ஆய்வு நூலின் உள்ளடக்கத்தை பதினொரு இயல்களாகப் பிரித்து தனது ஆய்வு விவரங்களை விரிவாக விளக்குகிறார். அதில், இக்கோயிலின் இருப்பிடமும், கோயிலின் அமைப்பும் விளக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது இயலில் ‘அழகர் கோயில் பௌத்தக் கோயிலாக இருந்தது என்று கூறும் மயிலை சீனி.வேங்கடசாமி கூறும் கருத்தின் ஏற்புடைமை ஆராயப்பட்டுள்ளது.

மூன்றும் இயலில் ஆழ்வார்களின் பாசுரங்களில் பொதிந்து கிடக்கும் பிறமத எதிர்ப்புணர்ச்சிகளை வெளிப்பட எடுத்து விளக்கியுள்ளன. பிறமத எதிர்ப்புணர்ச்சி சங்க இலக்கியங்களிலே அரும்பி விட்ட செய்தி விளக்கப்பட்டுள்ளது.

நான்காவது இயல்பில், சமய அறிவும் தத்துவ குணமும் உடைய உயர்ந்தோர், பக்தி உணர்ச்சியை மட்டுமே கொண்ட நாட்டுப்புற மக்களைத் தங்கள் அணியில் இணைத்துக் கொள்வதற்கு ஆண்டார். மயத்தார் அமைப்பு முறையை உருவாக்கி, பணியாற்றியது குறித்து விளக்கப்படுகிறது.

ஐந்தாவது இயலில் அழகர் கோயில் சமூகத்தோடு கொண்டிருந்த உறவு கள்ளர், இடையர், அரிசனர், வலையர் ஆகிய காதியாரை முன்னிறுத்தி ஆராயப்பட்டுள்ளது.

ஆறாவது இயலில் அழகர்கோயில் திருவிழாக்கள் ஆராயப்பட்டுள்ளன. தேரோட்டத் திருவிழாவும் வேறுபறித்திருவிழாவும் கள்ளர் காரியாரோடு இக்கோயில் கொண்டுள்ள உறவினை விளக்கத்தோடு அவ்வுறவினைக் காப்பதாகவும் அமைந்துள்ளது.

ஏழாவது இயலில் சித்திரைத் திருவிழாவும், அத்திருவிழாவில் கூறப்படும் பழ மரபுக் கதையும் ஆராயப்பட்டுள்ளன.

எட்டாவது இயலில் வாணப்பிப் பாடல்கள் ஆராயப்பட்டுள்ளன. வர்ணிப்புப் பாடல்களின் தோற்றமும், அவற்றின் வளர்ச்சியில் பாகவத அம்மானை பெறும் இடமும் விளக்கப்பட்டுள்ளன.

ஒன்பதாவது இயலில், சித்திரைத் திருவிழாவில் வெளிப்படும் நாட்டுப்புறக் கூறுகள் ஆராயப்படுகின்றன. கால்நடை வளர்ப்போர், உழு தொழில் செய்வோர் ஆகியோரின் தெய்வமாக அழகர் கோயில் இறைவன் விளங்கும் செய்தி விளக்கப்பட்டுள்ளது.

பத்தாவது இயலில், கோயில் பணியாளர்களுக்கும் இக்கோயிலுக்குள்ளே உறவு ஆவணங்களாலும்,

நடைமுறைகளாலும், நம்பிக்கைகளாலும் விளக்கப்பட்டு உள்ளது.

பதினேழாவது இயலில், அழகர் கோயிலுள்ள பதினெட்டாம் பதக் கருப்பு சாமியைப் பற்றிய செய்திகள் ஆராயப்பட்டுள்ளன. வழக்கு மரபிலுள்ள நம்பிக்கைகள், கதைப்பாடல், நடைமுறைகள் ஆகியவை வழி இச்சிறு தெய்வத்தின் வாயிலாக, இச்சிறு தெய்வத்தின் வைணவச் சார்புடைய தோற்றமும் விளக்கப்பட்டுள்ளன.

இத்துடன் பல வகையான திருவிழாக்களும் நடத்தப்படுகின்றன. அவை பெரும்பாலும் பழங்கதைகளை உள்ளடக்கியவையாக இருக்கின்றன. அவற்றில் முக்கியமானது அவைகளில் முக்கியமான ஒன்று அழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சி.

"அழகர் தன் தங்கை மீனாட்சியின் திருமணத்திற்கு சீர்வரிசையுடன் புறப்பட்டு மதுரைக்கு வருகிறார். அவர் வருவதற்கு முன்னரே, அவரில்லாமலே மீனாட்சியின் திருமணம் நடந்து விடுகிறது. வைகையாற்றிலிறங்கிய அழகர், தானில்லாமல் தங்கையின் திருமணம் நடந்துவிட்ட செய்தியினையறிந்து, கோபத்துடன் கிழக்கே வண்டியூர் நோக்கித் திரும்பி விடுகிறார். அங்கு தன் காதலியான துலுக்க நாச்சியார் வீட்டில் அன்று இரவு தங்கிவிட்டு மலைக்குத் திரும்பி விடுகிறார். இதுவே அழகர் மதுரைக்கு வருவது குறித்து மக்களிடம் பரவலாக வழங்கிவரும் கதையாகும்.

இதுவே, அழகர் கோயிலில் நடைபெறும் சித்திரைத் திருவிழா. தமிழகத்தின் தென் மாவட்டங்களில் நடைபெறும் திருவிழாக்களில் மிகப்பெரிய திருவிழாவாகும். ஆண்டுதோறும் சித்திரை மாதம் வளர்பிறைப் பதினொன்றாம் நாளில் (சுக்கிரபட்ச ஏகாதசியில்) தொடங்கி ஒன்பது நாள் நடைபெறும் திருவிழாவாகும் இது. ஐந்தாம் திருநாள் சித்திரை நிறைமதி (பௌர்ணமி) நாளாகும்."

தமிழ்நாட்டில் பெருந்தெய்வக் கோயில்களில் அழகர் கோயில் சில தனித்த நடைமுறைகளையுடையது. அவற்றுள் மூன்று இக்கோயிலின் தலைவாசல் (ராஜகோபுர) வாசல். எப்பொழுதும் அடைக்கப்பட்டிருக்கும் சிறு தெய்வங்களின் ஒன்றான பதினெட்டாம் பதக் கருப்பசாமி என்ற தெய்வம் இக்கோபுரவாசலில் உறைகின்றது. எனவே, இங்கேயும் வாசல் 'பதினெட்டாம்படி வாசல்' என்றும் அழைக்கப்படுகிறது.

அழகர் கோயிலில் உள்ள பதினெட்டாம் படிக் கதவுகளுக்குச் சந்தனம், குங்குமம், கற்பூரம் முதலியவை பூசி, மாலை, புஷ்பம் முதலியவற்றால் அலங்கரித்துப் பூஜை செய்வார்கள். இப்பதினெட்டாம்படிக் கதவு பிரமோத்சவக் காலத்தில் (ஆடிமாதம்) சங்கரத்தாழ்வார் வருவதற்காக மட்டும் வருடம் ஒருமுறை திறக்கப்படும் சமயங்களில், ஏதாவது பிரமாணம் செய்ய விரும்புபவர்களுக்கு அது திறக்கப்படும். ஆகையால் அழகர்கோயில் பிரதான வாசலாகிய இப்பதினெட்டாம்படி வாசல் சாதாரணமாக மூடப்பட்டே இருக்கும். இதற்கு வடக்கே உள்ள வண்டி வாசல்தான் கோயிலுக்குள் போகும் வழி என்று ஸ்ரீ கள்ளழகர் கோயில் வரலாறு கூறுகிறது என்று இவர் விளக்குகிறார்.

தொடர்ந்து இவரே சொல்கிறார்: சந்தனம் சாத்தப்பெறும் கதவில் உறைகின்ற தெய்வமே பதினெட்டாம்படிக் கருப்பசாமியாகும். "இவருக்கு இங்கே உருவம் இல்லை. இங்கும் பதினெட்டாம் படிக் கோபுர வாசல்களையே இத்தெய்வமாக எண்ணிப் பூஜைகள் நடக்கும். மற்ற இடங்களில் இவர் கையில் ஒரு கொக்கியும், அரிவாளும், கதாயிதமும், ஈட்டி முதலியவையும் இருக்கும். காலில் செருப்பு அணிந்திருப்பார் இவரது தரிசனம் பயங்கரமாகவும், யுத்த பாவனையிலம் இருக்கும் என்று கோயில் வரலாறு கூறுகிறது.

'அழகர் கோயில்' பன்முகத் தன்மை கொண்ட அம்சங்களை உள்ளடக்கி ஒன்று சேர்ந்த ஒருமுகத் தன்மையை வெளிப்படுத்துகிறது. தன்னுள் அது உடன்பாடும், முரண்பாடும் இணைந்தும், வரலாற்றில் தொடர்ந்து, நிலைபெற்று இயங்கிவருகிறது. பல இலட்சக் கணக்கான மக்களை, ஆண்டுதோறும் நிகழும் சித்திரைத் திருவிழாவின்போது ஒருங்கிணைத்து மகிழ்ச்சியடையச் செய்கிறது.

மேலும், இதன் தனித்தன்மையை விளக்கும் விதத்தில் ஏராளமான பிற்சேர்க்கைகளை இணைத்து தெளிவாகவும், ஆழமாகவும் புரிந்து கொள்ள வழிவகைகளை இவர் இந்த ஆய்வின் வாயிலாக உணர்த்துகிறார்.

இலக்கியம், வழிபாடு, கல்வெட்டுக் குறிப்புகளை அழகர் அகவல், அழகம் பெருமாள் வண்ணம், அழகர் வர்ணிப்பு, வலையன்கதை வர்ணிப்பு, பதினெட்டாம் படிக் கருப்பன் உற்பத்தி வர்ணிப்பு, கருப்பன் பிறப்பு வளர்ப்பு வர்ணிப்பு, ராக்காயி வர்ணிப்பு, கருப்பசாமி சந்தனம் சாத்தும் வர்ணிப்பு, வெள்ளியக் குன்றம் பட்டயம், தொழில் அட்டவணை ஆட்ட விசேஷம்-கோடைத் திருநாள் சித்திரைப் பெருந்திருவிழா, வெள்ளையத்தாதர் வீட்டுப் பட்டய நகல் ஓலை, வேடமிட்டு வழிபடும் அடியவர்கள், சித்திரைத் திருவிழாவிற்கு மாட்டு வண்டி கட்டி வந்த அடியவர்களின் ஊர்கள்-ஒரு மாதிரி ஆய்வு போன்ற ஆதாரங்களையும், ஆவணங்களையும் செய்திகளையும் கலி ஆய்வுடன் கலந்து கடுமையான உழைப்புடனும், முயற்சியுடனும் இவர் 'அழகர் கோயில்' என்ற ஆய்வு நூலை அளித்துள்ளார்.

●

கட்டுரையாளர், எழுத்தாளர்

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 220/-

₹ 100/-




₹ 150/-




₹ 200/-




# "Co- existence with Cyborgs in Tobias S Buckell's *"Scar Tissue"*

**Ms. Jestila Mathew & Dr. S. J. Kala**

**Abstract:**

Artificial Intelligence (AI) is one of the most important innovations in the twenty-first century. The various products of AI have invaded all walks of life. The artefacts of AI have not only made the work of humans technologically easy, but also have enhanced their lives biologically. Robotics, a branch of AI has expanded in multiple levels with various advanced types of robots. The techniques of AI such as Affective Computing (AC) and Artificial Emotional Intelligence (AEI) have made robots resemble humans in appearance and also make them live a life like that of the humans with emotions and feelings. Thus, a new kind of life known as Artificial Life (AL) has now come into existence. Though there are many advantages of AI and AL, humans are also afraid of their extinction, as they fear that they might be replaced by AL everywhere. The article titled "Co- existence with Cyborgs in Tobias S. Buckell's "Scar Tissue"", attempts to unravel the fear of the humans and insists on the fact that in the near future humans have to shed off their fears and embrace cyborg selves promoting a peaceful co-existence of natural life with Alife.

**Key words:** Artificial Intelligence, Artificial companion, Robot, Alife, Artificial Emotional Intelligence, Prosthetics, "Scar Tissue", Tobias S Buckell.

Human beings have been evolving, ever since their origin. Dating back to the prehistoric times, humans have changed from being a four- legged being to a two- legged being; from being Neanderthal men to the upstraight human beings now. The process of transformation has been stimulated by the invention that has taken place at each and every point of time. The invention of the fire and the wheel, which is considered to be the first invention gave birth to various new inventions. The other kinds of discoveries such as evolution of language systems, tools for work, various forms of art, industries and machines have altered the human beings at the physical and mental levels. The present era is marked with the phenomenal invention of Internet, Artificial Intelligence and Cybernetics. This period has brought in numerous scientific advancements that make human beings live cozy and comfortable lives. All the electrical and electronic gadgets have paved way for humans to get rid off their physical labour and enter

into a world of virtual reality, where they can easily become what they imagine to be.

Scientists continue to invent many new forms of technologies based on Artificial Intelligence making machines serve all the humans. However, the primary position of humans, being masters of all the other organisms, has remained the same till now. In the beginning humans trained the animals to be of aid even in doing hardwork such as ploughing, lifting and carrying things. Later, humans owned the animals and other humans as slaves to work for them. Consequently, humans have reached the level of bossing over machines in all aspects. In the current scenario, though humans still remain in their prominent position, they have developed a new fear of being thrown out by the robots and the artificially created creatures. Though scientists on one side boast their God- like ability to produce scientific beings that resemble the natural creatures and humans, they are under the constant fear that their inventions might one day become their masters and make humans their slave. On the other hand, some posthumanists who combat these fears and apprehensions, instill hope in humanity that human extinction can be avoided, if moral posthumanism is followed.

Moral posthumanism refers to an ethical commitment towards creating an equitable future for all kinds of humans, non- humans and life forms and calls to have a shared predicament. Thus, moral posthumanism calls for a co-existence of humans along with all the other beings be it natural or scientific. The moral posthumanists also advocate that humans have to accept their position in the universe, that they are not God. They also invite the human beings to be called cyborgs and not as humans, because humans, in the current scenario are made to be too dependent on machines for each and every aspect of their lives and that they have attained the stage where they cannot live even a single minute without using any technology.

Literature, a distinct form of expression of humans about their lives, has always been reflecting and educating humans to analyse their situations and has been offering solutions to their problems. Among many literary works Sci-fi has emerged as a fascinating genre of literature during the late twentieth century. It always showcases both the positive and negative dimensions of futurity and gives a call for humans to discern and take up some action. Sci-fi deals with the themes of the new advancements in science and technology, space adventures and life on other planets. Some of the best known and renowned writers of technology-based sci-fi are Arthur C. Clarke, John Mc Carthy, Philip K. Dick, Calm Chace, Max Tegmark, H. G. Wells, Nick Bostrom Bernad Marr, Tobias S Buckell and Mike Kaput.

Cyberpunk is a new subgenre of sci-fi that is gaining momentum currently. Cyberpunk deals with the blurry future of human beings in the world governed by technology. It is mostly set against a background of a lawless society created by technology. Cyberpunk deals with the dystopian environment that may threaten the near future. Contrasting to it, there are certain cyberpunk stories offering positive ways of living in a world controlled by computers. Tobias S Buckell, is a sci-fi and cyberpunk writer who is known for addressing the positive advancements of technology through his works.

Tobias S Buckell was born in Grenada in 1979. He has published over sixty novels and fifty short stories. Most of his novels have been translated into nineteen different languages. His works have been nominated for the Hugo Award, Nebula Award, World Fantasy Award, and the Astounding Award for Best New Science Fiction Author. “Scar Tissue” is one of his recent and highly admired Sci-fi short stories. In the story Buckell portrays in detail, how Artificial Intelligence and its products can bring productive changes in the world, especially through robots. “Scar Tissue” begins with the protagonist, Cory, sharing with his friend, Charlie, about the change of his life because of his adopted robot. The story is set in a futuristic time, where a robot corporation named Advent Robotics, provides money to humans to train the robots at their homes for a certain period of time. The protagonist, a war veteran who has lost most of his life in the war field lives all alone after returning from the army. He is portrayed as a man who is uncomfortable with his prosthetic hand and leg fixed recently, that he had lost in the war.

The story features the flashback of the protagonist with the newly bought robot, that behaves like a baby in its pre-language and pre-memory stage. In the early stages, the protagonist finds it difficult to tame the robot and suffers from physical and psychological damage. For instance, the robot unknowingly smashes

the coffee table and breaks many articles. He feels that it is difficult to use the robot and that his work is doubled because he has an added responsibility of taking care of the robot like a dependent baby. The protagonist narrates how he had to carry the robot to the charging platform when it is not even aware of it. He also says that like a baby, the robot progresses to the mimicking stage. Later, the narrator also notices the changes in the robot and his behaviours. The robot also learns the emotions by imitating the actions of the protagonist like punching the wall in anger and so on.

The protagonist's friend then advises him about the various stages of robots' evolution and says that his life would change affirmingly. In the next stage, the robot, is named as Rob, which rapidly grows up and attains maturity like a human. It grows from an uncomprehending baby stage to an argumentative teenager. Besides handling the transformation processes of the robot, the protagonist has to deal with his Daddy's therapy and has to battle physical challenges that are part of his own physical rehabilitation. Later, in Rob's mature stage, the protagonist suffers from a heart attack and Rob helps him to recover from it. At the end of the story, the protagonist appears to share an inseparable bond with Robot. When the protagonist shared about his plan to get rid of the prosthetics and regrow his limbs, the robot thwarts it. Eventually, the protagonist understands the consequences of his original plan and matches Rob's subsequent scrimshaw on his prosthetics with tattoos on the skin above. Subsequently, following Rob's recommendation the protagonist receives the artificial heart. The present research article titled " Co-existence with Cyborg: in Tobias S Buckell's Scar Tissue " attempts to explore the invisible thread that connects humans with their inventions and discusses the possibilities of humans living a peaceful life with their technological inventions, as cyborgs.

Posthumanism is defined as a combination of humans and technology, where the dichotomies are hazy. The symbiosis of humans and technology has created a new form of humans called the cyborgs. William S Haney is his book expresses the fear about the future of technology as, "… one negative possibility is the irreversibly damaging or catastrophic effect it may have on human nature, particularly through invasive technologies." (Haney 2). He further asserts that this negative effect of technology must be attended to in the current stage and certainly there are possibilities to revoke the negative effects.

Katherine Hayles, a notable Philosopher of Posthumanism, propagates the positive sides of becoming a cyborg or a posthuman. She states that there are four main positives, namely; using a technology is not overpowering biology, but it is an inevitability of life like biology. The word 'consciousness' has been identified as a term that demarcates humans from other beings and has brought man the status of being the superior being. However, presently, machines are developed with consciousness and so they should also be considered as a life form. She also adds that the concept of cyborg is not an entirely new one but the process of prostheses and changing of the body is an ongoing process that starts even before a baby is born. Finally, she opines that,

In the posthuman, there are no essential differences or absolute demarcations between bodily existence and computer simulation, cybernetic mechanism and biological organism, robot teleology and human goals. (Hayles 3)

Hayles is of the view that technology of cyborgs aims at seamlessly connecting humans' lives with that of the intelligent machines.

The narrator of the story is apprehensive about the arrival of the new robot at home as well as his prosthetic arm and leg. His words express his fear that is similar to that of the one stated by Hanley. In the narrator's conversation with his friend, he expresses that he feels that he had committed a big mistake by choosing to raise a robot for the want of money:

"It's too late to back out now," Charlie says.

"I know." …

"Advent Robotics will pay me more money to raise it than I made at the warehouse, and I can keep focusing on recovery while doing it." (Scar Tissue 3)

When the narrator wants to give up the robot, his friend reminds him that his need for money is greater.

The term cyborg means a living being or a human whose powers or abilities are enhanced by using technology, especially through computer implants and mechanical body parts in place of the biological ones. Donna Harrway in her book, defines cyborg as "…a kind of dissembled and reassembled, postmodern collective and personal self." (Harraway 163). Being a staunch advocate of cyborgs, she pinpoints that in the contemporary era, one cannot define anything as pure or sacred, but everything is mixed or combined with something or the other to give better self, meaning, clarity and life. Through her work Cyborg Manifesto, calls everyone to be happy and welcome the new form of humans and enjoy the enhanced lives. Andy Clark in her work echoes the same idea and calls humans as 'a natural born cyborg' or 'human- technology symbionts'.

Tobias S Buckell's story also echoes the same kind of belief through the narrator who survives from the series of wars and lives with prosthetic arm and leg. In the beginning of his life with the artificial limbs he feels uneasy as well as feels like an invalid. He expresses his feelings as, "Regrowing your forearm and your leg. Like a damn lizard." (Scar Tissue 3). Later, when Charlie, the narrator's friend advises him to be patient until the prosthetics set in his body, the narrator calms down. He also becomes aware of the gift of prosthetics that helps him to do his work without getting help from others.

The narrator Cory thus becomes an example of a natural born cyborg in the first part of the story. This is evident when the narrator gets accustomed to his prosthetic arms and legs as well as when he agrees to have a prosthetic heart in the later part of the story. Before getting a prosthetic heart, he is angry at Rob's suggestion for it:

"What is that crap?"

"It's the medical clinic I'll be going to," you say. "I've been talking about this forever." They could take your DNA and grow a new heart for you in a nutrient bath. They can regrow whole legs and arms. (Scar Tissue 13)

After comprehending the benefits of technology, Cory agrees to have the DNA modification and at this stage not only feels comfortable with the prosthetics or the culturation of DNA but also turns out to be thankful to have the chance of having such technology. This is evident in the scene where Cory proudly puts his organic arm around his friend Charlie and feels happy about his rebirth.

Cory, in the second part of the story, becomes an example of human-technology symbionts, by raising the robot and developing a father-son relationship with the robot. Cory accepts the robot as his son and teaches the robot about each and every thing patiently. He also makes the robot call him dad and builds up their bond. The strengthened bond of theirs is reflected in the scene when Rob, the robot becomes anxious when Cory gets heart attack and calls for help:

"Dad!" Rob is scared. He triggers an automated call for medical help, his body strobes emergency blue as he shouts at the people around you to come help. But seeing a nervous robot scares them, and they stay away from you both, not sure what's happening. "Dad!" (Scar Tissue 11)

Rob, the robot cares for Cory akin to a human son who would care for his father. Rob cares for Cory after his surgery and protects him. Cory's life thus demonstrates a symbiosis of human and technology.

Harraway in her work, Cyborg Manifesto, brings out the positive effect of cyborg selves that it would clear off "…the dualisms such as self/other, mind/body, culture/nature" (177). She also foresees a kind of utopian future, where everyone would be treated equally and would live peacefully. The narrator's life in the story becomes an example of Harraway's words. The narrator before his self-acceptance of the prosthetics in him, feels dejected and thinks that everyone around him hates him. In the later part of the story, his mind accepts his bodily changes and he becomes confident enough to face the other people. This is evident in his perception about the way the lady at his apartment looked at him before and after his acceptance of life with the prosthetics.

Embracing the new cyberculture and becoming a cyborg includes the stage of accepting the

technological devices without any fear. The most important technological invention that is yet to be accepted is the robot. There are many types of robots that have come into existence. They are robots, chatbots, nanobots and many others. The robots have been installed with various capabilities to do various kinds of jobs. They are employed in education, food, security and other fields. Rudy Rucker in his book Software states,

Humans can't build a robot as smart as themselves. But, logically speaking, it is possible for such robots to exist. (Rucker 96)

Rucker's vision has now become true in the contemporary world with the invention of humanoids and Artificial Companions (AC)).

Artificial Intelligence has begun to instil emotions in the robots and make them live like humans. The instilling of Artificial Emotional Intelligence (AEI) in the robots is done through the processes of Supervised Learning, Unsupervised Learning and Reinforcement Learning. Through these processes, the robotic machines are made to behave in a more desired humane manner and are employed to be friends, siblings and caretakers for humans. Rob, the robot in the story "Scar Tissue" is an example of this new technology.

Supervised Learning is a type of learning where the inputs are manually fed into the machines by humans. The desired output is also checked from time to time and altered according to the needs. In this type of learning, the machines are always supervised by humans. In the story, Rob, in his first stage of learning undergoes supervised learning. The Advent Robotics Corporation provides money to supervise the learning and the behaviour of the robots during their pre-learning stage. Cory's friend explains to Cory about this stage of Rob as,

The pediabotic trainers at Advent told you the first few minutes could be chaotic. You just need to make sure that you remain within its eyesight. Once you do that, it starts to imprint on you. (Scar Tissue 3)

He further adds that after this supervised learning stage, the robot will become more like a tamed animal or a child.

The second stage of unsupervised learning takes place when the robots are allowed to learn on their own based on the basic codes that are inserted in them. The output of unsupervised learning is mostly autonomous in nature, where the machines or the robots act on their own without waiting for any signals. This stage of learning is often considered to be dangerous as scientists fear that the negative actions of the machines could be dangerous or deadly as used in the war robots. The unsupervised learning takes place in Rob, when Cory does not care about its presence. Based on its coded values Rob does its routine in a haphazard manner. This is evident through Rob's actions where it smashes the coffee table and bangs on the wall. Cory narrates that incident as,

It thrashes pieces of the box aside and mewls in confusion as it turns on. Instant regret grips you as you try to grab him, and one of his arms smashes the coffee table. Shattered glass bounces off the tile, and you let go of his unyielding artificial skin. (Scar Tissue 4)

Charlie explains about this disastrous behaviour of Rob to Cory that after undergoing this stage the robots themselves would develop a fear of breaking things and will cease from continuing it in the next stage.

Reinforcement learning is a type of learning where the machines learn things from their own mistakes. This stage of learning is seen in Rob when Cory teaches the robot indirectly through his actions. For example, Cory bangs on the wall and Rob does so and it learns that it should not bang on or break anything. Reinforcement learning is considered as the best type of learning to instill emotions in the machines. This is proven through Rob's character, when it learns about the different emotions and the associated facial expressions through Cory's expressions. It also gets the emotions of anger, sorrow and anxiety. This is shown in the scene where Cory teaches Rob how to identify if it needs charging and how to charge itself:

"OK," you laugh. "Now let's show you where your charging base is." Rob should have the instinct to go looking for one when he's running low. The next important step is to make sure he can find it. (Scar Tissue 6)

In yet another instance when Cory's face changes due to chest pain, Rob identifies it and expresses its anxiety and sorrow through its voice. The nurse at the hospital says, "…a robot can't cry, but it can be worried. Scared to lose the one person

it's known since it was born." (Scar Tissue 11). It is also observed in the story that Rob stays near Cory and takes care of him during the two whole weeks when he was admitted in the hospital.

Rodney A. Brooks in his book, New Approaches to Robotics, states that robots are designed in such a way that they would be helpful to the humans. He expresses that as the robots are made with the characteristics of intelligence and emergence, humans need not fear about the evils of robots. He defines the intelligence of robots as,

They [behavior-based robots] are observed to be intelligent—but the source of intelligence is not limited to just the computational engine. It also comes from the situation in the world, the signal transformations within the sensors, and the physical coupling of the robot with the world. (139)

He also adds that similar to intelligence is the characteristic of emergence. The robots take up stimulations from the surroundings and interactions provided to them by the humans.

Buckell's story also provides such a promise that the desired outcomes in a robot depends upon the inputs given by the humans. This is exhibited through the speaker in the Parental Laison Session as,

It immerses units in a full scope of experiences, which makes our product lines more randomized, encompassing a wide range of interactions with people from different walks of life. Our robots pass that knowledge around, and it gives them a service-oriented edge. (Scar Tissue 10)

The same is seen in Rob, when Cory exhibits his hatred towards Rob, it behaves in a negative way, but when Cory shows his care towards Rob by reiterating and educating it in a patient manner, Rob also does everything in a perfect way.

The research article has thus unearthed the fact that humans need not be wary of the technological advancements but use the advancements in a productive way. It is also found out from the analysis that embracing the new existence of humans in the posthuman world involves accepting oneself as a cyborg as well as accepting the machines as human companions. The effect of such an acceptance is shown in the end of the story, where Cory feels lonely without Rob, like a father being alone after his son has left for his living:

You put a hand to your chest. Under it is a new scar since a second heart surgery. A fresher scar. Under it is a cybernetic heart, a mechanical pump that whirs softly underneath. Faster, better, stronger. (Scar Tissue 16)

His way of co-existing with Rob, the robot, has left him with two scars, which are not painful but sweet. The first scar is the scar of the surgery of his prosthetic heart and the second is the scar of love left behind by Rob.

The research article echoes Neda Atanasoski's words "…Technological enchantment seeks to overcome a sense of disappointment in the limitations of the human as a biological being embedded in a rational-secular-scientific society." (19). It is found out from the anlaysis that any new invention is the brain-child of humans. Hence, if the inventions are properly reviewed and designed for the positive benefits of humans, technology can be a boon to everyone.

**Works Cited:**


- Atanasoski, Neda & Kalindi Vora. Surrogate Humanity: Race, Robots and the Politics of Technological Future. Duke University Press, 2019.
- Brooks, Rodney A, "New Approaches to Robotics," Cambrian Intelligence: The Early History of the New AI, MIT Press, 1999.
- Buckell, Tobias S. "Scar Tissue". Future Tense Fiction. Arizona State University Press, 2020.
- Haney, William S. Cyberculture, Cyborgs and Science Fiction: Consciousness and the Posthuman, Rodopi,2006.
- Harraway, Donna. Cyborg Manifesto. University of Minnesota Press, 1985.
- Hayles, Katherine. How We Became Posthuman. University of Chicago Press, 1999.
- Rucker, Rudy. Software. Prime Books, 2020.


●


**Ms. Jestila Mathew**
Research Scholar, Fatima College (Autonomous),
Madurai, Affiliated to Madurai Kamaraj University

**Dr. S. J. Kala**
Associate Professor of English & Dean of Research, Fatima College
(Autonomous), Madurai,
Affiliated to Madurai Kamaraj University

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 220/-




₹ 365/-




₹ 345/-




₹ 310/-




₹ 450/-




₹ 680/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in


Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam**
at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.,**
16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No.TN/CH(C)/601/2022-2024. WPP No: TN/PMG(CCR)WPP-673/2022-2024
Date of publication 1-7th of every month Posted at Egmore RMS / 1 Patrika Channel
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.


**தமிழ்நாடு அரசு**

## மக்கள் சிந்தனைப் பேரவை

இணைந்து நடத்தும்

# ஈரோடு புத்தகத் திருவிழா - 2024

நாள் : ஆகஸ்ட் 02 முதல் 13 வரை

நேரம் : காலை 11.00 மணிமுதல் இரவு 9.30 மணிவரை

இடம் : சிக்கய்ய நாயக்கர் கல்லூரி மைதானம், ஈரோடு

- தலைசிறந்த தமிழ் மற்றும் ஆங்கிலப் புத்தகப் பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் பங்கேற்பு...
- வெளி நாடுகளிலிருந்தும் வட மாநிலங்களிலிருந்தும் புகழ்மிக்க ஆங்கிலநூல் பதிப்பாளர்கள் வருகை...
- கோடிக்கணக்கான புத்தகங்கள் ஒரே இடத்தில் அணிவகுக்கும் அற்புதக்காட்சி !
- தினசரி மாலை 6.00 மணிக்கு அறிஞர்களின் சிறப்புச் சொற்பொழிவு...

**அறிவுச் செல்வத்தை அள்ளிச் செல்ல வாரீர் !**